www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 10/00
දිනමුරසු වාරමලර්
ஜனவரி.22-28,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NA... Y முரசு 86



## எக்ஸ்ரே துப்பாக்கிகள் இனித் தூங்குமா? ரிப்போர்ட்

## கொடியது கண்டோம் அசுர யுத்தம்! இனியது என்போம் என்றும் நமக்கு சமாதானம்!

## பாப்பரசருக்கு எதிராகச் சதி?

பரபரப்பான தகவல்

## அரசியல் தொடர்

## புலிகள் நடத்திய அதிரடிக் கொள்ளை

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## பாப்பரசருக்கு கௌரவம்

அன்புடன் உங்களுக்கு,
வணக்கம்.
இவ்வார முரசின் முகப்பு
பாப்பரசரை
கௌரவிக்கும் வகையில்
அமைந்திருக்கிறது.

மத வேறுபாடுகள்
மனித பண்பாடுகளை பந்தாடக்கூடாது.
நம் நாட்டுக்கு-
உலகெங்கும் மதிக்கப்படும் ஒரு தலைவர்
வருவதும், வரவேற்கப்படும் பெருமை.

நீண்டகால யுத்தத்தால்
கண்ணீரும்-இரத்தமும்
கலங்கிச் சேறாகிய நம்நாட்டுக்கு
வணக்கத்திற்குரிய ஒருவர்
வருவதாக ஒப்புக்கொண்டதே
சிறப்பான ஒரு விடயம்!

பாப்பரசர் குறிப்பிட்ட ஒரு
மதப் பிரிவினரின் தலைவராக இருக்கலாம்.
ஆனால், அவர் பார் புகழ் பெற்ற ஒருவர்.

அவர் தானாக வரவில்லை.
அழைப்பு விடுக்கப்பட்டது; அதனை
அவர் ஏற்றுக்கொண்டார்.

அழைத்தது யார் என்பதல்ல பிரச்சனை.
அழைப்பு விடுக்கப்பட்டது
நம் நாட்டின் சார்பாக!

அழைத்துவிட்டு,
அழைப்பை அங்கீகரித்தவரை
எதிர்த்துப் பேசுவது
யாருக்குச் சிறுமை?
நமக்கல்லவா? நம் நாட்டுக்கல்லவா?
எதிர்ப்போர் எண்ணிப்பார்க்க வேண்டும்!

விரும்பத்தகாத சில சம்பவங்கள்-
மத வேறுபாடுகள் காரணமாக,
ஆங்காங்கே நடந்து முடிந்துள்ளன.

வேகமாக வளர்கிறது வெளியுலகம்.
குறுகிய எல்லைகள்-அதற்கு வேலிகள்-
வெளியே வருவதற்கு
ஒரு குறிப்பிட்ட பகுதியினர்
இன்னமும் தங்களைத் தயார்படுத்தவில்லை
என்பது மட்டும் தெரிகிறது.

மத நம்பிக்கைகள்
மக்களது உணர்வுகள் சம்பந்தப்பட்டவை.
மதப் பிரசாரங்கள்
மக்களின் உணர்வுகளை புண்படுத்தாமல்
பண்படுத்தும் நோக்கில் அமையவேண்டும்.

ஒரு கருத்து நமக்கு பிடிக்கவில்லை
என்றால், ஏன் பிடிக்கவில்லை என்று
மாற்றுக் கருத்தால் பதில் சொல்லலாம்.
மாறாக, கருத்தைச் சொல்பவரின்
கழுத்தை இறுக்க நினைக்கக்கூடாது.

ஒருவர் கௌரவத்தை மற்றவர் மதித்து
கைகுலுக்கிக்கொண்டு
கருத்தை கருத்தால் சந்திக்கும்
நாகரீக நடைமுறையே
மாறிவரும் உலகிற்குத் தேவையானது.

"வாருங்கள், உங்கள் கருத்தையும்
எடுத்துச் சொல்லுங்கள்.
நாம் சொல்லும் கருத்துக்களையும்
உங்கள் சிந்தனையில்
எடுத்துக்கொள்ளுங்கள்."
இதுதான் தன்னம்பிக்கையின்
தளராத வெளிப்பாடாக அமையும்!

பாப்பரசரின் கருத்துக்களோடு
நமக்கு உடன்பாடு இருக்கலாம்;
இல்லாமலும் போகலாம்.
ஆனால் பல கோடி மக்கள்
நம்புகின்ற ஒரு மதத்தலைவர்
என்ற வகையில்
அந்த மக்களுக்கு நாம்
தருகின்ற மதிப்பின் வெளிப்பாடாகவே
பாப்பரசரைக்-
கௌரவிப்பதும் அமைகிறது.

□□

மட்டக்களப்பு சிறையில் இருந்து
25 தமிழ் இளைஞர்கள்
விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குற்றம் எதுவும் சுமத்தப்படாமல்
நீண்டநாட்கள்
தடுத்து வைத்தல் எத்தனை கொடுமை!

இப்போதுகூட-
உண்ணாவிரதம் இருந்துதான்
சிறைக் கதவை திறக்க வைத்திருக்கிறார்கள்.

எதையுமே-போராடித்தான்
பெறவேண்டும் என்ற நிலையை
ஏற்படுத்தும் செயற்பாடுகள்
இனியும் தொடரத்தான் வேண்டுமா?

சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள
குற்றமற்றவர்களை
உடனடியாக விடுதலை செய்ய
நீதி அமைச்சர்-
எப்போதோ உறுதி மொழி
தந்திருந்தார்! வரவேற்றோம்!
உடனடி நடவடிக்கையிலும்
இறங்கியிருந்தால் மகிழ்ந்திருப்போம்!

இனிமேலாவது-
துரித நடவடிக்கைகள்
எடுக்கப்படவேண்டும் என்று
வலியுறுத்த விரும்புகிறோம்.

தேவையானவற்றை தேவையானபோது
செய்யத் தவறுவதே
தீவிரவாதத்திற்கு-
கொம்பு சீவி விடுவதாக அமைகிறது.

நிர்ப்பந்தித்துத்தான்
எதுவும் நடக்கும் என்றில்லாமல்
நியாயமாக செய்யப்படவேண்டியவற்றை
அதிகாரத்தில் இருப்பவர்கள்
துரித கதியில் நிறைவேற்றுவது
நிச்சயம் நல்ல பலன் கொடுக்கும்.

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# மீட்பின் நற்செய்தி

"கர்த்தருக்கு வழியை செவ்வை பண்ணுங்கள்" (யோ 1:23)

யோவானுடைய கூக்குரல் வனாந்தரங்களிலே கேட்கக் கூடியதாக இருந்தது.- அந்நாளிலே ஆதாம் ஏவாளின் இறை வார்த்தை மீறப்பட்ட செயலினால் உலகம் பாவத்தில் சூழ்ந்திருந்தது. உலகில் எங்குமே பாவம் நிறைந்திருந்தது. இறைவனும் தம் மக்களமீது கொண்ட அன்பினால் அவர்கள் மீட்பு பெறவேண்டும்- மனந் திருந்த வேண்டும் என்பதற்காக எத்தனையோ தீர்க்கதரிசிகளையும் அனுப்பி வைத்தார். அவர்களை அவர்களோ கண்டுகொள்ளவில்லை. இறுதியில் தம் குமாரனையே உலக மக்களின் மீட்புக்காக அனுப்பிவைக்க திருவுளம் கொண்டார். தம் மகனின் பிறப்பு பற்றி முன்னரே வந்த தீர்க்கதரிசிகளின் வாயிலாக சொல்லியும் வைத்தார்.

"இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள். அவருக்கு இமானுவேல் என்று பெயரிடுவார்கள்." இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம் (மத்தே 1:23,24)

மேலும், யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் (மத் 2:6) இவ்வாறாக இறைமகன் கிறிஸ்துவின் வருகை இவ்வுலகின் பாவங்களை மீட்பதற்கே உற்பவம் ஆனார். கர்த்தரின் இரண்டாம் வருகையை மகிழ்வுடன் எதிர்பார்த்திருக்கும் நாம் அவருடைய முதலாம் வருகையையும் வாழ்வையும் நினைவுகூர்ந்து அவரின் வருகைக்காக நமது உள்ளங்களை செவ்வை பண்ணவேண்டாமா? அவருக்கு வழியை ஆயத்தம் பண்ணும்போது நம் ஒவ்வொருவருக்குள்ளும் இறைவன்- இறைமகன்- கிறிஸ்து பிறப்பார். நாமும் மீட்பு பெறுவோம்.

எல்.கே.நாதன்-மோதர.

# ஆன்மீகம்



## அன்றாட வாழ்க்கையில்...!

ஒரு மனிதனுக்குத் துன்பம் ஏற்படும்போது அவனைச் சுற்றியிருப்போர் என்ன செய்கின்றனர்? சிலர் அவன்மீது இரக்கப்பட்டு அவனுக்கு ஏதேனும் உதவி செய்ய முடியுமா? என எண்ணுவர். சிலர் "அல்லாஹ் இம்மாதிரித் துன்பங்களிலிருந்து நம்மைக் காப்பாற்றினானே!" என்று ஆறுதல் அடைவார்கள். சிலர் "அவனுக்கு இதுவும் வேண்டும், இன்னும் வேண்டும்" என்று சொல்லிப் பிறர் துன்பத்திலே இன்பம் காண முற்படுவார்கள். முதற் பிரிவினர் உத்தமர்கள். இரண்டாம் பிரிவினர் மத்திமர்கள். மூன்றாம் வகையினர் அதமர்கள்.

பிறர் துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சியடைவோர் "அதுபோன்ற துன்பம் இவ்வுலகில் நமக்கும் வரலாம்," என்பதை மறந்துவிடுகிறார்கள். இதனால்தான்,

"உங்களுடைய சகோதரன் துன்பங்களில் சிக்கிக் கஷ்டப்படும்போது, அதனைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைய வேண்டாம். ஏனெனில், அல்லாஹ் அவனுக்கு அருள் செய்து, உங்களை சோதிக்கவும்கூடும்!" என்று பெருமானார் (ஸல்) அவர்கள் எச்சரித்திருப்பது, நம்முடைய அன்றாட வாழ்க்கைக்கு ஏற்ற அருளுரையாக அமைந்திருப்பது அல்லவா?

மௌலவி அனீஸ் எம். ஷாகிர்-கும்புக்கந்துறை.

# கவிதைப்போட்டி இல-82

### வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும் வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

## பரிசுக்குரிய கவிதை

### வந்துதிக்கும் நாளெப்போ?

மனிதம் மலர்ந்திடணும்!
வலி நீங்கி நீயும்
மண்ணில் தவழ்ந்திடணும்!!
குருதி பெருகாமல்-சமாதானச்
சுருதி இசைப்பதற்கு-நீ
ஓர் வசந்தப் புறாவாக
வந்துதிக்கும் நாளெப்போ?

திருமதி.க.சுசிலா
மட்டக்களப்பு.

### வெள்ளைப் புறாவே நீ நலிய விதவைப் புறாக்கள் மலிந்தனரே!

அனர்த்தம் அனைத்தும் விழித்திங்கு.
அமைதி தனையே அயர்த்தியதால்,
அதுவே உனது சிறகொடித்து,
சிறையில் எங்கோ அடைத்ததுவோ?
வெள்ளைப் புறாவே! நீ நலிய
வெண்ணுடையில்
விதவைப் புறாக்கள் மலிந்தனரே!
எம் மண்மீது.

நிஜந்திக்கா கனகசிங்கம்- மட்டக்களப்பு.



## வியக்கப்பட்டவை

### அர்த்தமற்ற சடங்கு

அர்த்தமற்ற சடங்கு இது
அமைதிக் கிது உதவாது
பறக்க விடும் கரங்களிலே
பாவக் கறை தீருமட்டும்.

எஸ்.விக்னேஸ்வரன்
கல்முனை.

### சமாதானத்தூது

ஐயாவின் ஆட்சியில்
அடைபட்ட
வென்புறா
அம்மாவின் ஆட்சியில்
சமாதானத் தூது
போகின்றதோ?

மாங்கேணி செ.சுகுமார்.

### ஏன் இன்னும் தாமதம்?

இனிய சமாதானமே
ஏனிந்த அவசரம்
எழுந்து பறந்தோட
இன்னுமா எத்தனம்
இந்நாட்டில் இறங்கிவர
ஏனின்னும் தாமதம்?

கா.யோகேந்திரன்
ஆரையம்பதி-2.

### புகழ் அடைவாய் புவியிலே

புண்ணிய புத்தாண்டில்
புனிதமாய் புறப்பட்டு
புதுத் தீர்வை நீ காட்டி
புகழடைவாய் புவியிலே

பொகவந்தலாவ-கோணஸ்வரன்.

### சந்தோஷ சிலிர்ப்போ

சிலிர்த்து நிற்கும் சின்ன புறாவே
திறந்து விட்ட பாதையினூடே
பறந்துவர ஆயத்தமா?

ம.லக்சினி-மட்டக்களப்பு.

### விடிவு வேண்டும்

துப்பாக்கிச் சேவலின்
கூவலில் விடிகின்ற
துயரப் பொழுதுகளில்
என்
தேசத் திருமாதா
விழித்தபடி
தூங்குகிறாள்.
வெண் புறாவே..!
சிறகு-
விரித்து நீ
எழுவதால்
விடியாதா நம் தேசம்?

திருமதி.ஷியானி நளீர்-
அக்குறணை.

### அறிவித்தல்

படத்திலுள்ள
சமாதான பறவையை
நீண்டகாலமாக
காணவில்லை!
கண்டுபிடித்தவர்கள்
அண்மையிலுள்ள
ஜனநாயகவாதிகளுக்கு
அறியத்தரவும்.

புத்தளம்-பொற்கவி.

### அழுத்தங்கள்

ஆயுத அழுத்தங்கள்
அகிலத்தில்-உன்னை
எழுந்து பறந்திட
விட்டிடுமோ_

ஜி.அருளேந்திரன்
திருமலை.

### வழி பிறக்கட்டும்

தை பிறந்தால்
வழி பிறக்கும்.
தரணி எங்கும்
தான் சிறக்கும்.
உன் வரவை
எதிர்பார்க்கும்
இவன்
மனிதன்

செ.ஆனந்தராஜா
பதுளை.

### அறியாமை

போர்ப் பந்தம் ஏற்றி, உயிர் பலியிட்டு
ஆயுத வனங்களில்
என்னைத் தேடுகிறார்கள்.
மானுட நேயத்துக்குள் மாத்திரமே
கூடுகட்டி நான் வாழ்வது
தெரியாமல்....!

ஷர்மி-கண்டி.

### சின்னம்

எங்கள் சின்னம்
புறா சின்னம்
போடுங்களம்மா
ஒட்டு
சமாதானத்துக்காக


கொன்சி கிளன்சி ரொஷான்
கொழும்பு-13.

# கவிதைப் போட்டி இல-86



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.01.1995.*

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 86
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.



### தாய்க்கு பாராட்டு

அன்பின் முரசே!

உன் தரிசனம் வியாழக்கிழமையே கிடைப்பதில் சந்தோசம்தான்! நீ சுமந்துவரும் அத்தனை ஆக்கங்களும் அருமையானவை. அதிலும் குறிப்பாக அரசியல் அலசலில் உனக்கு நிகர் நீயே! தாய் நாவலைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

தஸ்கர ராஸீக்-கொழும்பு-12.

□□

எந்தன் நெஞ்சில் நீங்காத தென்றல் முரசே,

தேன்போன்ற உனது ஆக்கங்கள் அனைத்தும் எங்கள் இதயங்களை கவர்ந்து விட்டன. மேலும் சிறப்பு பெற்று விளங்க எங்கள் வாழ்த்துக்கள்.

ஆர்.இந்திராணி-எம்.பூங்கோதை-பதுளை.

□□

ரகுநாதனால் மொழிபெயர்த்து வழங்கும் 'தாய்' சூப்பர். வாசகர் நெஞ்சங்களை அறிந்து அதற்கேற்ப நிகழ்ச்சிகளை சுவைப்பட வாரி வழங்கும் முரசே, உனக்கு முத்தங்கள்!

இரத்தினசபாபதி வசந்தி-பொரலங்கட.

எனது அன்பின் முரசே, நீ சுமந்து வரும் ஒவ்வொரு அம்சமும் இனியவையே! உலக அதிசயம், தேன் கிண்ணம், பாப்பா முரசு, சினி விசிட்- அப்பப்பா சொல்லவே முடியாது. அதோடு ரசிகன் தரும் இலக்கிய நயத்தை பார்த்தால் நானும் ஒரு கவிஞனாகி விடுவேன்போல் இருக்கிறது. முரசே முதலில் உன் பொஸ்ஸிடம் சொல்லி உனக்கு திருஷ்டி சுத்தி போட சொல். என் கண்ணே பட்டுவிடும்போல் இருக்கிறது.

செ.விவேந்திரா-பூண்டுலோயா.

□□

வலம் வரும் முரசே!
பக்கத்திற்கு பக்கம் விறுவிறுப்பு,
கவர்ச்சிகரமான வடிவமைப்பு,
ஆக்கங்கள் நாவிற்கு சுறுசுறுப்பு.
மென்மேலும் தருவாய் பல் சிறப்பு.
தமிழ் பேசும் மக்களின் வரவேற்பு
எங்கள் மனதினில் நிலைகொண்ட
தினமுரசு.

மல்லிகா,புனிதா, ரஜனி, சுரேந்தர்,
ஜனனி-கொழும்பு-12.

அதென்னவோ
முரசே, உன்
அண்மிப்பே...
அகிலத்து
ஆச்சரியங்களையும்,
அரசியல்
அவலங்களையும்
அனைத்து
அம்சங்களையும்
அதிரடியாய்த்
தருகிறது.

ஸ்ரீவரணி.

# யார் குழந்தை யார்?



கட்டிலில் படுத்திருக்கும் குழந்தை இன்று கொழு கொழுவென்று வளர்ந்து பெரிய நட்சத்திரமாகிவிட்டது. யார் என்று ஊகிக்க முடிகிறதா? முயன்று, பின் பக்கம் 13ற்கு செல்லுங்கள்.

# அரசியல் பேச்சுக்கு புலிகள் விதிக்கும் நிபந்தனைகள்!

# விட்டுக்கொடுத்து பேச்சைத் தொடர ஜனாதிபதி முடிவு!

### அரசு தயார்

புலிகளுடன் பேச்சைத் தொடர சில விட்டுக்கொடுப்புக்களை செய்ய ஜனாதிபதி சந்திரிகா தயாராக இருக்கிறார் என்று கூறப்படுகிறது.

பொருளாதார தடையை மேலும் தளர்த்த ஜனாதிபதி முன்வந்துள்ளார்.

கடல் வலயத் தடையிலும் மாற்றங்களை செய்ய அரசு முன்வந்திருக்கிறது.

அரசியல் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க புலிகள் அவசரப் பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும் என்று கோரி வருகிறார்கள்.

இதனால் பேச்சுவார்த்தையைத் தொடர வேண்டுமானால் இரு தரப்பில் ஒரு தரப்பாவது தனது பிடிவாதத்தை விட்டுக்கொடுத்தால்தான் நிலைமை சுமுகமாகும்.

புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் தமது நிலைப்பாட்டிலிருந்து சற்றும் இறங்கிவரத் தயாராக இல்லை.

### முன் நிபந்தனை

நிபந்தனைகள் என்று வெளிப்படையாக சொல்லாவிட்டாலும் அவசரப் பிரச்சனைகள் முதலில் தீர்க்கப்பட வேண்டும் என்று புலிகள் கோருவது அரசியல் பேச்சுவார்த்தைக்கான நிபந்தனை என்றே கொள்ளப்பட வேண்டும்.

அரசியல் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துவிடவேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது.

புலிகளது நிபந்தனைகளை நிறைவேற்றுவது மூலம் அதற்கான சூழலை தோற்றுவிக்க அரசாங்கம் ஆர்வம் காட்டுகிறது.

முழுமையான பொருளாதார தடை நீக்கம் என்பதை புலிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன்படக்கூடிய பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்கள் அனைத்துக்கும் உள்ள தடையை விலக்க ஜனாதிபதி சந்திரிக்கா முன்வந்துள்ளார்.

கடல் வலயத்தடையும் தளர்த்தப்பட்டால் புலிகள் வலியுறுத்தும் இரண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுவிடும்.

### பாதைத் திறப்பு

போக்குவரத்து பாதை திறப்பு, அகதிகள் மீளக் குடியேற்றம் என்னும் இரண்டு விடயங்களில்தான் சிக்கல் இருக்கிறது.

இந்த இரண்டு விடயங்களிலும் அரசாங்கம் நெருக்கடிக்கு உள்ளாகும் விதமான நிபந்தனைகளை புலிகள் விதித்துள்ளார்கள்.

### அரசியல் நிருபர்

பூநகரிப்பாதை திறப்புக்கு அங்குள்ள இராணுவ முகாம் முற்றாக அகற்றப்பட வேண்டும் என்பது புலிகளது நிபந்தனை.

பூநகரி இராணுவ முகாமை அமைப்பதற்கு படைத்தரப்பு பல உயிரிழப்புக்களை சந்தித்தது.

பூநகரி முகாமை அகற்றுவதற்காக புலிகளும் பல உயிர்களை பலிகொடுத்துள்ளார்கள்.

இந்த நிலையில் யார் விட்டுக்கொடுப்பது என்பதே முக்கிய பிரச்சனை.

புலிகள் தமது நிலைப்பாட்டில் விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்பது தெளிவாகிவிட்டது.

அரசாங்கமும் தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தால் அரசியல் பேச்சை ஆரம்பிக்க புலிகள் முன்வரமாட்டார்கள்.

### இன்றுபோய் நாளை வா

பேச்சு முறியும் நிலைகூட ஏற்படலாம். மூன்றாம் கட்டப் பேச்சு அதனைத்தான் தெளிவுபடுத்தியிருக்கிறது.

தமது அவசர பிரச்சனை பற்றிய நிபந்தனைகளுக்கு உறுதியான முடிவோடு செல்லாத அரச தூதுக்குழுவை 'இன்று போய் நாளை வாருங்கள்' என்ற விதமாக புலிகள் அனுப்பி வைத்துள்ளனர்.

அடுத்த கட்டப் பேச்சுக்கான திகதியைக்கூட தீர்மானிக்க முடியாதவகையில் மூன்றாம் கட்ட பேச்சில் நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

அகதிகள் மீளக் குடியேறும் விடயத்தில் புலிகள் முன்வைக்கும் நிபந்தனையும் சிக்கலானது.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இருந்து படைகள் வெளியேறினால்தான் அகதிகள் தமது சொந்தப் பகுதிகளுக்கு சென்று குடியேறுவார்கள் என்பதுதான் புலிகளது கோரிக்கை.

இந்தக் கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுவதிலும் அரசுக்கு பிரச்சனைகள் உள்ளன.

புலிகள் அரசியல் தீர்வுக்கு முன்வருவார்கள் என்பதை உறுதி செய்யாமல் படையினரின் பிடியைத் தளர்த்துவது புத்திசாலித்தனமல்ல என்றே அரச தரப்பினர் நினைக்கின்றனர்.

### புலிகளது நிலை

மூன்றாம் கட்டப் பேச்சை அடுத்து 15.01.95இல் வெளியான மூன்று யாழ் பத்திரிகைகளிலும் மூன்றாம் கட்டப் பேச்சு குறித்து அதிருப்தியான கருத்துக்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது.

"முடிவு எதுவும் எட்டப்படாமல் 3ம் கட்டப் பேச்சு" இது உதயன் பத்திரிகைச் செய்தி.

புலிகளது ஈழநாதம் பத்திரிகை தனது தலைப்புச் செய்தியில், "மூன்றாம் கட்டப் பேச்சு எதிர்பார்த்த திருப்தியை தர வில்லை" என்று தெரிவித்தது.

'ஈழநாடு' பத்திரிகைச் செய்தி, 3ம் கட்டப் பேச்சு மக்களுக்கு நன்மை தரவில்லை. இதுவரை நடைபெற்ற பேச்சுகளாலும் எந்த முன்னேற்றமும் இல்லை" என்று தமிழ் செல்வன் கூறியதாக முக்கியத்துவமளித்திருந்தது.

### அரசுக்குத் தெரியும்

அரசாங்கத்தால் அவசரப் பிரச்சனைகளைகூடத் தீர்க்க முடியவில்லை என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தவே புலிகள் நினைக்கிறார்கள்.

இதனை அரசும் உணர்ந்திருப்பதாகவே தெரிகிறது. அதனால்தான் தனது நம்பகத்தன்மையை மக்களுக்கு தெரியப்படுத்தும் வகையில் விட்டுக்கொடுப்புக்களை செய்ய அரசு தீர்மானித்துள்ளது என்று அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அரசின் விட்டுக்கொடுத்து செயற்படும் முடிவை புலிகள் எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றனர் என்பது விரைவில் தெரியும்.

# "பண்டா-செல்வா ஒப்பந்தம் திருப்தி தராது!

# வடக்கு-கிழக்கு இணைந்த சமஷ்டியைப் பரிசீலிப்போம்"

## கிட்டு நினைவு தினக் கூட்டத்தில் புலிகளின் ஆலோசகர்

இந்திய கடற்பரப்பில் வைத்து 1993ம் ஆண்டு 16ம் திகதி புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கிட்டு உட்பட பத்து புலிகள் பலியானார்கள்.

அவர்களின் நினைவுதினக் கூட்டம் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் உள்ள தீருவில் திடலில் 16.1.95 அன்று நடைபெற்றது.

இந்தியாவின் சதியால் கொல்லப்பட்டவர்கள் என்பதை நினைவூட்டும் வகையில் நினைவுதின உரைகளும், அஞ்சலி அறிக்கைகளும் அமைந்திருந்தன.

நினைவுதினக் கூட்டத்தில் புலிகளது அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் உரையாற்றினார்.

பண்டா-செல்வா ஒப்பந்தம் இனப் பிரச்சனைக்கான தீர்வுக்கு அடிப்படையாக அமையும் என்று ஜனாதிபதி சந்திரிக்கா கூறியிருந்தார்.

இது தொடர்பாக புலிகள் உடனடியாக எதுவும் தெரிவிக்கவில்லை.

தீருவில் திடல் கூட்டத்தில் ஜனாதிபதியின் கருத்துத் தொடர்பாக அன்ரன் பாலசிங்கம் தமது இயக்க நிலைப்பாட்டை தெரிவித்தார்.

அங்கு தெரிவித்ததாவது: "பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையிலான தீர்வுத் திட்டம் தமிழர்களுக்குத் திருப்தி தரப்போவதில்லை.

வடக்கு-கிழக்கு இணைந்ததாகவுள்ள தன்னாட்சியுடைய சமஷ்டி கட்டமைப்பு முறையை உள்ளடக்கிய தீர்வை அரசு முன்வைக்கவேண்டும். அவ்வாறு முன்வைத்தால் அதனைப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம்.

இராணுவ அழுத்தத்திற்கு பயந்து இனப்பிரச்னை விவகாரத்தில் சந்திரிக்கா அரசு தவறு செய்யக்கூடாது.

இராணுவ அழுத்தத்துக்கு பணிந்தும், இராணுவ உபாயங்களை கைவிடாமலும் சிங்கள பேரினவாதிகளுக்கு அடிபணிந்தும் சிறிலங்கா ஜனாதிபதி தவறு செய்வாரேயானால் அது அவர் செய்யும் வரலாற்று தவறாக அமையும்."

என்றும் திரு.அன்ரன் பாலசிங்கம் தனது உரையில் தெரிவித்தார்.

## இலங்கைப் பெண்ணுக்கு மரண தண்டனை!

(துபாய் நிருபர்)

துபாயில் பணிப்பெண்ணாக வேலை செய்தவர் இலங்கையைச் சேர்ந்த எஸ்.வை.மர்லியா.

இவர் கொழும்பை பிறப்பிடமாகக் கொண்டவர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 17ம் திகதி மர்லியா பணியாற்றிய வீட்டில் இருந்த நான்கு வயது குழந்தை கொலைசெய்யப்பட்டு சிறிய பெட்டி ஒன்றில் வைத்து வீட்டின் முன்பாக உள்ள குப்பைத் தொட்டியில் வீசப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பணிப்பெண் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி கடந்த ஞாயிறு அன்று பணிப்பெண் எஸ்.வை.மர்லியாவுக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

## மன்னாரில் புலிகளின் நீதிமன்றம்

14.01.95 அன்று மன்னார் மாவட்டத்திலுள்ள செம்மண்தீவில் "தமிழீழ மாவட்ட நீதிமன்றம்" புலிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போர் இடைநிறுத்தத்தின் பின்னர் மன்னாரில் புலிகளது காவல்துறை அலுவலகம் ஏற்கனவே திறந்துவைக்கப்பட்டிருந்தது.

அதனையடுத்து 'தமிழீழ நீதிமன்றம்' ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

தமது சிவில் நிர்வாக அமைப்புக்களை பரவலாக்குவதில் புலிகள் தொடர்ந்தும் தீவிரமாக உள்ளனர்.

## திருமலையில் கையெழுத்து வேட்டை!

## தங்காவின் பதவியைக் காக்க நடவடிக்கை!

(திருமலை நிருபர்)

திருகோணமலை த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர் திரு.அ.தங்கத்துரையின் பதவி விலகல் சம்மந்தமாக ஜனவரி 03.14.95 தினமுரசு இதழில் வெளிவந்த செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரகசியமாகப் பேணப்பட்டு வந்த ஒப்பந்தம் வெளியே தெரிய வந்ததால் வெகுண்டெழுந்த அவரது நெருங்கிய உறவினர்கள் சிலர் தங்கத்துரையே தொடர்ந்தும் பதவி வகிக்க வேண்டுமெனக் கோரி கட்சித் தலைமைப்பீடத்துக்கு அனுப்புவதற்கு கையெழுத்து வேட்டையில் இறங்கியுள்ளனர்.

திரு.அ.தங்கத்துரையின் வீட்டுக்கு வேலைவாய்ப்பு போன்ற விடயங்களுக்காகச் செல்லும் இளைஞர் யுவதிகளிடம் மேற்படி கையெழுத்தை வாங்குவதில் அவரது நெருங்கிய உறவினர் ஒருவர் தீவிரமாக இருப்பதாகவும் அறியப்படுகிறது. ஆயினும் அவர்கள் கையெழுத்து வைப்பதில் தயக்கம் காட்டுவதாகவும் அதன் காரணமாக கையெழுத்துக்கள் பெரும்பாலும் போலியானதாக அமையலாம் எனவும் கூறப்படுகிறது.

கட்சித் தலைமைப் பீடத்துக்கு, விலாசமிடப்பட்டு கையெழுத்துக்கோரும் கடிதங்கள் நெருக்கமானவர்களால் வெளியில் எடுத்துச் செல்லப்பட்டும் பரவலாகக் கையெழுத்து வாங்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இக் கையெழுத்து வேட்டை பற்றி திரு.தங்கத்துரை அறியாமலிருக்க முடியாது எனப் பரவலாகப் பேசப்பட்ட போதும் உண்மையில் இது அவரை அறியாமல் மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியென நம்பத்தகுந்த வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

இக் கையெழுத்து வேட்டையால் அதிருப்தியுற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலை உறுப்பினர்கள் பலர் திருகோணமலைக் கிளைத் தலைமையிடம் இதுபற்றி முறையிட்டனர். உடனடியாகச் செயற்குழுவைக் கூட்டி இதனை நிறுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டனராம்.

இதேவேளை திரு.தங்கத்துரை பா.உவின் ஆதரவாளர்கள் சிலர் திரு. சம்பந்தனோடு ஒப்பந்தம் எதுவும் செய்யப்படவில்லை என்று கூறி வருகிறார்கள் என்று அறிந்தோம்.

முரசின் செய்தி தவறு என்றால், திரு.தங்கத்துரை பா.உ அவர்களும், திரு சம்பந்தன் அவர்களும் இணைந்து அவ்வாறான ஒப்பந்தம் எதுவும் செய்யவில்லை என மறுப்பறிக்கை விடலாம். அதனை முரசு நிச்சயம் வெளியிடும். ■

## தமிழீழ போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம்

## 'விடுதலைப்புலிகள்' பத்திரிகை தெரிவிப்பு

போர் தவிர்ப்பு உடன்பாட்டை கண்காணிக்க சர்வதேச பிரதிநிதிகளை அழைக்க சம்மதித்தது ஏன் என்று புலிகள் காரணம் கூறியுள்ளனர்.

புலிகள் அமைப்பின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' தைமாத வெளியீடு யாழ்ப்பாணத்தில் வெளியாகியுள்ளது.

அதன் முன்பக்க தலைப்புச் செய்தியில் போர் தவிர்ப்பும் சர்வதேச கண்காணிப்பும் குறித்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

"தமிழீழ விடுதலைப் போராட்டம் பெற்று வரும் அனைத்துலக அங்கீகாரம். மோதல் தவிர்ப்பை கண்காணிக்க வெளிநாட்டு பிரதிநிதிகள் வருகை" என்று தலைப்பிட்டு புலிகளின் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழீழ போராட்டம் சர்வதேச மயமாகி வருவதையே போர் இடை நிறுத்தம் மேற்குலக பிரதிநிதிகளால் கண்காணிக்கப்படுவது வெளிப்படுத்தி உள்ளதாக புலிகளது ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கமும் முன்னர் தெரிவித்திருந்தார்.

போர் தவிர்ப்பு உடன்பாட்டை தாம் எக்கட்டத்திலும் மீறவில்லை என்று சர்வதேச கண்காணிப்பாளர்கள் கூற வேண்டும் என்பதையே புலிகள் எதிர்பார்க்கிறார்கள்.

அதன்மூலமாக உலக அரங்கில் தமக்குரிய அங்கீகாரம் வலுப்பெறும். ஏற்கனவே தம்மீது உள்ள பாதகமான அபிப்பிராயங்கள் மறைந்து போகவும் வாய்ப்பு ஏற்படும் என்று புலிகள் கருதுகிறார்கள்.

எனவே-போர் தவிர்ப்பை உறுதியாக கடைப்பிடிக்குமாறும், படைகளது போர் தவிர்ப்பு மீறல்கள் எங்காவது நடந்தால் உடனடியாக அம்பலப்படுத்தவேண்டும் என்றும் புலிகளது தலைமை பிராந்திய பொறுப்பாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

## வவுனியாவில் கடும்சோதனை

வவுனியா ஈரற்பெரியகுளத்தில் இராணுவத்தினரின் சோதனை நடவடிக்கைகள் தொடர்கின்றன. பஸ், லொறிகள் போன்றவை சோதனை முகாமில் தரித்து நிற்கின்றன. இவ்வாறான சோதனை நடவடிக்கைகளால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும்.

இவ்வாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் வர்ணகுலசிங்கம் தம்மிடம் கூறியதாக 'புலகளின் குரல்' வானொலி தெரிவித்துள்ளது.

## சுவரொட்டி எதிர்ப்பு!

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பருக்கு எதிரான சுவரொட்டிகள் கொழும்பு நகரில் காணப்படுகின்றன.

பௌத்த மதம் பற்றி பாப்பரசர் தெரிவித்த கருத்தை கண்டிக்கும் வகையில் அச்சுவரொட்டி வாசகங்கள் காணப்படுகின்றன.

பௌத்த மதத்தை தாம்பெரிதும் மதிப்பதாக பாப்பரசர் தெரிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது ஆசிய-பசுபிக் நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பிக்கும்போதே பாப்பரசர் அவ்வாறு தெரிவித்திருந்தார்.

# ஆயுதத்தைக் கீழே வைக்க விலை ஆயிரம் கோடி!

# சந்தனக் கடத்தல்காரனின் சமரசப் பேச்சுவார்த்தை!!

(இந்திய நிருபர் ஏழுமலை)

இரு மாநில அரசுகள் திணறுகின்றன. இத்தனைக்கும் அவன் ஒரு கடத்தல்காரன்.

வீரப்பன் பெயரைச் சொல்லி தங்கள் துடுக்கான குழந்தைகளைத் தாய்மார்கள் தூங்கவைக்கும் அளவுக்கு அவன் பிரபலம்.

சந்தனமரக் கடத்தல்காரன் வீரன் வீரப்பனைத்தான் சொல்லுகிறோம்.

காட்டுக்குள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தி தமிழ் நாட்டு பொலிசாரையும், கர்நாடக மாநில பொலிசையும் கிடுகிடுக்க வைத்தான்.

விசேஷ அதிரடிப்படை நிறுவி தமிழக அரசு காடுகளில் தேடியும் ஒன்றும் முன்னேற்றமில்லை.

குறி பார்த்து சுடுவதில் கில்லாடியான பொலிஸ் அதிகாரி தேவாரம் தலைமையில் விசேஷ அதிரடிப்படை வீரப்பனை பிடித்து விடுவோம் என்று சூளுரைத்துக்கொண்டிருந்தபோது,

பொலிஸ் டி.எஸ்.பி.உட்பட மூன்று பேரை காட்டுப் பகுதியில் வைத்து சமீபத்தில் கடத்திச் சென்றான் வீரப்பன்.

அதனையடுத்து தீவிரவாத இயக்கத் தலைவர் போல அமைந்தது வீரப்பனின் நடவடிக்கைகள்.

மாவட்ட காலெக்டரோடு பேச்சு நடத்த வீரப்பன் தனது தூதனை அனுப்பினான்.

தூதன் கையில் ஆயுதம்- ஆயுதம் சகிதமாகவே பேச்சில் கலந்துகொண்டான் அந்த தூதன். பெயர் பேபி வீரப்பன்.

சிறையில் உள்ள தமது கூட்டாளிகளை சந்திக்க அனுமதி கேட்டான். அனுமதி கிடைத்தது.

தூதன் கையில் ஒரு ஓடியோ கசட்டு. அந்தக் கசட்டில் சிறையில் உள்ள தனது ஆட்களுக்கு வீரப்பன் செய்தி அனுப்பியிருந்தான்.

சிறைக்கு தனது தூதுவனோடு யார் யாரெல்லாம் செல்லவேண்டும் என்றும் நிபந்தனை விதித்திருந்தான் வீரப்பன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் (கலெக்டர்) ஒரு நீதிபதி, ஒரு மக்கள் பிரதிநிதி என்று மூன்றுபேர் மட்டுமே செல்லவேண்டும் என்பது நிபந்தனை.

அப்படியே நடந்தது. சிறையில் உள்ள தனது ஆட்களிடம் ஓடியோ கசட் மூலம் பேசினான் வீரப்பன்.

ஆண்களிடம்-"பொலிஸ் உங்களை சித்திரவதை செய்தார்களா?" என்றும், பெண்களிடம்- "பொலிஸ் உங்களை கற்பழித்தார்களா?" என்றும் கசட் வழியாக வீரப்பன் கேட்க, கைதிகள் சொன்ன பதில் தூதனால்



ஓடியோ கசட்டில் பதிவு செய்யப்பட்டது.

பேபி வீரப்பனின் தூது முடிய இரண்டாம் கட்டப் பேச்சுக்கு தனது தம்பி அர்ஜுனனை அனுப்பினான் வீரப்பன்.

அர்ஜுனனும் கையில் ஒரு ஆயுதத்தோடு வந்தான்.

ஏற்கனவே காட்டில் பொலிசாரோடு நடந்த மோதலில் அர்ஜுனன் காலில் காயம் ஏற்பட்டிருந்தது.

அதற்கு சிகிச்சை செய்யவும், காட்டுக்குள் தனக்கு தேவையான உணவுப் பொருட்களை கொண்டுசென்று சேர்க்கவும்தான் பேச்சுவார்த்தை நாடகத்தை ஆரம்பித்தான் வீரப்பன்.

அர்ஜுனனிடம் வீரப்பன் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தான். படித்துப் பார்த்த அதிகாரிகள் மயங்கிவிடாததுதான் ஆச்சரியம்.

- ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டுமானால் ஆயிரம்கோடி ரூபாய் அரசு தரவேண்டும்.
- பொது மன்னிப்பு அளிப்பதாக ஜனாதிபதியின் கையொப்பத்தோடு உத்தரவாதம் தரவேண்டும்.
- தற்காப்புக்கு ஆயுதம் வைத்திருக்க அனுமதி வேண்டும்.
- ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கறுப்புப் பூனைப் படையின் பதுகாப்பு தரப்பட வேண்டும்.
- காட்டுக்குள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் சந்தன மரம் வெட்டி வியாபாரம் செய்ய அனுமதிக்க வேண்டும்.
- சிறையில் உள்ள கூட்டாளிகளை உடன் விடுதலை செய்யவேண்டும்.

இந்த நிபந்தனைகளால் பேச்சுவார்த்தை சற்று தடைப்பட்டது.

அதே சமயம், வீரப்பனின் தளபதிகளிடம் நைசாகப் பேசி அவர்களோடு சேர்ந்து காட்டில் இருந்து தப்பி வந்தனர், கடத்தப்பட்ட டி.எஸ்.பியும் ஏனைய இருவரும்.

இப்போது வீரப்பனின் தம்பி அர்ஜுனன் பொலிஸின் கையில்; கடத்தப்பட்டவர்கள் தப்பிவந்துவிட்டனர்.

இனி வீரப்பன் என்ன செய்யப் போகிறான்? அவனது அடுத்த நடவடிக்கை எப்படி இருக்கும்? என்பதுதான் பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் விசயம்.

வீரப்பனின் மனைவி முத்துலட்சுமியும் பொலிஸ் காவலில் இருக்கிறார். அவரோடு பொலிசார் தரக்குறைவாக நடந்தனர் என்று அறிந்து மகா கோபத்தில் இருக்கிறானாம் வீரப்பன்.

வீரப்பனுக்கு புலிகள் பயிற்சியும் உதவியும் வழங்குவதாக வெளியாகும் செய்திகளில் ஆதாரங்கள் எதுவும் காணப்படவில்லை.

வீரப்பனின் தம்பி துப்பாக்கியில் ரவைக் கூட்டை விரைவாக கழற்றிப் போடுவதைப் பார்த்துவிட்டு புலிகள் பயிற்சி கொடுத்திருக்கலாம் என்கிறது தமிழ்நாடு பொலிஸ். துப்பாக்கியோடு தொடர்ச்சியான பரிச்சயமே அதற்குப் போதுமானது.

**எது நடந்தாலும் புலிகளோடு இணைத்துப் பேசுவது தமிழக பத்திரிகைகள் மற்றும் பொலிசாரின் பழக்கமாகிவிட்டது. ஏற்கனவே பிரேமானந்தா விடயத்திலும் புலிகளின் பெயர் இழுக்கப்பட்டது.**

## நீடிய எதிர்பார்ப்புடன் மக்கள் மகிழ்ச்சி!

## சில இடங்களில் படையினர் சோதனை இல்லை

(ஏறாவூர் நிருபர்)

பகைமை நிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட சென்ற ஞாயிறு முதல் கிழக்கில் வாழும் சகல சமூகங்களிடையேயும் நிம்மதிப் பெருமூச்சும், மகிழ்ச்சியும் நிறைந்து காணப்படுகிறது.

மோதல் தவிர்ப்புப் பற்றி மக்களிடம் கதைக்கும்போது அவர்கள் அது நிரந்தரமானதாக இருக்கவேண்டும் என்று பிரார்த்திப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

எல்லைப்புற சிங்கள ஊர்களான மஹாஓயா, பதியத்தலாவ, உஹன, அம்பாறை போன்ற இடங்களிலும் சம்மாந்துறை, கல்முனை, காத்தான்குடி, மட்டக்களப்பு போன்ற தமிழ் முஸ்லிம் பகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை அன்றே மக்கள் சந்தோஷமேலீட்டால் மோதல் தவிர்ப்புப் பற்றி அளவளாவிக்கொண்டதையும் காண முடிந்தது.

மோதல் தவிர்ப்பு நடவடிக்கைக்கு சிகரம் வைத்தாற்போல சில இடங்களில் படையினரின் பரிசோதனைகள் எதுவும் இருக்கவில்லை. கெடுபிடிகளும் இல்லை.

காத்தான்குடியில் அமைந்துள்ள விசேட அதிரடிப்படை முகாமிலும் வாகனங்கள் சோதனையின்றி விடப்பட்டதைக்காணக்கூடியதாகவிருந்தது.

## வெள்ளநிவாரணக் கொடுப்பனவுகள் பூர்த்தி

(காத்தான்குடி நிருபர்)

அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் மிகவும் பாதிப்புக்குட்பட்ட காத்தான்குடிப் பிரதேசத்தின் 7513 குடும்பங்களின் நிவாரணக் கொடுப்பனவுகள் முற்றாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடிப் பிரதேச செயலாளர் ஐ.எம்.ஹனீபா எமது நிருபரிடம் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், இதுவரை 6948 குடும்பங்கள் நிவாரண உதவிகளை முற்றாகப் பெற்றுள்ளன. சமூக சேவைத் திணைக்கள சுற்று நிருபப்படி தனியாக உள்ள ஒருவருக்கு 36 ரூபாயும், இருவருக்கு 66 ரூபாயும், மூவருக்கு 90 ரூபாயும் நால்வருக்கு 108 ரூபாயும், ஐவருக்கு 135 ரூபாயுமாக குடும்ப அங்கத்தவர்களின் தொகைக்கேற்ப நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மொத்தமாக 7,15,134 ரூபாய் பெறுமதியான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமாயுள்ள குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் (அரச ஊழியர்கள், 1500 ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுபவர்) வழங்கப்படமாட்டாது.

மேலதிகமாக ஒதுக்கீடு வழங்கப்பட்டால் இன்னும் 4 நாட்களுக்கு நிவாரணங்களை வழங்கலாம் என மேலும் பிரதேச செயலாளர் குறிப்பிட்டார்.

## மூளைக் காய்ச்சல் தீவிரம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூளைக் காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவி வருகிறது. பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூளைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்ட சிலர் சிகிச்சைக்காக கொழும்புக்கு கொண்டுவரப்பட்டனர்.

## மாவீரர் இல்ல திறப்பு விழா

கிளாலிக் கடலில் பலியான புலிகள் இயக்க உறுப்பினர்களதும், மக்களதும் நினைவுக்கல் நாட்டலும், அஞ்சலிக் கூட்டமும் 10.1.95 அன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் எழுதுமட்டுவாள் சந்தியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் புலிகள் அமைப்பின் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

கிளாலிக் கடலில் இதுவரை 16 புலிகள் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அந்த 16 உறுப்பினர்களுக்கும் நினைவுக் கற்கள் நாட்டப்பட்டுள்ளன.


## விளம்பரப் பகுதி

### தபால் மூலம் வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

**G.A.Q., B.A., B.Com., B.B.A. G.S.Q. B.Sc (Bio & Stats)**

**புதிய மாணவர்கள் அனுமதி - 1995**

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் மேற்படி பட்டங்களை வீட்டிலிருந்தவாறே படித்துப் பட்டம் பெறுவதற்கான எமது தபால் மூலம் பட்டப்படிப்புகள் பயிற்சித் திட்டத்திற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

இப்பாடநெறிகள் பற்றிய முழுவிபரங்கள் அடங்கிய கையேட்டின் விலை ரூபா 50/- Kotahena தபாற் கந்தோரில் பணம் பெறக்கூடியவாறு, Registrar, External Studies Academy என்ற பெயருக்கு பெற்ற ரூபா 50/- இற்கான மணியோடரையும் ஒரு ரூபா முத்திரை ஒட்டப்பட்ட, சுயமுகவரி எழுதப்பட்ட நீள கடிதவுறையையும் இணைத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தும் அல்லது நேரில் 50/- செலுத்தியும் கையேட்டையும், விண்ணப்பப் படிவத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

முக்கிய குறிப்பு: விண்ணப்ப முடிவு திகதி 1995 ஜனவரி 31 ஆம் திகதியாகும். இத் திகதிக்குள் எமது நிலையத்தில் தம்மைப் பதிவு செய்யும் மாணவர்களுக்கு பல்கலை கழகங்களில் வெளிவாரி மாணவராகப் பதிவு செய்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

**EXTERNAL STUDIES ACADEMY**
**P.O. Box : 660, No. 32, 3rd Floor, Colombo Central Super Market, Reclamation Road, Colombo - 11.**

### மலையாள மாந்திரீகம்



27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா! வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

நிறைவேறாத காதல் வசியம்- 100/97
கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
கணவன் மனைவி பிணக்கு- 100/45
பெற்றோர் விரும்பாத காதல்-100/87
குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
தீரா ஆஸ்துமா நோய்- 100/100
திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
குடிபோதை நிவர்த்தி- 100/97
கல்வி ஞான விருத்தி- 100/72
சகல வியாபார விருத்தி- 100/83
மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
புத்திர பாக்கியம்-100/33
பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

| தலைமைப்பீடம் | கொழும்பு இல்லம்- |
|---|---|
| P.K.சாமி JDGAN<br>(மாந்திரீகச் சக்கரவர்த்தி)<br>சிறீ துர்க்காதேவி ஆலயம்<br>32, தினச்சந்தை காம்பிளக்ஸ்<br>நுவரெலியா. | இல: 162,<br>கொட்டாஞ்சேனை வீதி,<br>கொட்டாஞ்சேனை.<br>கொழும்பு-13. |
| தொலைபேசி: 052-2508, 052-3093 | தொலைபேசி: 342463, 342464 |

### நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 492/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 251/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 128/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர் த.பெ.இல:1772 கொழும்பு
THINAMURASU VAARAMALAR P.O.BOX: 1772 COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்குங்கள்

| | |
|---|---|
| விளம்பர மேலாளர் | Advertising Manager |
| இல.5, காவிந்த பிளேஸ், | No.5, Kavinda Place, |
| கிருலப்பனை | Kirulapone, |
| கொழும்பு-06. | Colombo. |

Phone 852041


## 'முரசு' செய்தியால் உரிய பலன்! டாக்டர்கள் மகிழ்ச்சி!

(ஏறாவூர் நிருபர்)

"பதிவில்லாத வைத்தியர்களால் படும் தொல்லை" மட்டு மாவட்டத்தில் சில பதிவில்லாத வைத்தியர்களால் தங்களுக்குத் தொல்லை ஏற்பட்டு வருவதாக அரச வைத்திய வட்டாரங்கள் நொந்துகொள்கின்றன. இவர்கள் பிழையான வைத்திய முறைகளைக் கையாண்டு நோய் அதிகரித்தபின் நோயாளிகளை அரச ஆஸ்பத்திரிக்குச் செல்லுமாறு கேட்கிறார்கள்" என்று தினமுரசு வெளியிட்ட செய்திக்கு உரிய பலன் கிடைத்துள்ளது கண்டு அரச வைத்தியர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கிறார்கள்.

வாழைச்சேனை பிரதேசத்தில் கடந்தவாரம் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையையடுத்து தகுந்த மருத்துவத் தகுதிச் சான்றிதழில்லாது தனியார் மருத்துவ மனைகளை நடாத்திவந்த மூவர் மாட்டிக்கொண்டனர். இத்திடீர் சோதனையின் பின்னர் ஓட்டமாவடிப் பகுதியில் தனியார் மருத்துவமனைகளை நடாத்தி வந்த சில டாக்டர்கள் தலைமறைவாகி யுள்ளனர். அத்துடன் தங்களது கிளினிக்குகளின் பெயர்ப் பலகைகளை இரவோடிரவாக அகற்றியுமுள்ளனர். தற்போது மேற்படி மருத்துவமனைகள் அங்கு யாருமில்லாத நிலையில் மூடப்பட்டுக்கிடக்கின்றன.

இதேபோல் மாவட்டத்தில் மேலும் பல போலி வைத்தியர்கள் இருப்பதாகவும் அவர்களையும் உடனடியாகக் கண்டுபிடிக்கவேண்டும் என்று பலதரப்பிலிருந்தும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

## சுகாதாரமில்லாத இறைச்சிக் கடைகள்!

மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட இறைச்சிக் கடைகள் கட்டுப்பாடு அற்ற முறையில் சீரற்ற இடங்களில் மாடுகளை அறுக்கவும், கடைகள் அமைக்கவும் அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

இதனால் மூதூர் பிரதான பிரதேச சபை அலுவலகத்திற்குட்பட்ட பாலை நகர் நெய்தல் நகர், நொக்ஸ் வீதி, ஆலைச்சேனை, அக்கரைச்சேனை போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள இறைச்சிக் கடைகள் எவ்விதமான சுகாதார முறையும் இன்றி அசுத்தமான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

மூதூர் சுகாதார பரிசோதகரிடம் பலமுறை அறிவித்தும் இந்தப் பிரதேச சபை இறைச்சிக் கடைகள் சுகாதாரமான முறையில் அமையப்பெறவில்லை.

சுகாதார முறைப்படி மாட்டு மடுவங்கள் (அறுவைப்பகுதி) இறைச்சி விற்பனைத் தாபனங்கள் அமையப்பெற வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

எம்.வை.எச். இமாம்-மூதூர்.


### தலைநகரில் பிரபலமான நிறுவனம் ஒன்றிற்கு

### கணனி இயக்குநர்கள் தேவை

'அப்பிள் மக்கின்ரோஷ்' கணனியில் தமிழில் கொம்போசிங் செய்யக்கூடியவர்கள் மற்று ம்(DESK TOP PUBLISHING) பக்க அமைப்புச் செய்யக்கூடியவர்கள் தேவைப்படுகிறார்கள்.

ஆங்கிலத்தில் ஆற்றலிருத்தல் விரும்பத்தக்கது .

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தங்களது சுயவிபரக்கோவை மற்று ம் முன்னனு பவச் சான்றிதழ் போன்றவற்று டன் விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| விளம்பரதாரர் | ADVERTISER |
| கணனி இயக்குநர்கள் | COMPUTOR OPERATOR |
| மே/பா: தினமுரசு வாரமலர் | C/O. THINAMURASU VARAMALAR |
| த.பெ.எண் 1772 | P.O.BOX-1772 |
| கொழும்பு. | COLOMBO. |

(Advt.)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

போர் தவிர்ப்பு உடன்பாட்டை மீறியதாக தமது தலையில் பழிவந்து விழுந்துவிடக்கூடாது என்பதில் படைத் தரப்பு மிகுந்த விழிப்போடு இருக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் புலிகள் வந்து செல்கிறார்கள்.

"ஆயுதத்தோடு வந்தாலும் அவர்களை கைதுசெய்யாமல் திருப்பி அனுப்புவோம்" என்று பாதுகாப்பு படை அதிகாரி ஒருவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் மண்டைதீவுக் கடல் பகுதியில் புலிகளின் முப்பது படகுகள் சுற்றி வந்தன.

உடனடியாக கொழும்புக்கு தகவல் சொல்லப்பட்டது.

'அருகில் செல்ல வேண்டாம். கவனித்துக்கொண்டிருந்தால் போதும்' என்று கொழும்பில் இருந்து உத்தரவு பறந்தது.

போர் தவிர்ப்பை பயன்படுத்தி புலிகள் வெளிநாட்டிலிருந்து ஆயுதங்களை தருவிக்கக்கூடும் என்ற சந்தேகம் இல்லாமல் இல்லை.

புலிகளது கப்பல் எதுவும் இலங்கைக் கடற்பகுதியில் நுழைகிறதா என்று கவனமாக கண்காணிக்கப்படுவதாகவும் ஒரு தகவல்.

காலை ஐந்து மணி முதல் மாலை ஐந்து மணி வரை மட்டுமே கடலில் மீன்பிடிக்க அனுமதி என்று அரசாங்கம் அறிவித்ததும் அதனால்தானோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

இந்த அறிவிப்பு வெளியானவுடன் சூட்டோடு சூடாக புலிகளிடமிருந்து ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெந்திக்கு ஒரு கடிதம் வந்தது.

அரசாங்கம் தன்னிச்சையாக இப்படி ஒரு அறிவித்தலை எப்படி வெளியிட முடியும்? இது போர் தவிர்ப்பு உடன்பாட்டை மீறும் செயல் என்று புலிகளது சார்பாக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ் செல்வன் தனது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

கடல் வலயத் தடை நீக்கப்பட வேண்டும் என்பது புலிகள் வலியுறுத்தும் கோரிக்கைகளில் ஒன்று.

கடல் வலயம் தடை நீக்கப்பட்டு விட்டதாக அரசாங்கம் கூறியிருக்கும் அதேவேளை நிபந்தனையுடன் அதனை நீக்கியிருக்கிறது.

புலிகள் இதனைப் பிடித்துக்கொண்டார்கள். நிபந்தனையுடன் தடை நீக்கப்பட்டிருப்பது திருப்திகரமான முடிவல்ல என்று மக்களுக்கு தெரிவிக்கவே ஜனாதிபதியின் செயலாளருக்கு தமிழ் செல்வன் கடிதம் எழுதினார்.

ஜனாதிபதியின் செயலாளரது கரத்திற்கு கடிதம் வரமுன்பே யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளுக்கு அக்கடிதம் வழங்கப்பட்டுவிட்டது.

ஆனால், அரசாங்கம் தமிழ் செல்வனின் கடிதம் பற்றி வெளியே எதுவும் தெரிவிக்கவில்லை.

இரண்டுவிதமான பிரசார முறைகள் இப்போது உள்ளன.

ஒன்று, அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலம் செய்யப்படும் பிரசாரம்.

அரசும்-புலிகளும் பல விடயங்களில் உடன்பாடு கண்டு நெருங்கி விட்டார்கள். இரு தரப்புமே நியாயமாக நடந்துகொள்கின்றன என்பது போலவே அரச கட்டுப்பாட்டு பிரசார சாதனங்கள் வெளிப்படுத்தி வருகின்றன.

இரண்டாவது, புலிகளது கட்டுப்பாட்டில் செயற்படும் வடக்கில் உள்ள 'புலிகளின் குரல்' மற்றும் பத்திரிகைப் பிரசாரங்கள்.

புலிகள் மட்டுமே நியாயமாக நடந்து கொள்கிறார்கள் என்ற விடயத்தை மட்டுமே அவை முதன்மைப்படுத்துகின்றன.

அரச தரப்போடு பேச்சு நடத்தும்

அதேவேளையில், அரசாங்கம்மீது விமர்சனம் செய்ய கிடைக்கும் சகல வாய்ப்புக்களையும் புலிகள் தவறவிடாமல் பயன்படுத்துகிறார்கள்.

அரசாங்கம் நியாயமாகத்தான் நடக்கிறது என்ற கருத்து உறுதியாக ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் புலிகளது பிரசார இயந்திரம் விழிப்போடு இருக்கிறது.

அரச தரப்போ, அமைச்சர்களோ புலிகள் தொடர்பான விமர்சனங்களைத் தவிர்த்தே வருகிறார்கள்.

ஆனால், புலிகள் தரப்பும், அதன் முக்கியஸ்தர்களும் பேசும் விதமே தனி.

இலங்கையில் இரு நாடுகள் என்ற அடிப்படையில் இருந்தே அவர்களது பேச்சுக்கள் ஒலிக்கின்றன.

தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ் செல்வன் பேச்சுவார்த்தை பற்றியும், அரசாங்கத்தின் முயற்சிகள் பற்றியும் பின்வருமாறு கூறுகிறார்,

**"உங்களுக்கு தீர்வைத் தருகிறோம் என்பவர்களுக்கு நாங்கள் சந்தர்ப்பம் அளிக்கின்றோம். வாருங்கள் நீங்கள்– எதைத் தருகின்றீர்கள் பார்ப்போம். எமது மக்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ற மாதிரி தீர்விருந்தால் நாங்கள் வரவேற்போம்.**

**"ஆனால், நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கிறோம். எமது தேசிய விடுதலையை, எமது உரிமைகளை பெற்றெடுப்பதில் எமது மக்களும், போராளிகளாகிய நாமும், எமது**

வந்தபின்னரும் புலிகள் தமது நிர்வாக கட்டமைப்புக்களை விரிவுபடுத்துவதில் தாமதம் காட்டவில்லை.

கடந்த 12.1.95 அன்று மன்னாரில் தமிழீழ காவல்துறை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் தமிழீழ விடுதலையை வலியுறுத்தும் 'விடுதலைப் போர் முரசு' ஒலிப்பதிவு இழை, மற்றும் 'செவ்வரத்தம் பூ' மற்றும் 'உயிர்ப்பு' குறும்படங்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் உள்ள திரையரங்குகளில் இவை திரையிடப்படும்.

இந்தச் செய்திகள் யாழ்ப்பாண பத்திரிகைகளில் வெளியானபோது ரூபவாஹினி தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத் தலைவர் யாழ்ப்பாணத்தில் இருந்தார்.

செய்திச் சுதந்திரம் பற்றிப் பேசும் திரு. வசந்தராஜா இந்தச் செய்திகளை ஏன் ரூபவாஹினிக்கு அனுப்பவில்லை என்று தெரியவில்லை.

ஆக, புலிகள் அரசின் முயற்சிகளை நம்பிக்கையோடு

வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்பதுதான் திம்புவில் 1985இல் முன்வைத்த விடயங்களில் முக்கியமானது.

அதனைப் புலிகள் முன்வைக்கும்போது அரசு ஏதாவது பதில் சொல்லியே ஆகவேண்டும்.

வடக்கு-கிழக்கை இணைக்கமுடியுமா? முடியாதா? என்ற கேள்விக்கான பதிலில் பேச்சின் கதியே தீர்மானிக்கப்பட்டு விடக்கூடும்.

புலிகள் மட்டுமல்ல ஏனைய தமிழ் கட்சிகளும் வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை அழுத்திக் கூறுவதால் அரசாங்கம் தர்மசங்கடமான நிலையில் மாட்டிக்கொள்ள வேண்டிவரும்.

தனது உதவிக்கு, தனக்கு சார்பாகப் பேச ஏனைய தமிழ் கட்சிகளை அரசு அழைக்கமுடியாமல் போகலாம்.




**தலைவரும் மிக உறுதியாக இருக்கிறோம்.**

**"இங்கு முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களை எல்லாம் பார்த்துக் களைத்தவர்கள் நாங்கள். ஆகவே எதையும் பொறுமையாக எதிர்பார்ப்போமே தவிர தீர்வு கிடைக்கும் என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியாது.**

எதிர்பார்க்கவில்லை. சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார்கள். தமக்குரிய சந்தர்ப்பங்களையும் சரிவர பயன்படுத்துகிறார்கள்.

துப்பாக்கிகள் தூங்கும் இந்த நிலை தொடர வேண்டும் என்று வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்பார்ப்பது சந்தேகமே இல்லாத

எனினும் புலிகளை பலப்படுத்திவிட்டு திரும்பியதாக இல்லாமல், அரசியல் பிரச்சனைகளையும் ஆராயத்தொடங்கினால் தான் புலிகள் தமிழ் ஈழ கோரிக்கையை கைவிடத்தயாரா என்று நாடிபிடித்தறிய முடியும் என்று அரச தரப்பு நினைக்கிறது.

# அலட்சியம் செய்யப்படும் கட்டத்தில் இ.தொ.கா.!

**"தற்காலிகமான சலுகைகளையும், தற்காலிகமான அறிக்கைகளையும், பத்திரிகைச் செய்திகளையும் பார்த்து திருப்தி அடைபவர்களாக இல்லாமல் எமது சுதந்திரத்தை- எமது உரிமைகளை பெறுவதற்கு நாம் போராடி வருகிறோம். அறிக்கைகளை, சலுகைகளை நம்பி ஏமாறமாட்டோம்."**

அரசோடு பேச்சை ஆரம்பித்த பின்னர் நல்லூரில் நடைபெற்ற மிருதங்க அரங்கேற்ற விழாவில் தமிழ் செல்வன் ஆற்றிய உரைதான் அது.

புலிகளது தலைவர் பிரபாகரனுக்கு தற்போது மிக நெருக்கமாக உள்ளவர், நம்பிக்கைக்கு உரியவர் தமிழ் செல்வன்.

எனவே-தனது தலைவரது எண்ணப் போக்கை அறிந்துதான் அவர் பேசுவார்.

போர் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலுக்கு

உண்மை.

போர் தவிர்ப்பை நீடிக்கவே அரச தரப்பும் விரும்புகிறது.

போர் தவிர்ப்புக் காலத்தில் புனரமைப்பு வேலைகளை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும் என்று புலிகள் விரும்புகிறார்கள்.

ஆனால், அரசியல் தீர்வு பற்றிப் பேசியபடி அதனைச் செய்யலாம் என்கிறது அரசு.

அரசியல் தீர்வு பற்றிய பேச்சு எழுந்தால் இரண்டில் ஒன்று உடனடியாகத் தெரியும்.

ஆகக் குறைந்தது 1985 இல் திம்புவில் சகல தமிழ் அமைப்புக்களும் ஒன்றுபட்டு முன்வைத்த அடிப்படைத் திட்டத்திலிருந்தே அரசியல் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டியிருக்கும் என்பதே புலிகளின் கருத்து என்று தெரிகிறது.

புலிகளைப் பொறுத்தவரை தாம் அரசுக்கு ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்தோம் என்று கூறிக்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்த விரும்பவில்லை. ஆனால் விழிப்போடு இருக்கிறார்கள்.

எது எப்படியோ போர் தவிர்ப்பு உடன்பாடு தற்போதைக்கு சேதமாகாது என்று தெரிகிறது. ஏனெனில் இரு தரப்புக்கும் அது தற்போதைக்கு அவசியம்.

□□

அமைச்சர் தொண்டமானுக்கு அது அதிர்ச்சியான செய்திதான்.

கலன் தோட்ட தொழிலாளர்களது பிரச்சனை பற்றிப் பேசப்பட்ட கூட்டத்திற்கு அவரோ அல்லது இ.தொ.காவோ அழைக்கப்படவில்லை.

12.1.95 அன்று பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சு கலன் தோட்ட விவகாரம் பற்றிப் பேச ஒரு மாநாடு நடத்தியது.

தொழிற்சங்கங்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பில் இ.தொ.காவுக்கு அழைப்பில்லை.

கூட்டு உடன்படிக்கை ஒன்றை செய்யவும் மாநாட்டில் முடிவு எடுக்கப் பட்டுவிட்டதை அறிந்த தொண்டாவுக்கு பலத்த அதிர்ச்சி.

பதுளையில் உள்ள கலன் தோட்டத்தை பௌத்த மதகுரு ஒருவர் கையேற்றதுடன் ஆரம்பித்த பிரச்சனைக்கு தீர்வுகாணவே மாநாடு கூட்டப்பட்டது.

பல்லாண்டுகளுக்கு முன்னர் குத்தகைக்கு கொடுத்திருந்த நிலம் இப்போது குத்தகை முடிந்துவிட்டது. நாம் பொறுப்பேற்பதில் என்ன தவறு என்று கேட்கிறார் பௌத்த மதகுரு.

இப்போது கலன் தோட்டம் அவரது கையில் இருக்கிறது. அங்குள்ள தொழிலாளர் நலன்பற்றிய விடயங்களை உள்ளடக்கி கூட்டு உடன்படிக்கை செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

ஏற்கனவே கலன் தோட்ட விவகாரம் பற்றி இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பேசியிருந்தார்கள்.

இ.தொ.காவின் தொழிற்சங்கப் பலத்திற்கு அதனால் போராட்டங்களை நடத்தியிருக்க முடியும். ஆனால் பெரிதாக எதுவும் செய்யவில்லை.

அரசில் இ.தொ.கா. மட்டுமே மலையக தமிழ் மக்கள் சார்பில் அங்கம் வகித்த நிலை திரு.சந்திரசேகரனின் வெற்றியோடு அடிபட்டுப்போய் விட்டது.

மலையகத்திலிருந்து முரண்பாடுள்ள இரு தரப்புக்கள் அரசிற்கு ஆதரவளிக்கின்றன.

இதில் எந்த ஒரு தரப்பும் அரசுக்கு நெருக்கடி கொடுக்க முடியாத நிலையில் உள்ளன.

ஒரு தரப்பு அரசை விரோதித்தால் மறு தரப்பு அதனால் இலாபம் பெற்றுவிடுமோ என்ற தயக்கமே அதற்கான காரணமாகும்.

இந்த முரண்பாட்டை அரசாங்கம் ஊக்குவிப்பதாகக் கூற எந்த ஆதாரமும் இல்லை. ஆனால், இவ்வாறான முரண்பாடு நிலவுவது அரசாங்கத்திற்கு இலாபம்தான் என்பது உண்மை.

ஜனாதிபதி என்ன நினைக்கிறாரோ தெரியவில்லை. ஆனால் இ.தொ.காவை விடவும் திரு. சந்திரசேகரனை பொதுஜன முன்னணி அதிகம் விரும்புகிறது.

திரு.சந்திரசேகரன் தனது பழைய கூட்டணி என்பதை பொதுஜன முன்னணி மறக்கவில்லை.

அரசாங்கத்தை ஆதரித்தபடியே வெளியே பகிரங்கமாகக் கண்டித்துப் பேசும் தொண்டாவின் அணுகுமுறை புளித்துப்போன ஒன்றாகிவிட்டது.

வேறு வழியின்றித்தான் திரு. தொண்டா அரசை ஆதரித்தார் என்பது சகலருக்கும் தெரிகிறது.

தனது நம்பகத் தன்மையை நிரூபிக்க பெரும் போராட்டங்கள் நடத்தும் நிலையில் தொண்டா இல்லை.

இந்த நேரத்தில் கலன் தோட்ட விவகாரத்தில் இ.தொ.காவை கழட்டிவிட்ட சம்பவமும் நடந்திருக்கிறது.


இது திட்டமிட்டு நடந்ததா இல்லையா என்பது ஒரு புறமிருக்க, இ.தொ.கா. அலட்சியம் செய்யப்படும் ஒரு சூழல் உருவாகிவிட்டதை தொண்டா வருத்தத் தோடு நோக்கவே செய்வார்.

இந்த நிலை ஏற்பட தனது தளம்பலான அரசியல் நிலைப்பாடுகளும் ஒரு காரணம் என்பதை அவர் இப்போதாவது உணரவேண்டும்.

மலையக தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாக சொல்லும் அமைப்புக்கள் தமக்குள் முரண்பட்டு அந்த மக்களது நலன்களை தாரை வார்த்துவிடக்கூடாது.

அதே சமயம் இ.தொ.கா. மட்டுமே மலையக மக்கள் சார்பாக பேசமுடியும் என்று தொண்டா வற்புறுத்துவது ஜனநாயக நடைமுறையாகாது.

முதிர்ந்த தலைவரான தொண்டா ஏனையோரை அணைத்துச் செல்ல வேண்டும். ■



போர் ஓய்ந்தாலும் யாழ்ப்பாணத்திலை இருந்து வருவதற்கு பாஸ் எடுக்கும் கியூவரிசைக்கு குறையில்லை. புனிதரை தரிசிக்க வந்த ஆட்களும் பிணை நிறுத்திப் போட்டுத்தான் வந்தவையாம்.

முன்னாள் நீல அணி அமைப்பாளர் யாழ்ப்பாணத்திலைதான் சட்டத்தரணிகளுக்கு மரியாதை; கொழும்பிலை யாரும் தன்னைக் கண்டுகொள்ளுறதில்லை எண்டமாதிரிப் பேசினவராம். அவருக்குத் தெரியுமோ இப்ப யாழ்ப்பாணத்திலை அவர் படிச்ச சட்டத்திற்கே மரியாதை இல்லை. அவர் யாழ்ப்பாணம் போனா ரெண்டு எழுத்தாரின் சட்டக்கல்லூரியிலை 'அ'வில் இருந்து தொடங்கவேண்டியிருக்கும். அது தெரிஞ்சா வினோதம் எண்டு சொல்லுவாராக்கும்.

அரசாங்கத்திற்கும் நல்ல பிள்ளை, ரெண்டு எழுத்தாருக்கும் நல்ல பிள்ளை எண்டமாதிரி சிலர் நடந்துகொள்ளுறதில் வினோதமுமில்லை; விசித்திரமுமில்லை. அவையின்ரை தேவையப்படி. ஒருவேளை ரெண்டு எழுத்தார் அரசாங்கத்தோடை முரண்பட்டா அந்த நேரம் யாரிலை பிழை எண்ட விசயத்தை இந்த சமாதானப் பிரியர்கள் சொல்லுவினமோ? எங்களுக்கேன் வம்பு எண்டு ஒடி ஒழிப்பினமோ? வெயிட் அன்ட் சீ!

வணக்கத்துக்குரியவர் வருகைக்காக தலைநகரமே சீருடைமயம். பேச்சு நடக்குது எண்டு பேசாமல் இருக்காமல் முழு விழிப்புக் காட்டியிருக்கினம். ஏற்கனவே ஒரு தடவை சூடுபட்ட அனுபவம்தான் காரணமாக்கும்.

ரெண்டு எழுத்தார் தயாரிச்சு வெளியிடும் குறும்படங்கள் சும்மா சொல்லக்கூடாது உணர்ச்சிபூர்வமாகத்தான் இருக்குதுங்கோ. 'பிஞ்சுமனம்' என்றொரு படம். குடியிருப்புக்குள் குண்டுவீச்சு எவ்வளவு கொடுமை எண்டு வெளிப்படுத்திக் காட்டுது. விமானக் குண்டு ஒவ்வொன்றும் அநாதைகளையும் அவலங்களையும் மட்டுமில்லைப் பாருங்கோ- ஆவேசத்தையும் விதைக்கும். சம்பந்தப்பட்டவை உணர்ந்தால் சரி.

## அதிரடி அய்யாத்துரை

சிறிய பிரச்சனைகளைப் பெரிசுபடுத்தாமல் சண்டை ஓய்வை தொடரத்தான் தெற்கில் அதிகாரத்தில் உள்ளவை விரும்புகினமாம். பாதுகாப்புக்கு பொறுப்பானவர் பத்திரிகைகளுக்கு எடுத்துச் சொன்னதும் அதுதானாம்.

தங்கமானவர் பதவியை விட்டுக்கொடுக்கிற எண்ணத்தையே கைவிட்டுப்போட்டாராம். திருவான மலையிலை கட்சிவட்டாரம் அவரிலை கெட்ட கோபத்திலை இருக்குதாம். அதுபற்றி கவலைப்படத் தேவையில்லை எண்டது தங்கர் வட்டார அபிப்பிராயம்.

நம்நாட்டு தமிழறிஞர்களை அடிக்காத குறையா திருப்பி அனுப்பியிருக்கினம். தேனகத்தில் ஒரு குழு தமிழகச் செல்விக்கு பாராட்டுவிழா எடுக்க வெளிக்கிட்டதாம். உதுதானே பிழையான விசயம். இதை கண்டிக்கிறதுக்காகச் சொல்லேல்லை. இனி இப்படி நடக்காமல் இருக்கிறதுக்காகத்தான் சொல்லுறன் பாருங்கோ.

நீலமான தமிழ் அரசியல்வாதிக்கு ரெண்டு எழுத்தார் குறிவைக்கிறதா முன்னாள் வெளிச்சவீட்டு குழுதான் சொன்னதாம். அதுதான் பாதுகாப்பு கேட்டு வாங்கியிருக்கிறாராம். இந்த நேரத்திலை ஒரு விசயம் மட்டும் கிளியர். காந்தியம் பேசினாலும் கருவிகளின் பாதுகாப்பு காலத்தின் கட்டாயம்!

தமிழ் நாட்டு சந்தனக் கடத்தல் வீரப்பன் தன்ரை பேச்சை பதிவு செய்து இலண்டன் பி.பி.சியிலை போடச்சொல்லி கேட்டவனாம். ஆனந்தியக்காவிடம் சொல்லுங்கோ எண்டானாம். பி.பி.சியிலை எத்தனைபேர் இருந்தாலும் அந்தப் பேரை மட்டும் அண்ணன் வீரப்பன் ஏன் சொல்லவேணும்? எப்படியோ எங்கடை நாட்டுச் சோதரி பிரபலமாகிறது பெருமைதானே!

"தூதோது தத்தைத் தீ தோதூ தித் தீதேதோ
தே தாதைத் தீதேதோ தூ தத்தை-தீதேதோ
தொத்தித் ததைத்ததே தித்தி ததி துதித்துத்
தத்தைத் துதைத்தே தா."

இதுதானுங்கோ தகரவர்க்க நேரிசை வெண்பா எண்டு சொல்லுறது. தி.க.ஆறுமுகம் என்னும் புலவர் எழுதியது. ஒரு ஐந்து தரம் சொல்லிப்பாருங்கோ. நாப்பழக்கமாகிவிடும். ●

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# அரசியல் தொடர்



11

## அற்புதன் எழுதுவது

**BANK ROBBERS GUN DOWN 2 POLICEMEN**

Rs. 1,18 MILLION HEIST IN NALLUR

### ஆயுதமும் பணமும்

பொது மக்களிடம் இருந்து திரட்டப்படும் நிதியை வைத்து மட்டும் ஆயுதம் ஏந்தும் இயக்கத்தை கட்டியெழுப்ப முடியாது.

தமிழ் மாணவர் பேரவைத் தலைவராக இருந்த பொன்-சத்தியசீலனை பிடித்து பொலிசார் இரண்டு தட்டுத் தட்ட அவர் அரிச்சந்திரனாக மாறி சகல உண்மைகளையும் கக்கிவிட்டார்.

பொலிசாரின் கையில் சிக்காமல்

### இராசரத்தினமும் பசியும்

மற்றொரு சோகத்தையும் கேளுங்கள். தமிழரசுக் கட்சியின் தூணாக இருந்தவர் இராசரத்தினம். இவரும் சாவகச்சேரியைச் சேர்ந்தவர்தான்.

ராஜீவ் காந்தி கொலைக்கு காரணமான தாணு இந்த இராசரத்தினத்தின் மகள் என்று சந்தேகங்கள் எழுப்பப்பட்டன.

இராசரத்னத்தின் நினைவாக அவரை கௌரவித்து பிரபாகரன் ஒரு விருது வழங்கியதாலும் அந்த சந்தேகம் வலுத்திருக்கிறது.

தமிழ்நாட்டுக்குச் சென்றிருந்தார். இராசரத்தினத்தையும் அவருக்கு நன்றாகத் தெரியும்.

ஐந்து மீற்றர் துணியோடு போய் "இதனை ஊரில் என் பிள்ளைகளுக்கு கொடுக்கவேண்டும்" என்றார் இராசரத்தினம்.

கர்மவீரரின் மனைவி சொன்ன பதில் "என்னால் முடியாது" ஆனால் திருமதி நவரத்தினம் தனது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் 1500 ரூபாவுக்கு (அப்போது அது பெரிய தொகை) பொருட்கள் கொள்முதல் செய்துகொண்டு புறப்பட்டார்.

### அழைத்தவர் மறுத்தார்

**"செத்து மடிதல் ஒரு தரமன்றோ**
**சிரித்துக்கொண்டே செருக்களம் வாடா"**

என்று காசி ஆனந்தன் கவிதையை மேடைகளில் உணர்ச்சி பொங்கப் பாடுவார்

தளபதி அமிர் விடுத்த அறிக்கை இன்னமும் உணர்ச்சிகரமானது:

"இராசரத்தினம் அவர்களின் மறைவின் மூலம் எங்கள் இயக்கம் எறும்பு போல் ஓயாமல் உழைக்கும் ஒரு உத்தமத் தொண்டனை இழந்துவிட்டது."

இது அமுதரின் பேச்சு. கர்மவீரர் வ.நவரத்தினம் என்ன பேசினார் தெரியுமோ?

இராசரத்தினம் கூட்டணியின் தீவிர உறுப்பினர். தந்தை செல்வாவின் தலைமையின் கீழ் செயற்பட்ட செம்மல் அவர்"

இராசரத்தினம் என்ற தன்னலமற்ற தொண்டனுக்கு கூட்டணித் தலைவர்கள் செய்தது நியாயமா துரோகமா? என்பதை தீர்மானிக்கும் பொறுப்பை இதனை வாசித்தறியும் உங்களிடமே விட்டுவிடுகிறேன்.

# போராட வா என்று அழைத்தனர்-வாடியபோது உதவ மறுத்தனர்!

தந்தை செல்வா
கலைஞர் கருணாநிதியோடு இராசரத்தினம்



### யார் இந்த இராசரத்தினம்?

தமிழினத்தின் போராட்ட வரலாற்றையே ஒரு சில தலைவர்களது வரலாறாக, சாதனையாக நினைத்தே பழக்கப்பட்ட நமக்கு இந்த இராசரத்தினத்தை தெரியாமல் போவதில் வியப்பில்லை.

1973ம் ஆண்டு யாழ்ப்பாணம் பண்ணைப் பாலத்தில் காரில் சென்றுகொண்டிருந்தார் அமைச்சர் செல்லையா குமாரசூரியர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் தபால் அமைச்சராக இருந்தவர்.

துரோகி குமாரசூரியர் என்ற கூட்டணித் தலைவர்களால் தூற்றப்பட்டவர்.

பாலத்தில் சென்றுகொண்டிருந்த காரையும் அமைச்சரையும் குண்டுவைத்து தகர்க்க முயன்றார் இராசரத்தினம்.

பொலிசார் வலை வீசினார்கள். இராசரத்தினம் தமிழ்நாட்டுக்கு தப்பி ஓடினார்.

'இலங்கை மீண்டு எரிகிறது' என்றொரு நூல் அப்போது இலங்கை அரசை கோபமூட்டியது. அந்த நூலின் பெரும்பகுதி 'சேரன்' என்ற புனைபெயரோடு இராசரத்தினத்தால் எழுதப்பட்டது.

திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்.

அந்த வீரத் தமிழ் தலைவி தமிழ்நாட்டுக்கு சென்றிருந்தார்.

பசியால் துடித்த இராசரத்தினத்திற்கு பசியே தீர்ந்தது போல திருப்தி. திருமதி அமிர் வந்துவிட்டா. நிச்சயம் உதவி பெறலாம். ஓடினார்.

"ஒரு முன்னூறு ரூபா கடனாக தாருங்கள்"

'என்று கேட்டார். செருக்களத்திற்கு அழைத்த செந்தமிழ் செல்வி சொல்லிய பதில்,

**"என்னிடம் பணம் இல்லை!"**

பட்டினி அவலம். வெட்கப்பட்டால் முடியுமா? எனவே இராசரத்தினம் விடாமல் கேட்டார்,

"ஒரு வளையல் தந்தீர்கள் என்றால் அடகுவைத்து பணம் எடுக்கலாம். பின்னர் மீட்டுத் தந்துவிடுவேன்."

"முடியாது" என்று முகத்தில் அடித்தது போல மறுத்தார் மங்கையற்கரசி.

வாழ்க ஈழத் தமிழகம் என்று மேடையில் பாடிய மங்கையற்கரசி அக்கா வாடிய ஒரு ஈழத் தமிழ் போராளியை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

இராசரத்தினம் கதை பொய் என்று யாராவது நினைத்தால் இங்கு வெளியாகியுள்ள நாட்குறிப்பின் ஒரு பக்கம் உண்மை சொல்லும். 1973ல் இராசரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட சோக வரிகள் அவை:

இன்னும் பல சோக நிகழ்வுகள் உண்டு. அவ்வப்போது சொல்லப்படும்.

### வங்கியில் குறி

இவ்வாறான சூழல்கள் நிலவிய போதுதான் ஆயுதம் ஏந்தவேண்டும். ஆயுதம் ஏந்தும் போராளிகள் வாழவும், ஆயுதம் பெறவும் பணம் வேண்டும். பணத்தை அரசின் நிர்வாகத்தில் இருந்து பறித்தெடுக்கவேண்டும் என்பதில் புலிகள் தீர்க்கமான நம்பிக்கையில் இருந்தனர்.

யாழ்ப்பாணம் நல்லூர் தொகுதியில் திருநெல்வேலியில் இருந்தது மக்கள் வங்கி.


குறிப்பிட்ட திகதியில் அந்த வங்கியில் பெருந்தொகைப் பணம் இருக்கும் என்ற துல்லியமான தகவலை புலிகள் அறிந்தார்கள்.

வங்கியின் உள்ளமைப்பு, பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற விபரங்களும்

# ஒரு போராளியின் சோகமான நாட்குறிப்பு



அமரர் இராசரத்தினம்



20 Thursday

இது இராசரத்தினம் எழுதிய நாட்குறிப்பில் சில பக்கங்கள் மட்டுமே!

இதனை ஆரம்பத்தில் இருந்தே பிரபாகரன் உணர்ந்திருந்தார்.

ஒரு இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு முதலில் தேவையானது துணிச்சல். இரண்டாவது தேவை அந்த இயக்கத்தை எவ்வாறு உருவாக்கப் போகிறோம் என்பதில் தெளிவு. அனைத்துக்கும் மேலாகக் கட்டுப்பாட்டு விதிகள் தேவை.

புலிகளை விமர்சித்த குழுக்களும், தம்மை புத்திஜீவிகள் என்று அழைத்துக் கொண்டவர்களும் மிக முக்கியமாக கவனிக்கத் தவறியது நம் நாட்டுச் சூழலுக்கு ஏற்ப ஒரு போராடும் அமைப்பை எப்படி உருவாக்குவது என்பதைத்தான்.

எதிரியே எம்மை ஆயுதம் ஏந்த நிர்ப்பந்தித்தான் என்றுதான் சகல இயக்கங்களும் சொல்லிக்கொண்டன.

ஆனால், பிரபாகரன் மட்டுமே நிர்பந்தித்த எதிரி மூலமாகவே இயக்கத்தை நிலைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கருத்துக்கொண்டிருந்தார்.

ஆயுதம் தேவை. அதை வாங்கப் பணம் தேவை.

அந்த நேரத்தில் கூட்டணித் தலைவர்கள் சிலரிடம் பணம் இருந்தது. ஆனால் அதனை வழங்கும் மனம் இருக்கவில்லை.

சிந்தனைச் சிற்பி கதிரவேல் பிள்ளைக்கு ஐயாயிரம் ரூபா வெறும் சில்லறைதான்.

அந்த சில்லறையைக்கூட சிவகுமாரன் கேட்ட நேரத்தில் அவருக்கு கொடுக்க மனம் வரவில்லை. கையை விரித்தார்.

உங்களுக்கு இந்த நேரத்தில் ஒரு சிறு சோக சம்பவம் சொல்லவேண்டும்.

### ஓடினான்—வாடினான்

வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தியாகராசாவை கொழும்பில்வைத்து சுட்டுக்கொல்லும் முயற்சி நடந்தது பற்றி ஏற்கனவே சொல்லியிருந்தேன்.

அந்த முயற்சியில் ஈடுபட்ட இருவரில் ஒருவர் ஜீவராசா. இவர் சாவகச்சேரியைச் சேர்ந்தவர்.

தமிழ்நாட்டுக்கு தப்பிச் சென்றவர் ஜீவராசா.

படகில் ஏறும்போது ஜீவராசா என்ற இளைஞனுக்கு நிறைய நம்பிக்கை.

தமிழ்நாட்டுக்கு சென்றுவிட்டால்போதும். தமிழினத் தலைவர் கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் அங்கு இருக்கும்போது என்ன குறை?

தமிழகத்தின் நிலப்பரப்பில் நம்பிக்கையோடு கால் பதித்து கலைஞரை தேடி ஓடினார் ஜீவராசா.

"யார் நீர்? எங்கிருந்து வருகிறீர்? எதற்காக தலைவரைப் பார்க்கவேண்டும்?"

கலைஞரின் கட்சிக்காரர்கள் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் பொறுமையாக பதில் சொன்னான் அந்த இளைஞன்.

"எனக்கு எந்த உதவியும் வேண்டாம்; ஒரு முறை ஒரே ஒருமுறை கலைஞரை பார்த்து பேசிவிட்டால் போதும்."

என்று வேண்டுகோள் விடுத்தான். கலைஞர் கருணாநிதியின் வீடு சென்னையில் கோபாலபுரத்தில் இருக்கிறது.

கலைஞர் செவிக்கு ஜீவராசாவின் வேண்டுகோள் சென்றது. ஆனால் கடைசி வரை கோபாலபுரத்தின் கதவுகள் திறக்கவேயில்லை.

"தலைவர் பிஸி."

என்ற பதிலைத் தவிர வேறு எந்த மொழியும் ஜீவராசாவின் செவிக்கு தரப்படவில்லை.

தளர்ந்துபோனான். பசி, பட்டினி. மயங்கி வீதியில் கிடந்தவனை கனிவோடு உபசரித்தாள் ஒரு ஏழைத் தமிழ் பெண். அவள் ஒரு கூலித் தொழிலாளி.

தான் பணியாற்றும் செங்கல் சூளையொன்றில் அவனுக்கும் கூலி வேலை பெற்றுக்கொடுத்து உதவினாள்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடிக்காக மூச்சை விடத் தயங்கேன் என்பார் தலைவர் கலைஞர்.

அந்த மூத்த குடிக்காக போராடிய ஒரு போராளி கலைஞரின் புறக்கணிப்பால் தலையிலே கல் சுமந்து வயிற்றைக் கழுவினான்.

அதிர்ச்சியாக இருக்கும். ஆனால் நடந்துதான் இருக்கிறது இப்படியான சோக நிகழ்வுகள்.

அவர் எழுதிய இன்னொரு நூலின் பெயர் 'தமிழர்கட்கு ஏன் ஒரு நாடு வேண்டும்?'

இந்த இராசரத்தினம்தான் தமிழ்நாட்டில் உள்ள கலைஞர் கருணாநிதி, எம்.ஜி.ஆர்.போன்ற தலைவர்களை 1972இல் தந்தை செல்வநாயகம் சந்திக்க வழி செய்தவர்.

தந்தை செல்வா,' தளபதி அமிர் ஆகியோர் தமிழகத் தலைவர்களை சந்தித்த புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன.

கூட்டணியின் தேர்தல் பிரசாரங்களுக்கு 1977வரை அந்த புகைப்படங்கள் பேருதவி செய்தன.

ஆனால், 1973ல் மீண்டும் தமிழகத்திற்கு சென்ற இராசரத்தினத்திற்கு எந்தவொரு தமிழகத் தலைவரும் உதவ முன்வரவில்லை.

பசி, பட்டினி! தொய்வுநோய் வேறு அவரை வாட்டியது.

ஒருநாள் அதிகாலை 1.30மணிக்கு தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு தலைவர் அமிர்தலிங்கத்தோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டார் இராசரத்தினம்.

தனது கஸ்டத்தை எடுத்துச் சொன்னார். தமிழீழ முதல்வர் என்றும் தளபதி என்றும் அழைக்கப்பட்ட அமுதர் ஒரே வார்த்தையில் சொன்ன பதில்:

**"பணம் அனுப்ப வசதியில்லை!"**

இராசரத்தினம் குடும்பஸ்தர். அப்பா எங்கே என்று பிள்ளைகள் தேடுமே? பாசம் இருக்காதா? அங்கே இங்கே பணம் திரட்டி ஐந்து மீற்றர் துணி வாங்கினார்.

அப்போது சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் கர்மவீரர் என்றழைக்கப்பட்ட வ.நவரத்தினம்.

அவரது மனைவி திருமதி நவரத்தினம்

இதில் இன்னொரு வேதனை, அமுதரின் மகன் காண்டிபன் தமிழ்நாட்டில் இருந்தபோது இராசரத்தினம் சாப்பாடு போட்டிருக்கிறார்.

பட்டினிக் கொடுமை நோயை வளர்த்துவிட 1975ல் காலமானார் இராசரத்தினம்.

### செத்தபின் மரியாதை

அவரது உடல்மீது கூட்டணியினர் உதயசூரியன் கொடியைப் போர்த்திவிட்டுச் சொன்னது இது:

"இலங்கைத் தமிழர்களின் நேதாஜி இங்கே உறங்கிறார்"

நேதாஜி என்பது இந்திய சுதந்திரப் போரில் தேசிய இராணுவத்தை உருவாக்கிய சுபாஸ் சந்திரபோசை குறிக்கிறது.

புலிகளுக்கு தெளிவாகத் தெரிந்திருந்தது.

அந்த விபரங்களை சொன்னவர் மக்கள் வங்கியில் காசாளராக இருந்த சபாரத்தினம்.

இந்த சபாரத்தினம்தான் தற்போது விடுதலைப் புலிகள் அமைப்பின் நிதிப் பொறுப்பாளராக இருக்கிறார். ரஞ்சித் அப்பா என்று அழைக்கப்படுகிறார்.

1978 டிசம்பர் 5ம் திகதி காலை நேரத்தில் மக்கள் வங்கிக்குள் புலிகள் புகுந்தார்கள்.

பாதுகாப்புக்காக இருந்த பொலிஸ்காரரின் துப்பாக்கி பறிக்கப்பட்டதுடன் நடவடிக்கை ஆரம்பித்தது.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அமைதி வலயமாகவேண்டிய யாழ்ப்பாணம்

அலசுவது-இராஜதந்திரி

# தமிழர்கள் வலியுறுத்தும் தாயகக் கோட்பாடு



**போ**ர் தவிர்ப்பு ஒப்பந்தம் சந்திரிகா அரசைப் பொறுத்தவரை ஒரு வெற்றியாகவே கருதப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே.பிரபாகரன் இலங்கைத் தலைவர் ஒருவருடன் கைச்சாத்திட்ட முதலாவது ஒப்பந்தமும் இதுவே என்று சந்திரிகா குறிப்பிட்டிருந்தார்.

போர் தவிர்ப்பு ஒப்பந்தம், கடந்த எட்டாந் திகதி அமுலுக்கு வந்தது முதற்கொண்டு , பெரியளவிலான மோதல்கள், கடல், தரை, ஆகாய மார்க்கமாக இடம்பெறாதிருக்கக் காணப்படுகின்றது.

இரு சாராருமே தமது ஆயுதங்களுக்கு ஓய்வைக் கொடுத்திருக்கின்றனர். இந்த ஓய்வு நிரந்தரமானதொன்றாக இருக்கவேண்டுமென்பதே இதுவரை காலமும் போரினால் அல்லலுற்ற மக்களின் பிரார்த்தனையாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் அவ்வப்போது போர் நிறுத்தம் என்று பேசப்பட்டு தாக்குதல்களும் இடைநிறுத்தப்பட்டதுண்டு. ஆனால் அப்போர் நிறுத்தங்கள் வெறுமனே கண்துடைப்பாகவும், ஒரு நல்ல புரிந்துணர்வைக் கொண்டிராதவையாகவுமே இருந்தன.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் வே. பிரபாகரனுக்குமிடையே கைச்சாத்தாகியுள்ள போர் தவிர்ப்பு ஒப்பந்தமென்பது, போர் நிறுத்தமளவுக்கு முக்கியமானதாக இல்லாத போதிலும், இரு முக்கியஸ்தர்களினால் கைச்சாத்தான ஒப்பந்தம் என்ற ரீதியில் சற்று கனம்மிக்கதாகவே விளங்குகின்றது.

இப்போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே வடபகுதியின் புனரமைப்பு, மற்றும் வடக்கு,கிழக்குப் பிரச்னைக்கான தீர்வுத் திட்டம் என்பனவற்றைக் கட்டியெழுப்புவது குறித்து ஜனாதிபதி சந்திரிகா தமது கற்பனைகளை சிறகடித்துப் பறக்கவிட்டவராக இருக்கின்றார்.

கற்பனைகள் எப்போதும் அழகானவையாகவே இருக்கும். ஆனால் அவை நிஜமாகி செயல்வடிவம் பெறுவதிலேயே அனைத்து வெற்றியும் தங்கியுள்ளது.

போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை எடுத்து நோக்கும்போது, அந்த ஒப்பந்தம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு உரிய கௌரவத்தை வழங்கியிருக்கக் காணப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா தமக்குக் கீழ்ப்பட்ட ஒருவர் மூலமாக அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை. தாமாகவே அதில் கைச்சாத்திட்டு, மறுபுறம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே.பிரபாகரனையும் அந்த ஒப்பந்தத்தில் சந்திரிகா கைச்சாத்திடச் செய்ததன் மூலம், தம்முடன் திரு.பிரபாகரனையும் 'சரியாசனம்' வைத்திருக்கக் காணப்படுகின்றார்.

போர் தவிர்ப்பு ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து வடக்கே பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுப்பது குறித்து அரச தரப்பினர் விளக்கமளித்துள்ளனர்.

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக போரினால் சின்னா பின்னப்பட்டுப்போயுள்ள வட பகுதியை முழு அளவில் அபிவிருத்தி செய்து புனரமைப்பதாகவே இருக்கின்றது.

யாழ் குடாநாட்டை பொறுத்தவரை அனைத்துமே சீரழிந்துபோயிருக்கக் காணப்படுகின்றது. கட்டிடங்களைப் புதுப்பிக்கலாம், புதியனவற்றைக் கட்டியெழுப்பலாம். ஆனால் கொடிய போரினால் தமது சொந்த, பந்தங்களை இழந்து பரிதவித்து ஒரு நிரந்தர சமாதானத்துக்காக ஏங்குவோரின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யவேண்டியதே அரசினதும், மற்றும் வடக்கு,கிழக்குப் பிரச்னையுடன் சம்பந்தப்பட்ட அனைவரினதும் தலையாய பணியாக இருக்கின்றது.





இலங்கை இனப்பிரச்னையைப் பொறுத்தவரை பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன; பல உடன்பாடுகள் காணப்பட்டன. பல்வேறு பேச்சுக்களும் நடத்தப்பட்டன. ஆனால் அவை அனைத்துமே நிலைமைகளை மேலும் மோசமாக்கினவே தவிர எந்தவொரு வகையிலும் சுமுகமான தீர்வுகள் கிட்டியிருக்கவில்லை.

மிக அண்மைக் காலங்களில் கைச்சாத்தான இலங்கை இந்திய ஒப்பந்தமும் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஒரு தீர்வைக் காணத் தவறியிருந்தது.

அந்த ஒப்பந்தத்தில் காணப்பட்ட அம்சங்கள் ஒரு பரந்துபட்ட தீர்வையும், புனர்வாழ்வுத் திட்டங்களையும் உள்ளடக்கியதாக இருக்கலாம். ஆனால் அவ்வொப்பந்தம் வடக்கு-கிழக்குப் 'பிரச்னையுடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்துவதாகக் காணப்படவில்லை.

கூடவே ஓர் அமைதி ஒப்பந்தமென இலங்கை-இந்திய ஒப்பந்தம் அழைக்கப்பட்டபோதிலும் அது அமுலாக்கப்பட்ட விதம் வடக்கு-கிழக்கில் நிலவிய சிறிதளவு அமைதியையும் குலைத்துவிடுவதாகவே காணப்பட்டது.

பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம் என வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக கடந்த காலங்களில் கொண்டுவரப்பட்ட முக்கிய ஒப்பந்தங்கள் கறிக்குதவாத ஏட்டுச் சுரக்காய்களாகவே இருந்தன.

பேரினவாதக் கும்பல்களின் கெடுபிடிகள், மற்றும் அந்த ஒப்பந்தங்களின் அரைவேக்காடான தன்மைகள் என்பன ஒரு முற்றுமுழுதான தீர்வை எட்டத் தவறியிருந்தன.

இந்நிலையில் தற்போது சந்திரிகா அரசு, வடக்கு-கிழக்குப் பிரச்னை தொடர்பாக அனைத்தையுமே புதிய கண்ணோட்டத்துடன் நோக்குவதுபோல காணப்படுகின்றபோதிலும், கடந்த 6ம்திகதி இடம்பெற்ற சந்திரிகாவின் பாராளுமன்ற கூட்டத் தொடர் திறப்பு விழா உரை அவரது சிந்தனைகளை பின்னோக்கிச் சிறகடிக்கச் செய்வதாகவும் இருக்கக் காணப்படுகின்றது.

## காலம் கடந்துவிட்ட பண்டா செல்வா ஒப்பந்தம்

வடக்கு-கிழக்குப் பிரச்னை தீர்வு குறித்த விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா, 30 வருடங்களுக்கு முன்னர் தமது தந்தையார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவுக்கும், எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துக்குமிடையே கொண்டுவரப்பட்ட பண்டா-செல்வா ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஒப்பந்தத்தைத் தழுவிய முறையில் புதிய சமாதானத் திட்டத்தை கொண்டுவர தாம் உத்தேசித்திருப்பதாக சந்திரிகா தனது பாராளுமன்ற 'சிம்மாசன' உரையில் கூறியிருந்தார்.

வரலாறாகிப்போன விடயங்கள் எமக்கொரு படிப்பினையாக இருக்க முடியுமே தவிர, எவ்வகையிலும் அவற்றை இன்றைய காலகட்டத்தில் இணைத்துக்கொள்வதென்பது பொருத்தமற்றதாகவே இருக்கும்.

மோட்டார்கார்கள் மனிதரின் வாழ்க்கையில் இன்று மிகவும் இன்றியமையாதவை. இந்நிலையில் அதி வேகமான, பல்வேறு நவீன அம்சங்களுடன் கூடிய மோட்டார்கார்கள் இருக்கும்போது, மிகவும் பழைய துருப்பிடித்த ஒரு காரை இன்றைய தேவைக்காகப் பயன்படுத்த முனைவது போலவே பண்டா-செல்வா ஒப்பந்தத்தை அமுல்படுத்துவது குறித்த உத்தேச நோக்கமும் காணப்படுகின்றது.

மோட்டார் காரொன்று ஓடுவதற்கு எஞ்ஜின், நான்கு சக்கரங்கள், ஆசனங்கள், எரிபொருள் என்பன அடிப்படை அம்சங்களாக இருக்கின்றன.

எனவே பண்டா-செல்வா ஒப்பந்தமும் வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வுக்கான அடிப்படை அம்சங்கள் பலவற்றைக் கொண்டிருக்கலாம்.

ஆனால் 20ம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் வடிவமைக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தை, தற்போது இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் சிந்திப்பதென்பது எம்மை நாம் பின்னோக்கிக் கொண்டு செல்வதாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில் இன்று தேவைப்படுவது பண்டா-செல்வா ஒப்பந்தமோ, அல்லது டட்லி-செல்வா ஒப்பந்தமோ அல்ல; வடக்கு-கிழக்கு பிரச்னையில் இன்று சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்புக்களுக்கேற்ற வகையில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு ஒப்பந்தமே இன்று அவசியமானதாகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களையடுத்து அரச தரப்பினர் கருத்து வெளியிட்டபோது, வடபகுதியின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கென சுமார் 4 ஆயிரம்கோடி ரூபா செலவிட உத்தேசித்திருப்பதாக தெரிவித்திருந்தனர்.

இலங்கை ஒரு குபேர நாடல்ல. அத்துடன் வடக்கிற்கு செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ள 4 ஆயிரம் கோடி ரூபா ஜனாதிபதி சந்திரிகாவின் முதுசமுமல்ல.

இந்நிலையில் வடபகுதிக்கு உண்மையிலேயே சந்திரிகா அரசு குறிப்பிட்டதுபோல் 4 ஆயிரம் கோடி ரூபாவை செலவிட நேரிட்டால் அப்பெருந் தொகைப் பணத்தை இலங்கை அரசு 'பிச்சாடனர்' வேடந்தரித்தே பெறவேண்டியதாக இருக்கும்.

சமரச முயற்சிகளும், புனரமைப்பு நடவடிக்கைகளும் சமாந்தரமாகவே மேற்கொள்ளப்படும் என்று அரச தரப்பினர் தெரிவித்துள்ளனர். ஆனால் இந்த சமாந்தர நிலையில் சமரச முயற்சிகளே முக்கியம்பெற வேண்டியது இன்றியமையாததாகின்றது.

வடக்கு-கிழக்கு மக்கள் மேற்கொண்டுவரும் போராட்டமானது அவர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுப்பதாகவும், அவர்களது தனித்துவம், தாயகக் கோட்பாடு என்பவற்றை நிலைநாட்டுவதாகவுமே இருக்கின்றது. வடக்கு-கிழக்கில் யுத்த நிலைமை ஆரம்பமாகு முன்னர் காணப்பட்ட சூழ்நிலையை ஒரு கணம் மனதில் நிறுத்தினால், அப்பிரதேசங்களில் அமைதி தாண்டவமாடியிருந்ததையே நன்கு உணர்ந்துகொள்ள முடியும்.

வடக்கு-கிழக்கு மக்கள்- கல்வி, விவசாயம், மற்றும் சிறு கைத்தொழில்களில் ஈடுபட்டு தமது மேம்பாட்டைப் பேணி வந்தனர்.

வீண் டாம்பீகங்களிலோ, அல்லது 'ஹைகிளாஸ்' வாழ்க்கை முறையிலோ அவர்கள் எக்காலத்திலும் துவண்டதோ அல்லது நம்பிக்கை வைத்ததோ கிடையாது.

கோயில்கள், குளங்கள், பாடசாலைகள், விளை நிலங்கள், மற்றும் கடல் பிரதேசங்களை அண்டியதாகவே அவர்களது வாழ்க்கை வட்டம் பெரிதும் சுழன்றுகொண்டிருந்தது.

இத்தகைய அமைதியான சூழற்சியில் ஒரு சூறாவளியை ஏற்படுத்தி அவர்களது சொந்த-பந்தங்கள், சுற்றாடல் என்பவற்றை நிர்மூலமாக்கி ஆழமான வடுக்களை ஏற்படுத்தியதாகவே கடந்த ஒரு தசாப்த கால யுத்தம் விளங்குகின்றது.

சந்திரிகா அரசு யாழ்ப்பாணத்தை ஆசியாவிலேயே ஒரு தலை சிறந்த நகரமாக மாற்றியமைக்கப்போவதாக அறிவித்துள்ளது.

ஆனால் ஆசியாவில் மட்டுமல்ல, முழு உலகிலும் ஒரு மாண்புமிக்க நகரமாகவே யாழ் குடாநாடு விளங்கியிருந்தது.

இம் மண்ணின் மைந்தர்கள் காலத்துக்குக் காலம் உலகளாவிய ரீதியில் மிகவும் கீர்த்திபெற்றவர்களாகவே இருக்கக் காணப்படுகின்றனர்.

மறைந்த முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி வர்த்தக அமைச்சராக- ஜே.ஆர்.ஆட்சியில் பணியாற்றியபோது யாழ்ப்பாணத்துக்கு ஒரு தடவை விஜயம் செய்திருந்தார்.

அப்போது அங்கு அவர் சுற்றுப் பயணம் செய்த பின்னர் இலங்கையிலேயே மிகவும் துப்பரவான-நேர்த்தியான தன்மைகளைக்கொண்டதாக யாழ்ப்பாண நகரம் காட்சியளிக்கின்றதென கருத்து வெளியிட்டிருந்தார்.

ஆனால் இப்படிக் கூறிய லலித் அத்துலத் முதலியின் காலத்திலேயே யாழ்ப்பாண நகரம் தவிடுபொடியாக உருக்குலைய ஆரம்பித்தது.

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் என்ற பொறுப்பை ஏற்று லலித் அத்துலத் முதலி யாழ்ப்பாணத்துக்கு மேலாக ஆகாயத்தில் பறந்து திரிந்து இராணுவ நடவடிக்கைகளுக்கு உரமூட்டியிருந்தார்.


ஹெலிகொப்டர்கள், பொம்பர்கள், ஆட்டிலறித் துப்பாக்கிகள் என்று யாழ்ப்பாணத்தின் மூலை முடுக்குகளையெல்லாம் நாசகார குண்டுகள் பதம்பார்த்திருக்கக் காணப்படுகின்றன. இத்தனை அழிவுகள், அனர்த்தங்களுக்கு மத்தியிலும் உறுதியாகத் தொடர்ந்த ஆயுதப் போராட்டங்கள் யாழ்ப்பாணத்தின் புனரமைப்பையோ, அல்லது நிர்க்கதிக்குள்ளானவர்களுக்கு நிவாரணத்தையோ வலியுறுத்தி நிற்கவில்லை.

மறுக்கப்பட்ட உரிமைகள், தனித்துவங்களை வேண்டி நிற்பதாகவே இன்றைய வடக்கு நிலவரம் காணப்படுகின்றது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தையும் அதனோடிணைந்த ஏனைய வடக்கு-கிழக்குப் பிரதேசங்களையும், அடிப்படை மனித உரிமைகள் மதிக்கப்பட்ட சிறுபான்மையின மக்களின் தனித்துவங்கள், சுயநிர்ணய உரிமைகள் பாதுகாக்கப்பட்ட ஓர் அமைதி வலயமாக மாற்றுவதே சந்திரிகா அரசின் தலையாய பணியாக இருக்கின்றது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# பாப்பரசரின் கனவும்-பாரெங்கும் நடக்கும் சதியும்!



## மணிலா விஜயத்தில் தொடர் கொலை முயற்சிகள்?

உலகெங்குமுள்ள ரோமன் கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் பாப்பரசரானது 1978 அக்டோபர் 16ம் திகதி.

பிறந்தது போலந்திலுள்ள வடோவைஸ் என்னும் சிற்றூரில்.

சொந்தப் பெயர் கரோல் ஒஜ்ரியாலா. மாணவப் பருவத்திலேயே துறவறம் பூண ஆசைப்பட்டார்.

### பாப்பரசர் சில குறிப்புக்கள்

பாப்பரசருக்கு 9 வயதில் ஏற்பட்ட மிகப்பெரிய சோகம் தனது தாயாரை இழந்தது! 21 வயதானபோது மற்றொரு இடி! தந்தையை பறிகொடுத்தார்! ஒரேயொரு சகோதரர் மட்டும் இருந்தார். மருத்துவராக இருந்த அந்த சகோதரரும் இறந்துவிட்டார். வறுமையான இளமைக்காலம்!

இரண்டாம் உலகப் போர் காலத்தில் ஜெர்மன் பாசிஸ்டுக்களின் அடக்குமுறை துரத்தியது. தலைமறைவாக இருந்து நாடகங்கள் தயாரித்து அரங்கேற்றியமை துணிச்சலின் முத்திரை.

தினமும் அதிகாலை 5.30 மணிக்கு எழுந்துவிடுவார். தூங்குவது எப்போதும் இரவு 11.30 மணிக்குத்தான்.

பகல் தூக்கப் பழக்கம் இல்லாத பாப்பரசருக்கு மதிய உணவு முடிந்ததும் 30 நிமிடமாவது ஓய்வெடுக்கும்படி கண்டிப்பாக கூறியுள்ளார்கள் மருத்துவர்கள்.

பாப்பரசருக்கு இப்போது 75 வயதாகி விட்டது. 8 மொழிகளில் பரிச்சயம் இருக்கிறது. ஏராளமான நூல்களை எழுதியிருக்கிறார்.

### பாப்பரசரின் கனவு

2000ம் ஆண்டுவரை நிச்சயமாக வாழவேண்டும் என்று விரும்புகிறார் பாப்பரசர்.

அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

2000ம் ஆண்டின் ஆரம்பத்தில் சகல கிறிஸ்தவ மதப் பிரிவுகளையும் ஒன்றிணைத்துவிட முடியும் என்று கனவு காணுகிறார்.

### வழக்கத்தை மாற்றினார்

கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக இத்தாலியைச் சேர்ந்தவர்களும், அதனுடன் தொடர்புடைய மத்திய தரைக் கடல் பிராந்தியத்தை சேர்ந்த நாடுகளைச் சேர்ந்தவர்களுமே பாப்பரசர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர்.

ஆனால், இன்றைய பாப்பரசரான இரண்டாவது அருளப்பர் சின்னப்பர்தான் அந்த எல்லைக்கு வெளியே உள்ள போலந்தில் இருந்து தெரிவாகி புதுமை செய்தார்.

### கடிதம் எழுதும் பெண்

பாப்பரசர் மாணவனாக இருந்தபோது நடத்திய நாடகங்களில் கதாநாயகியாக நடித்தவர் மிச்சலோவுஸ்கா என்னும் பெண்.

பாப்பரசராக தெரிவானவுடன் ஆனந்தக் கண்ணீர் விட்டார் மிச்சலோவுஸ்கா. உடனே ஒரு வாழ்த்துக் கடிதம் அனுப்பினார்.

"உனக்கு எங்கே அவர்பதில் போடப் போகிறார். மறந்திருப்பார் உன்னை" என்றனர் பலர்.

ஆனால் பாப்பரசர் மறக்கவில்லை. தனது கைப்படவே கடிதம் எழுதி அனுப்பினார். இன்றும் இருவரும் அடிக்கடி கடிதம் எழுதிக்கொள்கின்றனர்.

அது மட்டுமல்ல தனது இளமைக் காலத்தில் உதவியவர்களை மறக்காமல் தன்னோடு வைத்திருந்து வத்திக்கானில் பணியில் ஈடுபடுத்தியுள்ளார் பாப்பரசர்.

### குட்டி இராச்சியம்

இத்தாலி நாட்டில் ரோம் நகரில் ஒரு தனிராச்சியம் போலவே இருந்து வருகிறது வத்திக்கான்.

இங்குள்ள மாளிகையில்தான் பாப்பரசர் பதவிக்கான தேர்தல் நடைபெறும்.

தேர்தல் என்று சொல்லப்பட்டாலும் வழக்கமான தேர்தலை நினைத்துவிடக்கூடாது.

ஆள் பிடிக்கும் வேலை, பிரசாரம் செய்வது, தம்மை ஆதரிக்குமாறு கோருவது என்று எதுவும் கிடையாது.

உலகம் முழுவதிலுள்ள 'கர்தினால்கள்' என்றழைக்கப்படும் பாப்பரசருக்கு அடுத்த நிலையில் மதிக்கப்படுபவர்கள் ஒன்று கூடுவார்கள்.

ஒவ்வொருவரும் தமக்குள் எதுவும் பேசமுடியாது. ஒரு சிறு அறைக்குள் இருந்து தாம் தெரிவு செய்ய விரும்புகிறவரின் பெயரை சீட்டில் எழுதி வாக்குப் பெட்டியில் போட்டுவிட வேண்டும்.

அதுதான் தேர்தல் முறை! 117 கருதினால்கள் கூடியதில் 99சதவீத வாக்குகள் பெற்று தெரிவானார் தற்போதைய பாப்பரசர்.

பாப்பரசர் என்பது ஆயுட்காலப் பதவி. விரும்பினால் இடையில் விலகிக்கொள்ளலாம். 1124ம் ஆண்டில் பாப்பரசர் செலண்ரைன் மட்டுமே பதவி விலகினார்.

### பாப்பரசருக்கு எதிரான சதி

1981 மே 16ம் திகதி வத்திக்கானிலுள்ள சென் பீட்டர்ஸ் தேவாலயம் முன்பாக இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

பாப்பரசர் ஆசிர்வாதம் வழங்கிக் கொண்டிருந்தார்.

திடீரென்று வேட்டுச் சத்தங்கள் கேட்டன. பாப்பரசர் மயங்கிச் சரிந்தார். மருத்துவமனைக்கு கொண்டுசென்றார்கள்.

சத்திர சிகிச்சையின்பின் உயிர் தப்பினார் பாப்பரசர்.

கொலை முயற்சியில் ஈடுபட்டவன் மடக்கிப் பிடிக்கப்பட்டான். 25 வயதான துருக்கி இளைஞன். பெயர் அலி அகர்.

'சாம்பல் ஓநாய்கள்' என்ற குழுவைச் சேர்ந்தவன் என்று வாக்குமூலம் கொடுத்தான் அந்த இளைஞன்.

என்றாலும் முன்னுக்குப் பின் முரண்பாடாக பேசினான். பல்கேரியா குழுவே தன்னை ஏவியதாக சொன்னான்.

தன்னைக் கொல்ல முயன்றவனை 1983 டிசம்பரில் சந்தித்தார் பாப்பரசர். அவனுக்கு மன்னிப்பு வழங்கினார்.

மன்னிப்பு வழங்கிய பாப்பரசர் "உன்னை தூண்டிவிட்டது யாரப்பா?" என்று கேட்டார்.

அவன் வாயே திறக்கவில்லை.



வத்திக்கானில் பாப்பரசர்



தனியறையில் அமர்ந்து எழுவது வழக்கம்

### தொடர் சதிகள்

பாப்பரசர் உயிருக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய சக்திகள் இப்போதும் இல்லாமல் இல்லை.

அதனால் பாப்பரசருக்கு தனிப்பட்ட பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

குண்டு துளைக்காத காரில்தான் பாப்பரசர் பயணம் செய்வார். சமீபத்தில் பழைய குண்டு துளைக்காத காருக்குப் பதிலாக புதிய கார் ஒன்று வாங்கப் பட்டுள்ளது. இது முன்னையதைவிட குண்டுகளை தாங்கும் சக்தி அதிகமுள்ளது என்று கூறப்படுகிறது.

புரட்டஸ்தாந்து மத தீவிரவாதிகள் பாப்பரசருக்கு எதிராக கடும் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார்கள்.

குண்டு துளைக்காத காரில் பாப்பரசர் பயணம் செய்வதை கண்டித்துள்ள பிலிப்பைன்சிலுள்ள புரட்டஸ்தாந்து தீவிரவாத குழு கூறியுள்ள கருத்து இது

"இயேசுநாதர் கழுதையின்மீது சென்றுதான் பிரசாரம் செய்தார். பாப்பரசருக்கு எதற்கு குண்டு துளைக்காத கார்?"

ஒரே மதத்துக்குள் இவ்வாறான காரசாரமான கருத்து மோதல்கள்.

ஆனால் பிலிப்பைன்சில் 85 வீதமானோர் கத்தோலிக்கர்கள்.

### துப்பாக்கி மனிதன் கைது

சமீபத்தில் பாப்பரசர் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு சென்றார். அங்குதான் அவருக்கு எதிரான தீவிரவாதக் குழுவும் இருக்கிறது.

மணிலாவில் பாப்பரசர் வருகையை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டது.

பாப்பரசர் தங்கியிருக்க தீர்மானிக்கப்பட்ட இடத்திற்கருகே குண்டுகளை தயாரித்துக்கொண்டிருந்த ஒருவர் மடக்கப்பட்டார். அவரிடம் நான்கு குண்டுகள் இருந்தன.

கிறிஸ்தவ மத குருமார் அணியும் ஆடையும் அங்கு இருந்தது. அதனால் பாப்பரசருக்கு எதிரான சதியே அது என்று சந்தேகிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர் பாகிஸ்தான் நாட்டவர் என்று தெரியவருகிறது.

பொலிஸ் தொடர்ந்தும் விழிப்பாக இருந்து கண்காணித்தது.

பிலிப்பைன்சில் பாப்பரசர் கார் பவனியில் சென்றபோது மக்கள் வீதிகளில் திரண்டிருந்தனர்.

அவர்கள் மத்தியில் துப்பாக்கியோடு நின்ற ஒருவனை பொலிசார் பிடித்தார்கள்.

அவன் பிடிக்கப்பட்ட சில நிமிடங்களில் பாப்பரசரின் கார் துப்பாக்கி மனிதன் காத்து நின்ற இடத்தைக் கடந்து சென்றது.

ஒரு வேளை அவன் மடக்கப்படாமல் இருந்திருந்தால்...?

### 109 பயங்கரவாதிகள்

பாப்பரசர் இலங்கை வருவதை முன்னிட்டு 109 சர்வதேச பயங்கரவாதிகளது படங்களை பாப்பரசரது பாதுகாப்புப் பிரிவு அனுப்பி வைத்துள்ளது.

ஏற்கனவே பிலிப்பைன்ஸ் அரசுக்கும் அந்த படங்கள் அனுப்பிவைக்கப் பட்டிருந்தன.

உலகளாவிய ரீதியில் பாப்பரசருக்கு எதிரான சதி முயற்சியாளர்கள் இருக்கிறார்கள் என்று நடைபெற்று வரும் சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

பாப்பரசர் ஒன்றும் அரசியல் தலைவரல்ல. மதத் தலைவர்.

அவருக்கு எதிரான சதிகள் நாகரிக உலகில் வெறுப்புக்குரியவை.

## ஒரு அழகி ஒரு அமைச்சர் ஒரு டாக்டர்

## உலகைக் குலுக்கிய உளவுச்சதி

எம்.ஐ.5 பிரிட்டிஷ் உளவு நிறுவனங்களில் முக்கியமானது.

எம்.ஐ.5.இன் இயக்குநர் சேர் றோகர் ஹொவ்லிஸ் அமைச்சரவை செயலாளர் முன்பாக அமர்ந்திருந்தார்.

"நீங்கள் சொல்வதெல்லாம் உண்மையா? றோகர்?"

அமைச்சரவை செயலாளர் கவலை யோடு கேட்டார்.

"மாபெரும் உண்மை! அழகி கீலர் ஆடைகளை அவிழ்க்கிறாள். அமைச்சர் அரசாங்க இரகசியங்களை அவிழ்க்கிறார்."

"அட...கடவுளே! அமைச்சர் ஜோன் புரோஃபூமாவா இப்படி?"

அமைச்சரவை செயலாளர் முகத்தில் கவலையின் ரேகைகள். எம்.ஐ.5 இயக்குநர் மெல்லப் புன்னகைத்தார்.

"கீலர் வித்தையைக் காட்டுகிறாள். நம் அமைச்சர் விஷயத்தைக் கக்குகிறார். அமைச்சருக்கு அரசாங்கத்தைவிட அழகியின் அந்தரங்க ராச்சியம்தான் முக்கியம் என்று நினைக்கிறேன்."

"ஓ...! ஆண்டவா..! என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் நீங்கள்?"

"எம்.ஐ.உளவாளிகள் அமைச்சரை நிழலாய் தொடருகிறார்கள்."

"குட்! வேறு ஒரு பெயர் சொன்னீர்களே. சோவியத் உளவாளி.."

"யெஸ்! இவானோவ் இயுஜின்!"

"ஆம்... அந்த இவானோவ்... அவன் எங்கே... அவனையும்.."

"கண்காணிக்கிறோம். தொடர்கிறோம். இப்போது இவானோவ் அழகி கீலரின் துணியில்லாத உடம்பைத் தொட்டுக்கொண்டிருப்பான்!"

"அதுவல்ல முக்கியம். நமக்கு தேவையான இரகசியங்களை கொட்டிக்கொண்டிருப்பானா?"

"அதுதான் இல்லை!"

உண்மைச் சம்பவத்தை தனது பாணியில் தருவது

ரசிகன்



### அழகி கீலர்

"ஏன்?"

"அவன் யமகாதகன்! இன்பக் கேணியில் நீந்தும் போதும் இதயத்தை பூட்டியே வைத்திருக்கிறானாம். அமைச்சர் மூலம் அமெரிக்கா ஜெர்மனுக்கு அனுப்பும் அணு ஆயுத விபரங்களை அறிவதில்தான் பிடிவாதமாய் இருக்கிறான்."

"டாக்டருக்கு சோவியத் விசா?"

"ஆயுத இரகசியம் தன் கைக்கு வந்தபின்னர்தான் விசா டாக்டரிடம் கைக்கு வரும் என்றுவிட்டானாம்."

அமைச்சரவை செயலாளர் அலுத்துக் கொண்டார். தன் விரல்களால் நெற்றியைத் தேய்த்துக்கொண்டார்.

□□

"அமைச்சர் ஜோன் புரோ ஃபூமா அழகி கீலருடன் சல்லாபம்! அரசாங்க இரகசியங்கள் அழகியின் கட்டிலறையில் அவிழ்க்கப்படுகின்றன."

பிரிட்டிஷ் எதிர்க்கட்சியின் காதுக்கு எட்டியது செய்தி!

அப்போது எதிர்க்கட்சியாக இருந்தது தொழிற்கட்சி.

பிரிட்டிஷ் பத்திரிகையாளர்கள் டாக்டரின் மாளிகையை சுற்றி வட்டமிட்டனர்.

செய்திகள் புயல் கிளப்ப அரசாங்கம் ஆட்டம் கண்டது.

"அழகி கீலருக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை, தொடர்பும் இல்லை. எல்லாமே கட்டுக்கதை. எதிர்க்கட்சியின் அழகான கற்பனை. மதிப்புக்குரிய எதிர்கட்சி தலைவர் நண்பர் ஹரோல்ட் வில்சன் அரசியல் நடத்துவதை விடுத்து சுவாரசியமான நாவல்கள் எழுதிப் பிழைக்கலாம்."

என்ற தொனியில் மறுத்துப் பேசினார் அமைச்சர் ஜோன் புரோஃபூமா.

1963 மார்ச் 22ல் எதிர்க்கட்சித் தலைவர் ஹரோல்ட் வில்சன் மக்கள் சபையில் ஒரு அறிக்கை

### சென்றவாரத் தொடர்

சமர்ப்பித்தார்.

பாதுகாப்பு யுத்தத்துறை அமைச்சராக இருப்பவர் ஜோன் புரோஃபூமா. சாதாரண பதவியல்ல அது. நம் நாட்டின் பாதுகாப்பை படுக்கையறையில் தொலைத்துக்கொண்டிருக்கிறார் அமைச்சர்.

நாடெங்கும் எதிர்ப்பு. பணிந்தது நாடாளும் கட்சி!

□□

அழகி கீலர் கால்மேல் கால்போட்டு அமர்ந்திருந்தாள். கமராக்கள் பளிச்பளிச்.

எந்தக் கோணத்தில் எடுத்தாலும் கவர்ச்சியாகவே தெரிந்தாள். பத்திரிகைகளில் படத்தை பார்த்த இளைஞர்கள் கிறங்கிப் போனார்கள்.

காபரே அழகியாக வாழ்க்கையைத் தொடங்கிய கீலர் கனவுக்கன்னியாக மாறினாள்.

"அமைச்சர் மறுக்கிறார்; உங்களுடன் தொடர்பே இல்லையாமே?"

நிருபர்கள் கேட்டனர். கீலர் தன் நாவால் உதடுகளை ஈரப்படுத்திவிட்டுச் சிரித்தாள். நிருபர்களும் அசந்து போனார்கள்.

"அப்படியா சொல்கிறார்?"

"யெஸ் மேடம்!"

"அமைச்சர் பொய் சொல்வது தவறாயிற்றே!"

"தவறுதான். பொய் என்று நிரூபிக்க முடியுமா?"

"ஏன் முடியாது?"

"எப்படி?"

"இப்படித்தான்"

கீலரின் கரத்தில் ஒரு கடிதம் இருந்தது. நிருபர்கள் பாய்ந்துசென்று வாங்கிப் படித்தனர்.

அது அமைச்சர் அழகி கீலருக்கு தன் கைப்படவே எழுதியிருந்த கடிதம். காதல் கடிதம்!

கீலர் கண்களை விரித்துப் பார்த்து சிரித்தாள். ஆபத்தை உள்ளே மறைத்துவைத்திருக்கும் அழகு சிரித்தால் எப்படியிருக்கும் என்பதை நிருபர்கள் நேரில் கண்டனர்.

"இப்போது அமைச்சர் என்ன சொல்லப் போகிறார்? கேளுங்கள்."

என்றாள் கீலர்.

" 23000 பவுண் தருகிறோம். உங்கள் காதல் கதையைச் சொல்லுங்கள்.

என்று கேட்டது ஒரு பத்திரிகை! அத்தனை தூரம் கீலர் விவகாரம் உலகெங்கும் சூடு பிடித்திருந்தது.

□□

பத்திரிகைகளில் அமைச்சர் அழகிக்கு எழுதிய காதல் கடிதம்வர அரசாங்கம் இறுதி ஆட்டம் கண்டது.

1963 ஜுன் மாதம். அமைச்சர் ஜோன் புரோஃபூமா தனது அமைச்சர் பதவியைத் துறந்தார்.

அத்தோடு அரசியலுக்கும் முழுக்குப் போட்டார்.

ஆட்சிக்கு அவமானம்! பிரதமர் மாக்மிலன் பிரதமர் பதவியை துறந்து பாராளுமன்றத்தையும் கலைத்தார்.

பொதுத் தேர்தல் நடந்தது. நங்கையின் நளினம் கண்டால் நாட்டையே விற்றுவிடுவார்கள் கன்சர்வேட்டில் கட்சிக்காரர்கள். என்றது தொழிற்கட்சி.

வாக்காளர்கள் அது சரிதான் என்று நினைத்தார்கள். ஜோன் புரோஃபூமா முன்னர் அங்கம் வகித்த சன்சர்வேட்டில் கட்சி தோற்றது.

தொழிற்கட்சி பதவிக்கு வந்தது. அழகி கீலரால் ஆட்சியை இழந்தது கன்சேவேட்டில் கட்சி.

(முற்றும்)

# குறி தவறாமல் வீழ்ந்த உதை


**தகவல்பெட்டி**





## சரிந்தது மாமிச மலை!

## இதுதாண்(டா) 'குங்பூ'



**சா**கசச் செயல்கள் என்ற பெயரால் பார்வையாளர்களுக்கு மகிழ்வூட்டுவதற்காக இப்பொழுது பரவலாகப் பிரபலம் அடைந்துவரும் 'இறுதிவரை மோதல்' எனும் போட்டிகள், இன்றைய மனிதன் பண்டையக் காட்டுமிராண்டித்தனமான காலத்தை நாடிச்சென்று கொண்டிருக்கிறானோ என்ற எண்ணத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

மேடைகளிலும் தொலைக்காட்சிகளிலும் காட்டப்பட்டுவரும் இப்போட்டிகளில், உருக்கினால் வளைத்துத் தடுக்கப்பட்டுள்ள மேடையில் ஒருவரோடு ஒருவரோ அல்லது பலரோ மோதுவார்கள். குத்துச் சண்டை; மல்யுத்தம், குங்பூ, கராட்டி, சுமோ போன்ற சகல முறைகளையும் இவர்கள் எதுவித கட்டுப்பாடுமின்றி பயன்படுத்தலாம். கோதாவினுள் நடுவர் ஒருவர் இருப்பார். இருப்பினும் பங்குபற்றும் போட்டியாளர் குற்றுயிராகி-உயிர் பிரியவேண்டிய கட்டம் நெருங்கினால் மட்டுமே தலையிட்டு இவர்களுடைய மோதல்களைத் தவிர்க்கலாம்.

சிறிதளவுகூட மனிதாபிமானமற்ற முறையில் நடைபெறும் இத்தகைய போட்டிகளை தடுக்கவேண்டும் என்று பலர் கூக்குரலிட்டபோதிலும், இத்தகைய போட்டிகளோ பார்வையாளர்களுக்கு பரவசமூட்டுகின்றன என்று கூறுவோரும் அதிகரித்துள்ளனர்.

இத்தகைய போட்டிகளில்டுபட்டு தலத்திலேயே பலர் உயிரிழந்துள்ளனர். வேறு சிலர் ஊனமுற்றுள்ளனர். இப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்கள் பெறும் சன்மானம் மிகப் பெரிதுதான்.

அண்மையில் 6 அடி 8 அங்குல உயரமான சுமோ மல்யுத்த வீரரான எமானுவல் யார்பரா (588 இறாத்தல் எடை) என்பவருக்கும் 196 இறாத்தல் எடைகொண்ட கீத் ஹக்னேக்குமிடையில் 'இறுதிவரை மோதல்' போட்டி நடைபெற்றது. கீத் ஒரு குங்பூ வீரன். இருப்பினும் மாமிச மலையான எமானுவலை கன வேகத்தில் 50 உதைகள் கொடுத்து மண் கவ்வ வைத்துவிட்டார். அவருடைய மணிக்கட்டையும் விரல் எலும்புகளையும்கூட முறித்துவிட்டார். சிறு எறும்பும் மதயானையை வெல்லும் என்பதை மாமிச மலையைச் சரித்து நிரூபித்துவிட்டார்.

"இந்தப் பெரிய மாமிச மலையுடன் மோதுவதை நினைத்தபோது நான் உண்மையில் பயந்துபோய்விட்டேன். அவருடைய கால் எலும்பை முறித்துவிடலாமா என்று நினைத்தேன். ஆனால் அவருடைய காலை அசைக்கவே முடியாமற்போய்விட்டது" என்கிறார் கீத்.

போட்டியில் வெற்றிபெற்ற கீத் ஹக்னேக்குக் கிடைத்த பரிசுத் தொகை 60,000டொலர் (இலங்கை நாணயப்படி ரூ.29,40,000)



## அவர் முகம் மாறியது அவள்போல!

**அ**டிக்கடி முகத்தில் மாற்றம் செய்பவர் இசைப் புயல் மைக்கேல் ஜாக்சன்.
பிளாஸ்திரி அறுவைச் சிகிச்சை மூலம் முகத்தை அழகுபடுத்தியவர்.
அவருக்கு உலகெங்கும் பல கோடி ரசிக ரசிகைகள் இருக்கிறார்கள்.

மைக்கேல் ஜாக்சனை தொட்டுப் பார்க்கத் துடிக்கும் ரசிகைகள் ஏராளம். ஆனால் மைக்கேல் ஜாக்சன் டயானா ரோஸ் என்னும் பாடகியின் ரசிகர்.
டையானா ரோஸ்போல தனது முகத்தை மாற்றவேண்டும் என்று மைக்கேல் ஜாக்சனுக்கு ஆசையாம்.
டையானா ரோஸ் வசிக்கும் வீட்டுக்கு சென்ற மைக்கேல் ஜாக்சன் அவரது 'மேக்கப்' அறைக்கு சென்று பார்வையிட்டாராம்.
இதனை அறிந்த ஒரு கம்பியூட்டர் மாணவர் தனது கம்பியூட்டரில் ஒரு குறும்பு செய்து பார்த்தார்.
மைக்கேல் ஜாக்சனின் முகம் டையானா றொஸ்ஸின் முகம்போல மாற்றமடைந்தால் எப்படியிருக்கும் என்பதை கம்பியூட்டர்மூலம் உருவாக்கினார். பத்திரிகைகளில் பிரசுரமான இந்தப் படத்தைப் பார்த்து மைக்கேல் ஜாக்சனே வியந்துபோனாராம். நீங்கள் எப்படி?

## ஏக்கத்தால் செத்த ஆமை

படத்தில் இருப்பது ராட்சத ஆமை. 150 வயதுவரை ஆயுள் கெட்டியாக வாழ்ந்து இறந்துவிட்டது இந்த ஆமை. இதன் பெயர் நோட்டுமா.

அவுஸ்திரேலியாவில் பிறந்து இங்கிலாந்தில் வாழ்ந்த இந்த ஆமை 150 வயதுக்கு மேல் வாழ்ந்திருக்கும்.

ஆனால் ஒரு சின்ன பிரச்சனை. அதற்கு தகுந்த ஜோடி எங்கும் கிடைக்கவில்லை. அந்த ஏக்கத்திலேயே இறந்துவிட்டது இந்த இராட்சத ஆமை. என்றாலும் 150 வருசம் பொறுமையாக காத்திருந்துவிட்டுத்தான் செத்திருக்கிறது. ரொம்பத்தான் பொறுமை!



## வானவீதியில் காதல் மாளிகை

திருவிழாவில் குழந்தைகள் பலூன் கேட்டு அழுவதைப் பார்த்திருப்பீர்கள். பலூன்களுக்காக திருவிழாவே நடத்துகிறது அரசாங்கம். பெரிய பலூன்களை ஆகாயத்தில் பறக்கவிடுவதும், அவற்றிற்கிடையே போட்டி வைப்பதும், எல்லா நாடுகளிலும் வழக்கமாகப் போய்விட்டது. வானில் பறக்கும் இந்த பலூன்கள் பிளாஸ்டிக், நைலோன், பொலியஸ்டர் போன்றவைகளால் தயாரிக்கப்படுகிறது. மெல்லிய ஐதரசன் வாயு இந்தப் பெரிய பலூன்களில் நிரப்பப்படும். விரிவடைந்து ,காற்றில் பறக்கிறது. இந்தியாவில் ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்த பலூன் திருவிழாவில் பலூன்களைப் பறக்கவிட எல்லா நாட்டவரும் வருவது வேடிக்கையாக இருக்கும். புதுடெல்லியில் நடந்த போட்டியில் எல்லோரையும் அசத்தியது தாஜ்மஹால் மாதிரியே வடிவமைக்கப்பட்ட ஒரு பலூன்.



www.padippakam.com
நன்றி - நூலகத் திட்டம்

# வில்லாதி வில்ல

## நடிகையின் தந்திரம்

ரூபஸ்ரீ என்றொரு நடிகை. பட வாய்ப்புக்களே இல்லாமல் பசையுள்ள தயாரிப்பாளர்களைத் தேடி தூதுவிட்டுக்கொண்டிருந்தவர். 'எல்லாமே என் ராசாதான்' படத்தில் வாய்ப்புக் கொடுத்தார் ராஜ்கிரண். படம் நன்றாக ஓடினால் தன் மார்க்கெட் உயர்ந்துவிடும். ஊதியத்தையும் உயர்த்தலாம் என்று திட்டம் போட்டார் ரூபஸ்ரீ. அதனால் இடையிலே வந்த வாய்ப்புக்களை 'பிஸி' என்று கூறி உதறித்தள்ளிவிட்டு "எல்லாமே என் ராசாதான்" படத்தின் வெற்றிச் செய்திக்காக காத்திருக்கிறாராம் ரூபஸ்ரீ.

## திருமணம் தடைப்பட்டது ஏன்?

நடிகை சித்ரா ஜூகிசேது என்ற நடிகரை திருமணம் செய்ய நினைத்திருந்தார். இருவரும் நன்கு நெருங்கி திருமணம் நடைபெறவிருந்த வேளையில் திடீர் தடை. தடைக்குக் காரணம் நடிகை தனது சொத்தில் பாதியை தந்துவிடவேண்டும் என்று நிபந்தனை போட்டாராம் நடிகர். வெறுத்துப்போன நடிகை 'கெட் அவுட்' சொல்லிவிட்டாராம். இப்போது நடிகையின் தாய்குலம் தொழில் அதிபராக உள்ள மாப்பிள்ளை தேடுகிறாராம்.

## மோகினியின் குதிரை ஆராய்ச்சி

குஞ்சு-மோகினி நடித்த 'வனஜா-கிரிஜா' படம் எதிர்பார்த்தளவுக்கு பிய்த்துக்கொண்டு ஓடவில்லை. இதனால் குஞ்சுவைவிட மோகினிக்குத்தான் வருத்தம். புதிய பட வாய்ப்புக்கள் இல்லாமையால் வீட்டில் இருக்கும் மோகினி ஒரு உபயோகமான காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார். அந்தக் காரியம் யாதெனில் குதிரை ஆராய்ச்சி. குதிரைகளை பராமரிப்பது எப்படி? பழகுவது எப்படி போன்ற விபரங்களை சற்றுத் தெரிந்து வருகிறாராம்.

## ரஜினியின் நன்றி

சினிமா உலகில் ஏறிய ஏணியை எட்டி உதைக்காத சிலரில் ரஜினிகாந்தும் ஒருவர். முக்கியமானவர் இயக்குநர் ராஜசேகர். அவர் இறந்தபின்னர் குடும்பத்தினர் கஷ்டத்தில் இருந்தனர். ரஜினிகாந்த் உதவி செய்திருக்கிறார். அவரது மகளின் திருமணத்தையும் நடத்திவைத்திருக்கிறார் ரஜினி.

## ஷோபனா ஓ.கே.

நாற்பது வயது பெண்மணி வேடத்தில் நடிக்க மீனாவை அணுகினார் ஒரு இயக்குநர். மீனாவுக்கு வந்ததே கோபம். இயக்குநரை உதைக்காதது ஒன்றுதான் பாக்கி. தேசிய விருதுபெற்ற ஷோபனா என்ன சொல்லுகிறார் தெரியுமோ? "அறுபது வயது பாட்டியாக என்றாலும் நான் நடிக்கத் தயார். நான் ஒரு நடிகை எந்தப் பாத்திரமானாலும் அதில் திறமையை வெளிப்படுத்துவேன்" என்கிறார்.

## சுகன்யாவின் ஆட்டம்

தமிழில் 'ஜென்டில்மேன்' படத்தில் கௌதமி ஒரு பாடல் காட்சியில் ஆடினார். இந்தி ஜென்டில்மேனில் அதே பாடல் காட்சியில் ரோஜா ஆடினார். 'சாது' படம் இந்தியில் தயாராகிறது. ஒரு பாடல் காட்சியில் நுந்து நிமிட ஆட்டத்திற்கு சுகன்யாவை அழைத்திருக்கிறார்கள். இந்தியில் நுழைய ஒரு வாய்ப்பு என்பதால் ஓகே சொல்லிவிட்டாராம் சுகன்யா.

## எட்டாயிரம் ரூபா

எட்டாயிரம் ரூபா கொடுத்து கொலுசு வாங்கினாராம் டிஸ்கோ சாந்தி. அந்தக் கொலுசைப் பார்த்து ஆச்சரியப்படாதவர்களே கிடையாதாம். ஆனால் ஒரு சோகம். அந்தக் கொலுசு காணாமல் போய்விட்டதாம்.





சித்தார்த்தா-சிந்தூரி
படம்-உதவும் கரங்கள்



குஞ்சு-ஜெயராம்
படம்-கோலங்கள்

## கவுண்டமணி மிஞ்சுவாரா?

தெலுங்கில் வெற்றிபெற்ற படம் ஒன்றை தமிழில் 'லக்கிமேன்' என்ற பெயரில் எடுத்து வருகிறார்கள். கார்த்திக் கதாநாயகனாக நடித்தாலும் எமதர்மனாக நடிக்கிறார் கவுண்டமணி. அதனால் கவுண்டமணிக்குத்தான் பெயர் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. பூமிக்கு வரும் எமதர்மன் சில்க் சுமிதாவுடன் துள்ளல் பாட்டுப்பாடி ஆடும் காட்சியும் உண்டு. கார்த்திக்கை கவுண்டமணி அமுக்கிவிடுவார்போல் தெரிகிறது.

## திரி மூர்த்தி

ஹிந்தியில் 'திரிமூர்த்தி' என்றொரு படம். சஞ்சய்தத், ஜாக்கி ஷெரப் இருவரும் ஹீரோக்கள். சஞ்சய்தத் சிறையில் இருப்பதால் படப்பிடிப்பு தாமதிக்கிறது. படத்தில் ஜாக்கி ஷெரப்பின் ஜோடி கஜோல்.

## மறுத்தது ஏன்?

இயக்குநர் பாலசந்தர் சொன்னது இது. முன்னர் எம்.ஜி.ஆர். படத்தை இயக்கும் வாய்ப்பு வந்தபோதும் மறுத்துவிட்டாராம். தனது தனித்தன்மையை விட்டுக்கொடுக்க வேண்டிவரும் என்பதுதான் காரணமாம்.

## மது அருந்தும் அனு!

மனம் திறக்கும் இந்தி நடிகைகள் வரிசையில் ஒருவர் அனு அகர்வால். அவர் மனம் திறந்தபோது வந்து விழுந்தவை இவைதான்:

"எனக்கு அப்பாவியாக நடிக்கத் தெரியாது. மது அருந்தும் போதும் கண்ணாடி கிளாசில்தான் ஊற்றிக் குடிக்கிறேன். சில்வர் டம்ளரில் யாருக்கும் தெரியாமல் ஊற்றி தண்ணீர் குடிப்பது மது அருந்த என்னால் முடியாது. ஆண்களிடம் 'அடக்கமான பெண்' என்று பெயரெடுக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. நான் யாருடைய நிழலிலும் குளிர்காயவில்லை. அதனால்தான் என்னை 'ஒரு மாதிரியான பெண்' என்று முத்திரை குத்தியுள்ளனர்." என்று சொல்லும் அனு அகர்வால் தமிழில் நடித்த படம் 'திருடா திருடா.'

## "என்னால் ஈடுகொடுக்க முடியவில்லை"

தனது படங்கள் சில தோல்வியடைந்தமை பற்றி ஸ்ரீதேவி என்ன நினைக்கிறார்?

"மக்கள் என்னிடமிருந்து ஏகச்சக்கமாக எதிர்பார்க்கிறார்கள். அளவுக்கதிகமான அவர்களது எதிர்பார்ப்புகளுக்கு என்னால் ஈடுகொடுக்க முடியாமல் போகும்போது என் படங்கள் தோல்வியடைகின்றன. நான் என்ன மந்திரவாதியா? இல்லை சூப்பர் வுமனா? நான் ஒரு சாதாரண பெண். நான் ஒருத்தி மட்டும் என்ன செய்ய முடியும்? ஒரு படத்தின் வெற்றி தோல்விகளை யாரும் கணக்குப்போட முடியாது. என்னை மட்டும் ஏன் குற்றம் சொல்லவேண்டும்? இந்த சினிமா தொழிலில் ஒருவரை உயரத்தில் வைத்து அழகு பார்ப்பார்கள். எப்போது வேண்டுமானாலும் கீழே தள்ளிவிடுவார்கள்." என்கிறார் ஸ்ரீதேவி.

## ஒகே...ஒகே...மாமு

செந்தமிழ் கலக்காமல் ஒரு பாடல் எழுதவேண்டும் என்றார்கள். 'விஷ்ணு' படத்தின் இயக்குநர் போட்ட நிபந்தனை அது. நிபந்தனைக்கு உடன்பட்டார் புலவர் புலமைப்பித்தன்.

ஓகே ஓகே மாமு, மாட்டாம மாட்டிக்கிச்ச மைனா ஒன்னு, ஓகே..! காட்டாம காட்டிக்கிச்ச காதல் சிக்னல் ஓகே.." என்று தொடங்கும் பாடலை எழுதித்தள்ளிவிட்டார் புலவர் புலமைப்பித்தன். இதுதான் வியாபார நிர்பந்தம் என்று சொல்வதோ?

## நாங்கள் என்ன ஆடா-மாடா?

என்போன்ற நடிகைகளை ஏன் ஒன்னு, ரெண்டு, மூணு என்று ஆடு மாடுகளைப்போல வரிசைப்படுத்துகிறார்களோ தெரியவில்லை! ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு திறமை இருக்கிறது. கிடைக்கும் வேசத்தைப் பொறுத்து அது வெளிப்படும்" என்கிறார் கவர்ச்சி நடிகை பூஜாபேடி.

## என்னைப்போல் ஒருவன்


தனது மகன் சிலம்பரசன் இன்னும் சில வருடங்களில் படம் ஒன்றை இயக்கப்போகிறான் என்று சொல்கிறார் டி.ராஜேந்தர். முதலில் வீடியோ படம்தான் இயக்குவானாம். "நான் தன்னம்பிக்கையை மூலதனமாக வைத்து வளர்ந்தவன். என்னைப் போலவே என் மகனும் வளருவான். அதுதான் என் ஆசை" என்கிறார் டி.ராஜேந்தர்.

## திரு மூர்த்தீ

'திருமூர்த்தி' படத்தில் விஜயகாந்த் கதாநாயகன். பவித்ரன் இயக்கும் படம். பெயரில் வரும் தீ அமைதியாக இருக்கும் திருவாளர் திருமூர்த்தி தீயாக மாறுவதைக் குறிக்கிறதாம்.

## டிம்பிளின் ஆசை

ஹொலிவுட் படங்களில் நடிக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார் டிம்பிள் கபாடியா. ராஜேஷ் கன்னாவிடம் இருந்து பிரிந்துவாழும் டிம்பிள் இப்போதும் கவர்ச்சியான வேடங்களில் தன்னால் கலக்கமுடியும் என்று நம்புகிறார்.



அமீர்கான்-மாதுரி டிக்ஷித்



சங்கவி
படம்-முத்துக் குளிக்க வாரீகளா

www.padippakam.com

# மினிசினி

- 'கட்டுமரக்காரன்' படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடித்துள்ள இந்தி நடிகை ஈவா குரோவருக்கு முதலில் அஞ்சலி எனப் பெயரிட்டார் பி.வாசு. தமிழில் அஞ்சலி என்ற பெயரில் வேறு ஒரு நடிகை இருப்பதால் ஜேயா என்று பெயர் மாற்றப்பட்டது. பின்னர் பழையபடி அஞ்சலி என்றே மாற்றிவிட்டார் வாசு.
- கார்த்திக் ஜோடியாக 'மருமகன்' படத்தில் நடித்து வரும் மீனா, அடுத்து 'கூலி' படத்தில் சரத்குமாருடனும், 'செங்கோட்டை', 'ஆகஸ்ட் 15' ஆகிய படங்களில் அர்ஜுனுடனும் ஜோடியாக நடிக்கவிருக்கிறார்.
- திரைப்படக் கல்லூரி மாணவர் ஒருவரின் இயக்கத்தில் முதன் முறையாக நடித்து வருகிறார் பாண்டியராஜன். படம் 'வள்ளி வரப் போறா'. இந்தப் படத்தில் 40 வினாடிகள் மட்டுமே இடம்பெறும் 'ஹாலிவுட் காதல் சிட்டு' என்ற ரொப் பாடலொன்றை பாடியுள்ளார் சுரேஷ் பீட்டர்ஸ்.
- 'மண்ணுக்குள் வைரம்' படத்தின்மூலம் தமிழில் அறிமுகமாகி 'நல்லவன்', 'பூந்தோட்டக் காவல்காரன்' போன்ற படங்களில் நடித்தவர் வாணிவிஸ்வநாத். அதன்பின் தெலுங்குப் படங்களில் நடிக்க ஆரம்பித்து அங்கு தற்போது முன்னணி நடிகையாகியுள்ளார். இவர் முதன்முதலாக இந்திப் படமொன்றில் நடிக்கவிருக்கிறார்.
- 'தாமரை' படத்தை இயக்கிய ராஜ் சிற்பி தற்போது 'டேக் இட் ஈஸி ஊர்வசி' என்ற படத்தை இயக்கி வருகிறார். இதில் விக்னேஷுக்கு ஜோடியாக நடிக்க அனு என்னும் கேரளப் பெண்ணை அறிமுகப்படுத்திருக்கிறார். படத்திற்காக அனுவின் பெயரை அமிர்தாவாக்கிவிட்டனர்.
- ராதிகா இம்முறை புத்தாண்டைக் கொண்டாட குடும்பத்தாருடன் கோவா சென்றிருந்தார். ராதிகாவுடன் முன்னாள் நடிகை ஸ்ரீப்பிரியாவும் சென்றிருந்தார். ஸ்ரீபிரியா இயக்கும் 'விடுதலை' தொலைக்காட்சித் தொடரில் ராதிகா நடிக்கிறார். அதிலிருந்து இருவரும் நண்பிகளாகிவிட்டனர்.
- கே.எஸ்.ரவிக்குமாரின்... ('கேபாலசந்தரின்') 'டூயட்' படத்தில் சூப்பர் நடிகராக நடித்த பிரகாஷ்ராஜ் இப்போது வசந்த் இயக்கும் 'ஆசை', 'எம்.ஆர்' (முதல் தகவல் அறிக்கை) ஆகிய படங்களில் நடித்துவருகிறார்.
- தென்னிந்திய மொழிப் படங்களில் அதிகம் நடித்திராத டிம்பிள் கபாடியா, மலையாளத்தில் மம்முட்டிக்கு ஜோடியாக புதிய படமொன்றில் நடிக்க இருக்கிறார். இவர் தமிழில் 'விகரம்' படத்தில் நடித்திருக்கிறார்.
- தமிழில் இப்போது அதிக படங்கள் இல்லாவிட்டாலும் பிறமொழிப் படங்களில் பிஸியாக இருக்கிறார் பேபி ஷாமிலி. இவர் தற்போது 2 கன்னடப் படங்களிலும், 2 தெலுங்குப் படங்களிலும், 3 மலையாளப் படங்களிலும் நடித்து வருகிறார்.
- 'பாண்டியனின் ராஜ்ஜியத்தில்' படத்தை இயக்கியவர் சந்தோஷ். இவர் இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகரிடம் உதவி இயக்குநராக பணியாற்றியவர்.
- ராமராஜனுடன் 'தங்கத்தில் தங்கம்' படத்தில் கதாநாயகியாக நடித்த ராககதா தற்போது நெப்போலியன்-ரஞ்சிதா நடிக்கும் 'தமிழச்சி' படத்தில் ஒரு பாடல் காட்சியில் நடனமாடுகிறார்.



சத்யராஜ்-
படம்-வில்லாதி வில்லன்

ஜோடி

...டிக்காத குண்டு



அருண்பாண்டியன்-வினிதா-நெப்போலியன்
படம்-ராஜமுத்திரை

## இலவச கச்சேரி

டாக்டரிடம் பணம் கொடுக்காமல் வைத்தியம் பார்ப்பது கிடையாது. சட்டத்தரணியிடம் பணம் கொடுக்காமல் வழக்கு நடத்த கேட்க முடியாது. ஆனால் சிலர் என்னிடம் "இலவசமாக பாடணும்" என்று கேட்கிறார்கள். இது எப்படி நியாயமாகும்? இப்படிக் கேட்டிருக்கிறார் பாடகர் ஜேசுதாஸ். என்றாலும் சிலருக்காக இலவசக் கச்சேரிகள் நடத்தியிருக்கிறாராம் ஜேசுதாஸ்.

## இந்தி நடிகையின் அதிரடி அறிக்கை

'பம்பாய்' படத்தில் நடித்திருக்கும் இந்தி நடிகை மனிஷா கொய்ராலா சமீபத்தில் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டி கொடுத்தாலும் கொடுத்தார், படித்தவர்களுக்கு அதிர்ச்சி! அந்த பேட்டியில் இருந்து ஒரு பகுதி.

"தன்னுடைய ஆண் சரியானவர்தானா என்பதைப் புரிந்துகொள்ள பல வருடங்களை வீணாக்குகின்றனர் சில பெண்கள். ஆனால் நான் அப்படி இல்லை. ஒரே மாதத்தில் என்னுடன் பழகும் ஆண் எப்படிப்பட்டவன் என்பதைச் சொல்லிவிடுவேன். அதற்கேற்றபடி நட்பை வளர்க்கவோ முறிக்கவோ தீர்மானம் செய்வேன். கனவுகளில் மட்டுமே வன்மியாக இருக்கும் அப்பாவி நடிகைகளின் 'செய், ஆனால் சொல்லாதே' என்ற கொள்கை எனக்கு ஒத்துவருவதில்லை" இதுதான் மனிஷாவின் நெத்தியடி.

## சிக்கலில் நெப்போலியன்

'சீவலப்பேரி பாண்டி' படம் நன்றாக ஓடியதால் மளமளவென்று படவாய்ப்புக் குவிந்தது நெப்போலியனிடம். 'சீவலப்பேரி பாண்டிக்கு' பின்னர் வந்த நெப்போலியன் படங்கள் வெறுத்தும் கட்டாமல் போனதால் ஒப்பந்தமான சில படங்கள் பூஜையோடு நிற்கிறதாம். தயாரிப்பாளர்கள் பயப்படுவதுதான் காரணம்.



டிம்பிள் கபாடியா-
சன்னி தியோல்

## ஆண்களைக் காதலிப்பது வீண்

இந்தி நடிகை ஷீபா சொல்லியிருக்கும் கருத்து இது: "நான் கவர்ச்சிக் கன்னியாக இருப்பதால்தான் நிலைத்து நிற்க முடிகிறது. இல்லையென்றால் அம்மா, அக்கா, தங்கச்சி வேடங்களுக்கு தள்ளப்பட்டிருப்பேன். கவர்ச்சி காட்டி நடிப்பதற்காக நான் ஒன்றும் வருத்தப்படவில்லை. நான் வருத்தப்படுவது ஒரே ஒரு விஷயத்திற்காகத்தான். தேவையானபோது பயன்படுத்திவிட்டு, பின் தூக்கி எறியப்படும் கறிவேப்பிலையைப்போல பெண்களை நினைக்கிறார்கள் இந்த ஆண்கள். செக்சிற்கு மட்டும் ஒரு உபகரணத்தைப்போல பெண்களைக் கையாளுகின்றனர். என்னால் எந்த ஒரு ஆணையும் இந்த விசயத்தில் நேர்மையானவனாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆண்களைக் காதலிப்பது வீண் வேலை" என்கிறார் ஷீபா.

## புதுக் கவர்ச்சி

'பிளே கேர்ள்ஸ்' படத்தில் சில்க் ஸ்மிதாவையே ஓரம் தள்ளும் அளவுக்கு கவர்ச்சி காட்டியிருக்கிறாராம் நடிகை ஷீதல். விசயம் அறிந்த தயாரிப்பாளர்கள் ஷீதலை துரத்தித் துரத்தி ஒப்பந்தம் செய்கிறார்களாம். கைவசம் பத்துப் படங்கள் சேர்ந்துவிட்டதாம். ஷீதலின் அக்கா ஷீலாவும் கவர்ச்சியாக நடித்திருக்கிறார். பிளே கேர்ள்ஸ் படத்தில், சகோதரிகள் இருவரும் படத்தில் சில்க் ஸ்மிதாவையே கலங்க வைத்துவிட்டார்களாம். தணிக்கைக் குழுவே கலங்கிப்போய் நிற்கிறதாம். எதை வெட்டுவது எதை அனுமதிப்பது என்று தெரியாமல் ஒரே குழப்பமாம்.



விஜயகுமார்-பிரபுதேவா-வடிவேலு
படம்-ராசய்யா

## கௌதமியின் விருப்பம்

கதாநாயகி என்றால் தொட்டுக்கொள்ள ஊறுகாய் போலத்தான் பயன்படுத்துகிறார்கள். ஹீரோவுக்கு முக்கியத்துவம் உள்ள படங்களில் ஹீரோயின் காத்திரமான வேடங்களில் நடிப்பது அபூர்வம். எனக்கு எப்போதாவது ஒரு படம் 'நம்மவர்' படம்போலக் கிடைத்தால் போதும்" என்கிறார் கௌதமி. தற்போதுள்ள நடிகைகளில் கமல் அதிகம் பயன்படுத்தியிருப்பது கௌதமியைத்தான்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# இயற்கை முறை இருக்க செயற்கை முறை ஏன்?

## கூந்தல் பராமரிப்புக்கு சில யோசனைகள்

உடலினுள்ளே உருவாகும் நோய்களைப் பல்வேறு அங்கங்கள் பிரதிபலித்துக் காட்டுகின்றன. அதேபோல ஒருவருடைய தேக ஆரோக்கியத்தை அவருடைய தலைமுடியே காட்டிவிடும்.

சம அளவு உணவு உட்கொண்டு, உரிய தேகப் பயிற்சி செய்து உடலை ஆரோக்கியமாக வைத்திருந்தால், அவருடைய தலைமுடியும் சிறப்பாக அமைந்திருக்கும்.

நோய்க்கு இடமளித்து பதற்ற நிலையிலுள்ளவர்களுடைய உடல் சீர்கெடுவதைப் போலவே அவருடைய சிகையும் சீரழிந்து போகும்.

இரத்தோட்டம் சீராக இருக்குமானால் சிகைக்கு எந்தப் பிரச்சனையும் தோன்றாது. இரத்தமே தலைமுடிக்குரிய போஷாக்கினை வழங்குகின்றது. இதற்காகவே சுகாதாரமான சமச்சீருணவு, சுத்தமான நடவடிக்கைகள் போன்றவற்றுடன் சிகைப் பராமரிப்பினையும் நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.



சிகையின் ஆரோக்கியத்தினையும் அழகினையும் பேணுபவையாக பலதரப்பட்ட செயற்கை சாதனங்கள் சந்தையில் கிடைக்கின்றன. ஆனால் நமது முன்னோர்கள் பயன்படுத்திய இயற்கை சாதனங்களிலிருந்து பெறப்பட்ட பயன்கள் இச்செயற்கைப் பொருட்களில் கிடைப்பதில்லை. தவிர மாறுபட்ட எதிர்விளைவுகளே இவற்றினால் கிடைக்கின்றன.

பல நூற்றாண்டு காலமாக சிகைச் சீரமைப்புக்கு சீயாக்காய் நம் பெண்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதனைக் காயவைத்து எடுத்து வைத்துக் கொள்வார்கள்; அல்லது தூளாகவும் அரைத்து வைத்துக் கொள்வார்கள். சீயாக்காயுடன் சிறிதளவு வெந்தயத்தையும் சேர்த்து அவித்தெடுத்து, பின்னர் அரைத்து, அவிந்த நீருடன் குழம்பு போல் குழப்பி, அதனை தலையில் நன்றாகத் தேய்க்க வேண்டும். மண்டை ஓட்டினையும், இதேவேளை நன்றாக அழுத்துதல் வேண்டும். அரைமணி நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவிவிட்டதன் பின்னர் துவட்டி, மயிர் நன்றாக உலர்ந்த பின் தேங்காய் எண்ணை தடவி தலை வாரி விடலாம்.

இத்தகைய இயற்கை முறையான தயாரிப்புகளுக்கு சிறிதளவு நேரம் தேவைப் படும். காலம் செலவிட முடியாத நிலையில்- இயந்திர வாழ்க்கை வாழும் இன்றைய பெண்கள் சுலபமான முறையில்-கடைகளில் விற்கப்படும் பொருட்களை வாங்கிப் பயன்படுத்தி பக்கவிளைவுகளுக்குப் பலியாகிறார்கள்.

வாரத்திலோர் தடவையாவது மேற்கூறப் பட்ட முறையில் முழுகி வந்தால் தலையிலுள்ள அழுக்குகள் நீங்கும்; சிக்குகள் அகன்று சிகை பளபளப்பாகும்; இயற்கைச் சுருள்களும் அவ்வாறே அமையும். அத்துடன் தலையில் இரத்தோட்டமும் துரிதமடைந்து மயிர் கொட்டுவதும் நின்றுவிடும்.

நரை தவிர்க்க-

தலைமயிரில் இளநரை தோன்றும் போது கண்ட கண்ட களிம்புகளையோ செயற்கைச் சாயங்களைப் பூசுவதையோ தவிர்க்க வேண்டும். இவற்றைப் பூசுவதால் நரைத்தல் வேகமடைகிறது. ஆகவே தொடர்ந்து அதே மருந்தையோ களிம்பையோ மென்மேலும் அதிகமான அளவில் தடவ வேண்டி நேரிடும்.

மருதோன்றி தலை முடியின் ஆரோக்கியத்துக்கு ஊட்டமளிப்பதுடன் தலைமயிர் கறுக்க உதவுகிறது. முடிவளர்ச்சிக்கும் உதவுகிறது.

மருதோன்றி கொழுந்தின் சாறு, சிறிதளவு தயிர், முட்டையின் வெள்ளைக் கரு, சிறிதளவு கோப்பிச்சாயம், எலுமிச்சஞ்சாறு ஆகியவற்றைக் கலந்து தலையில் தடவவும். மண்டை ஓட்டிலும் தேய்த்து முடி முழுவதும் தேய்க்கவேண்டும். அரைமணி நேரத்தின் பின்னர் கழுவவும்.

வரண்ட முடியுடையவர்கள் இக் கலவையில் ஒரு தேக்கரண்டி தேங்காய் எண்ணையையோ அல்லது ஒலிவ் எண்ணையையோ சேர்த்துக் கொள்ளலாம்.

# வர்ணங்கள் உங்கள் குணம் காட்டும்!


## உள்ளம் எப்படி- தெரிவு செய்யும் நிறமும் அப்படி!!

வர்ணங்கள் எண்ணற்ற சாயல்களைக் கொண்டதாக நம் கண்களுக்குத் தென்பட்ட போதும் சிவப்பு, மஞ்சள் மற்றும் நீலம் ஆகிய நிறங்களே மூலவர்ணங்கள் என்பதனை அறிவோம். இவை ஒன்றுடன் மற்றொன்றோ அல்லது மூன்றும் இணைந்தோதான் ஏனைய சாயல் நிறங்கள் தோன்றுகின்றன. இத்தோற்றங்கள் வேறுபடுவதற்கு கருமையும் வெண்மையும் துணை போகின்றன.

சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய நிறங்களில் நாட்டம் கொண்டோரின் குணாதிசயங்களை கடந்த வாரம் பார்த்தோம். ஏனைய கலப்பு வர்ணங்கள் சிலவற்றை விரும்புபவர்கள் எத்தகைய சுபாவமுடையவர்கள் என்பதனை இனிப் பார்ப்போம்.

**பச்சை**- அமைதியான மனப்போக்குடையவர் எப்போதும் பச்சை வர்ணத்தை நேசிப்பவராக இருப்பர். நடுநிலை அமைதியினையே இவர்கள் விரும்புவார்கள். பலருடனும் ஒத்துப்போகும் வண்ணம் தங்கள் நடத்தைகளை அமைத்துக்கொள்வார்கள். இயற்கைச் சூழலை விரும்புவார்கள். இயற்கை வழங்கும் அமைதி மற்றும் பாதுகாப்பினில் இவர்கள் ஈடுபடுவார்கள். அமைதியினை தாங்கள் பெறுவதுடன் சுற்றியுள்ளவரும் அமைதியுடன் வாழ வழி சமைப்பார்கள்.

**செம்மஞ்சள் (ஒரேஞ்ச்)**- இந்த வர்ணத்தில் செம்மை கலந்திருப்பதனால் உத்வேகத் தன்மை இருக்கும். எனினும் மஞ்சள் கலந்துள்ளமையினால் அதே உத்வேகத்துடன் நிதானமும் இணைந்து விடுகிறது. இந்த நிறத்தினை விரும்புபவர்கள் எந்தக் காரியத்தில் ஈடுபட்ட போதிலும் அதற்காக தம் முழு சக்தியையும் செலவிடுவதானாலும் தயக்கமின்றி அக்காரியத்தில் ஈடுபடுவார்கள். இவ்வர்ண ஆடைகளை அணிவதில் ஆசை கொண்டவர்கள் தங்கள் கருத்துக்களை வலியுறுத்துவார்கள். நகைச்சுவையுடன் உரையாடுவார்கள். சேர்ந்திருப்போரையும் சிரிப்பூட்டுவார்கள்.



**செங்கரு நீலம்-(வயலற்)** எவரையும் அச்சமூட்டாத வர்ணம்இது. அமைதி, நிதானம், சாந்தி, தயவு-தாட்சண்யம் போன்றவற்றை விரும்புபவர்கள் நிச்சயம் செம்மை+கருமை+நீலம் ஆகியவற்றின் சேர்க்கையினால் உருவான இவ்வர்ணத்தில் நாட்டம் கொள்வார்கள். ஆன்மீக நாட்டம் கொண்டவர்களும் இவ்வர்ணத்தை விரும்புவார்கள்.

துடிப்பும் துடுக்குத்தனமும் கொண்ட இளைஞர்கள் படுத்துறங்கும் அறைகளில் இவ்வர்ணத்திரைச் சீலைகளைத் தொங்க விட்டால், அவர்களுடைய முரட்டுச்சுபாவங்கள் மாறி தயாளமும் சாந்தமுமுடையவர்களாக மாறுவார்கள் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

**கருமை**- மேற்குலக நாடுகளில் துக்க அனுஷ்டானத்துக்காக கறுப்பு நிறத்தையே தேர்ந்தெடுக்கின்றனர். பிறர்மீது அதிகாரம் செலுத்துவதற்கு நாட்டம் கொண்டவர்கள் கறுப்பு வர்ணத்தைத் தேர்ந்தெடுப்பதுண்டு. அதுமட்டுமல்லாமல் தம்முடைய மனத்திலேயோ நடைமுறை வாழ்க்கையிலேயோ மண்டிக்கிடக்கும் தீய பழக்க வழக்கங்களை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பாதவர்களும் கறுப்பு வர்ண உடைக்குள் புகுந்து கொள்வார்கள் என்றும் நம்பப்படுகிறது. கருமையில் நாட்டம் கொண்டவர்கள் பாலியலில் இச்சை அதிகம் கொண்டவர்களாகவும் இருப்பர்.

பிறர் தம்மை மதித்து மரியாதை செய்ய வேண்டும் என்ற கருத்துடையோரும் கறுப்பு வர்ண உடைகளையே விரும்பி அணிகின்றனர் என்றும் சில தகவல்கள் கூறுகின்றன. பொதுவாக கறுப்பு வர்ணம் ஒதுக்கப்படுவது முண்டு. துர்ச்சகுனமாகவும் கருதப்படுகிறது.

**பழுப்பு (பிரவுண்)**- இந்நிறம் சிவப்பும் கறுப்பும் இணைவதனால் உருவாகிறது. நிலத்தையும் நிலையான உறுதிப்பாட்டையும் இவ்வர்ணம் பிரதிபலிக்கிறது. மன வலிமையை வளர்க்கிறது. தீர்க்கமான முடிவினை எடுக்கும் ஒருவர் தனது நிலைப்பாட்டினிலிருந்து விலகாத நெஞ்சுரம் கொண்டவரானால் அவர் நிச்சயமாக இந்த வர்ணத்தை விரும்புபவராகவே இருப்பார். இவ்வர்ண உடைகளை விரும்புவோர் எந்த ஒரு செயலில் ஈடுபட்டாலும் அதன் அடி ஆதாரத்தை ஆராய்ந்தறிந்த பின்னரே நேரடியான தீர்மானத்துக்கு வருவார். எந்த விடயத்திலும் இவர்களைத் தட்டிக் கழித்துவிட முடியாது.

**வெள்ளை**- அநேகமான கீழைத்தேய நாடுகளில் ஒருவரின் மறைவினைக் குறிப்பதற்கு வெள்ளைக் கொடிகளையும் படுதாக்களையும் பயன்படுத்துவர். இறந்தவருடைய ஆத்மா சாந்தியடையட்டும் என்பதனை இது குறிக்கிறது. சமாதானத்தையும் அதேவேளை சரணாகதியையும் வெள்ளை குறிப்பிடுகிறது. தூய்மை, சுத்தம் ஆகியவற்றைக் குறிப்பதுடன் வெண்மை கள்ளமற்ற தன்மையினையும் காட்டுகிறது.

பற்றற்ற தன்மையும் கொண்ட இவ் வர்ணம் ஏனைய வர்ணங்களுடன் எப்போதும் இணையவும், அவற்றைப் பிரதிபலிக்கவும் தயங்குவதில்லை.

வெள்ளை உடைகளை அணிவதனால் தேகாரோக்கியமுடன் திகழலாம் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். கதிரவனிலிருந்து பலவர்ணக் கதிர்வீச்சுக்களை தன்பால் ஈர்த்து உடலின் எப்பாகத்திற்கு எந்த வர்ணம் தேவையோ அதனைச் செலுத்துகிறது. உடலில் நோய்க்கூறுகள் உதயமாகும் இடங்களில் குறிப்பிட்ட ஒளியினைப் பிரதிபலிக்கச் செய்து சுகம் தருகிறது. உடலுக்குத் தேவையற்ற கழிவுகளை அகற்றுவதற்கும் இது வசதி அளிக்கிறது.

## கைவேலைப் பகுதி — எஸ்-எஸ்

### ஒக்கிற்

**தேவையான பொருட்கள்:**

ஸ்ரொக்கிநெற் மெல்லிய நாவல் நிறம் 1
தங்க நிறக் கம்பி 1 டசின்
மகரந்தம் சிறுகட்டு
கட்டுக்கம்பி
நூல்
கம்ரேப் (ஒட்டுவதற்கு)
பச்சைநிற ஸ்ரொக்கிநெற் 1


**எடுக்கப்படவேண்டிய அளவுகள்:**

| | |
|---|---|
| பெரிய பூ | 5 1/2 அங்குல அளவில் 2 கம்பித் துண்டுகள் |
| | 6 அங்குல அளவில் 3 கம்பித் துண்டுகள் |
| சிறிய பூ | 3 1/2 அங்குல அளவில் 2 கம்பித்துண்டுகள் |
| | 4 அங்குல அளவில் 3 கம்பித்துண்டுகள் |
| இலைகள் | 4 1/2 அங்குல அளவில் 3 கம்பித்துண்டுகள் |
| | 3 1/2 அங்குல அளவில் 2 கம்பித்துண்டுகள் |

**செய்முறைகள்:**

மேற்கூறப்பட்ட அளவுகளிலான தங்க நிறக் கம்பிகளை வெட்டி எடுத்துக் கொள்வோம். எடுத்த கம்பிகளில் 5 1/2 அங்குலக் கம்பியை படம் 1ன் படி, ஒரு கம்பியையும், படம் 3ன்படி ஒரு கம்பியை வளைத்துக் கொள்ளவும். வளைத்த அக்கம்பிகளுக்கு மெல்லிய நாவல் நிற ஸ்ரொக்கிநெற் கட்டவும். இதனையடுத்து 6 அங்குல கம்பியை எடுத்து படம் 2,5,4. இவைகளின்படி உருவத்தினை அமைத்து அதற்கும் மெல்லிய நாவல் நிற ஸ்ரொக்கி போட்டுக் கட்டவும். இவ்வாறு சிறிய பூவிற்கான இதழ்களையும் படத்தின் உதவியுடன் அமைத்துக்கொள்ளவும்.

ஒக்கிற் மலரில் பலவிதமான வடிவில் உள்ளன. இதில் இதுவரைக்கும் இரண்டு ஒக்கிற் மலரை நாம் கைவேலைப்பகுதியில் தந்துள்ளோம். தற்போது நாம் செய்யும் ஒக்கிட் ஒவ்வொரு இதழும் வித்தியாசமானவை. இதில் இதழ்கள் ஐந்து மட்டுமே உள்ளன.




இலைக்கென குறிப்பிட்டுள்ள அளவிலான தங்கநிறக் கம்பிகளை எடுத்து படத்தில் காட்டப்பட்ட வடிவத்தில் இலைகளை அமைத்து பச்சைநிற ஸ்ரொக்கிநெற் போட்டுக் கட்டவும். இவ்வாறு ஏனைய இலைகளையும் அமைத்துக் கொள்ளவும்.

பூவினை கட்டும்முறை:

கட்டுக்கம்பியில் 4 மகரந்த நெட்டுக்களை வைத்துக்கட்டிக் கொண்டு படம் 1ற்கான இதழை முதலில் வைத்து நூலினால் கட்டவும். அதன்பின்னர் படம் 2ன் இதழையும் அடுத்து படம் 5இன் இதழையும் வைத்து நூலினால் கட்டி அடுத்துள்ள படம் 4 இன் இதழையும் படம் 3ன் இதழையும் வைத்து நூலினால் கட்டி கம்ரேப்பினால் சுற்றி தண்டுப் பகுதியை அமைத்துக் கொள்ளவும்.

இவ்வாறு அடுத்த சிறிய பூவையும் இதனைப் போன்று அமைக்கவும். இலைகளுக்கும் கட்டுக்கம்பியினால் தண்டினை அமைத்து அத்தண்டுப் பகுதிக்கு கம்ரேப்பினால் சுற்றி அழகுபடுத்தவும்.

இவைகளை கொப்பில் கட்டுவதற்கு ஆயத்தமாகுவோம். தடித்த கட்டுக்கம்பியில் சிறிய பூவையும் சிறிய இலையையும் முதலில் வைத்துக்கட்டி கம்ரேப் சுற்றவும். அடுத்து பெரிய பூவையும் இலைகளையும் அழகுக்கு ஏற்ப கட்டிக்கொள்வோம். கட்டிய கொப்பினை சிறிய மலர்ச்சாடியில் வைத்து அழகுபடுத்திக் கொள்வோம்.

## விலையாகும் அழகு

உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சுஸ்மிதா சென்னுக்கு இந்தியாவில் உள்ள மிகப் பெரும் தொழில் நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு வரவேற்புக் கொடுத்துள்ளன.

ஐந்து நட்சத்திர விடுதிகள் சுஸ்மிதா தமது விடுதிகளில் தங்கவேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றன.

இதே போல எயார் இந்தியா நிறுவனம் தங்கள் விமானத்தில்தான் சுஸ்மிதா பயணம் செய்யவேண்டும் என்று விழுந்து விழுந்து உபசரித்தது.

சுஸ்மிதாவுக்கு பல்வேறு தொழில் நிறுவனங்கள் பத்திரிகைகள் மூலம் வாழ்த்துச் செய்திகளை வெளியிட்டன.

சுஸ்மிதா டெல்லி வந்தபோது ஒரு பத்திரிகை நிறுவனம் பத்தாயிரம் பள்ளி மாணவர்களை சுஸ்மிதா ஊர்வலம் சென்ற வழியில் நிறுத்திவைத்து வரவேற்புக் கொடுத்தது.



இந்த தடபுடலான வரவேற்புகள் ஏன்? அழகை ஆராதிக்கிறார்களா? அதுதான் கிடையாது. எல்லாம் ஒரு வியாபார நோக்கம்தான்.

சுஸ்மிதாவுக்கு வரவேற்பு விளம்பரம் அளித்தது மூலம் தங்கள் நிறுவனத்துக்கு இளம் வாடிக்கையாளர்கள் அதிகரித்துவிட்டதாக கூறியுள்ளது ஒரு நிறுவனம். அதுதான் உண்மை.

சுஸ்மிதாவின் அழகை வைத்து இலாபம் தேடத்தான் இந்த விழுந்தடித்தல்கள். அழகும் லாபகரமான மூலதனம்.

## முரசின் பரிசு

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

**முரசின் பரிசு**
**கூப்பன் இல 25**
**உண்மை—நேர்மை—வெளிப்படைத்தன்மை**

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தேன் கிண்ணம்



### ஊர்வைக்கும் பெயர்

ஒரு நீண்ட காலக் கனவு
என்றும் இருந்து வருகிறது
என் இருதயத்தில்.

ஓய்வுகள் கிடைக்கும் போதலாம்
அசை போடுவேன்,
ஆசைப்படுவேன் பிறருக்கு
அறிவிப்பதற்கு

தருணம் கிடைப்பதில்லை.
ஸ்நேக மண்ணை
என் தடம்
ஸ்பரிசம் செய்வதற்கு
தடுக்கப்பட்டதுபோல்.


ஹிம்சை–ஹிம்சையாக
இதயத்தில் பெருத்தே வரும்.

எங்கேனும் மூலைகளிலாவது
என் கவலைகள்; கனவுகள்
கேட்கும் காதுகள் பற்றியதாய்
தேடல் நடாத்துவேன்.

காற்றின் காதுகளில்
உரத்துக் கத்துவேன்.
ஊர் எனக்குப் பெயர் சூட்டும்

'அடிப்படை வாதி!'
'அடிப்படை வாதி!!'

இஸ்லாஹிய்யா கே-முனாஸ்.



### அந்நாள் எந்(ன்)நாளோ...?

என் நிலையை
மறந்து
உன் வரவை
நினைந்து
ஏங்கி நிற்கின்றேன்
நாட்களை
எண்ணி!

□□

கனாப் படங்களில்
ஒவ்வோரிரவும்
கட்டியணைத்து
கன்னத்தில் பொழியும்
முத்த மழையில்
நனைந்து
வாரங்களை
நகர்த்தி!

□□

கைத்தலம் பற்ற
காரிகை பார்க்கும்
அன்னையின்
பேச்சை
கண்ணியமாய்
திருப்பி
உன் நலம் சேர
மாதங்களை
துரத்தி!

□□

வேலையின்
வேளையில்
உன் வீலைகள்
என்னை
சோதனை செய்ததால்
பட்டிகள் கழட்டி
பதவிகள் குறைந்து
தேய்பிறையானேன்
கட்டிலைக் காத்து!

□□

இனங்களின்
அவலங்கள் தீர்ந்து
சனங்களே
ஒன்றாகும்போது
ஏன்
நம் மனங்கள்
மட்டும்
பிணங்களாய் இன்று..?

□□

என் உடலில்
ஒட்சிசன்
இருக்கும்வரை
காத்திருப்பேன்
நம்
இரு மனங்களின்
திருமணத்தை(ப்)
பார்த்து..!

எஸ்.எஸ்.ராஜன்-கிரான்குளம்-7.

### செந்நீர் சுரக்கும் சுவடுகள்

நீ பூக்களால்–என்
இதயத்தில் பதித்த
சுவடுகளில்
இப்போது
இரத்தங் கொப்பளிக்கிறது!

••

துடிதுடித்துக்
கதறியழும்
உள்ளத்துக்கு
ஓரவிழிப் பார்வையாலேனும்
ஒத்தடம் கொடுக்கக் கூடாதா?

••

எனது
அதிகபட்ச அன்பினால்
விறைத்துப்போவதாக
அடிக்கடி கூறுவாயே!
இன்று
நீ தந்து போன
வேதனைகளால்–நான்
விறைத்துப்போயுள்ளேன்!

••

வனாந்தரங்களில்
கவிபாடிக்கொண்டு
அலைந்து திரிந்த
ஒற்றைத் தேவதையை
உன் சினேகம்
விலங்குகளால் பிணைத்துவிட்டது!

••

உன்னைச் சந்திக்கக் கூடாதென
உறவுகள் என்னைச்
சிறையிலிட்டபின்
காதலியை
மீட்டெடுக்க முடியாமல்–
சலனத்தில் நீ

••

உயிரே!
நான் தூக்குமேடைவரை
துணிந்து செல்ல
உனது மௌனமே
துணை நின்றது!

••

போராடியேனும்
என்னையடைவேன்
எனத் துடித்தவன்–நீ
இறுதியில்
எனது சிறைக்கம்பிகளைக் கூடத்
தொட்டுப் பார்க்கும்
தைரியம்
உனக்கு வரவில்லையே!

••

இப்போது
நீ பூக்களால்
என்னிதயத்தில் பதித்த
சுவடுகளில்
இரத்தம் கொப்பளிக்கிறது!

பஹ்மா ஜஹான் ஸவாஹிர்
மெல்சிரிபுர.

### என் (பழைய) டயரி!

**1993 மார்கழி**
நீ
பார்த்த உடனே
காற்று வீசும் ஜன்னல்கள்
மறைந்தவுடனே
சோர்ந்துவிடுகின்றன!

**1994 தை**
எல்லா இடங்களிலும்
உன்
காதலின் விளம்பரம்
இடுப்பில்
மட்டும் தாராளம்!

**மாசி**
வானத்திலுமா
உன் சேலை காய்கிறது?
வானவில்லாய்
வளைந்திருக்கிறதே...!

**பங்குனி**
உன்
மடலில் ஆயிரம்
கனிப்பொறி
வார்த்தைகள்

**சித்திரை**
பெண்ணே
நம் வயது
காதலின்
தலைமுறைக்கு
ஒரு சுமை

**வைகாசி**
பெண்ணே
உனது பார்வை
பட்ட இடத்திலெல்லாம்
மழைத் தூறல் விழுகிறது!

**ஆனி**
திரண்ட
மனித வளையத்துக்கு
நடுவே
நம் காதல்
கலவரத்தோடு ஒரு கைகுலுக்கல்!

**ஆடி**
புதிதாய்
இரவுகள் வந்தாலும்
உறக்கம்
வரவில்லை!

**ஆவணி**
படுத்துக்கொள்ள
காத்திருந்தேன்
அவள்
இரவாகி வரும்வரை!

**புரட்டாசி**
செடியாய் அவள்
பூவாய் நான்
கொடியாய் அவள்
கொம்பாய் நான்!

**ஐப்பசி**
நதியாய் அவள்
கடலாய் நான்
நண்டாய் அவள்
வளையாக நான்!

**கார்த்திகை**
எழுதிவைத்த
ஏட்டில்
நான்
சாதித்தது ஒன்றுமில்லை!

ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.



யார் குழந்தை யார்?
இவர் தான் அது இவர் தான்!



தற்போது பிரபலமாகிவிட்டார் குஷ்பூ. முன்னர் குழந்தை நட்சத்திரமாக நடித்தபோது எடுக்கப்பட்டதுதான் 2ம் பக்கத்தில் உள்ள படம்.

பிரபலங்களின் ஹி...ஹி...ஹி...

## ஒளிவு மறைவில்



இரண்டாவது உலக யுத்தத்தின்போது பிரிட்டிஷ் பிரதமர் சேர்ச்சிலை அவர் மாளிகையில் சந்திக்க வந்தார் அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட்.

அப்போது குளியல் அறையில் இருந்த சேர்ச்சில் தன்னை சந்திக்க ரூஸ்வெல்ட் வந்திருப்பதை அறிந்து அவசரமாக வெளியே வந்தார். அவசரத்தில் குளியல் அறையில் இருந்தபடியே பிறந்த மேனியாக வந்துவிட்டார்.

ரூஸ்வெல்ட் ஒரு கணம் திகைத்துப்போனார். சேர்ச்சில் சாதுர்யமாக சமாளித்தார்.

"என்னிடம் எதிலுமே ஒளிவு மறைவு கிடையாது என்பதை இப்போதாவது நம்புகிறீர்களா?" என்று கேட்டு சிரித்தார் சேர்ச்சில்.

## அடக்கமான பதில்

அந்நகர மைதானம் ஒன்றில் சேர்ச்சில் கலந்து கொள்ளும் கூட்டம் நடந்தது. இலட்சக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தார்கள்.

சேர்ச்சில் மேடைக்கு வந்தபோது அவரது நெருங்கிய சகா மெல்ல சேர்ச்சிலின் காதருகே சொன்னார், "பார்த்தீர்களா நீங்கள் பேசுகிறீர்கள் என்றதும் எவ்வளவு கூட்டம் திரண்டிருக்கிறது. இதிலிருந்தே உங்களுக்குள்ள செல்வாக்கை யாரும் புரிந்துகொள்ளலாமோ" என்றார்.

அதற்கு சேர்ச்சில், "இதே மைதானத்தில் இன்று என்னை தூக்கிலே போடுகிறார்கள் என்று அறிவித்திருந்தால் இதைவிட இன்னொரு மடங்கு கூட்டம் இங்கே திரண்டிருக்கும்" என்று கூறினார், அமைதியாக.

## லொள்... லொள்...



## மீனம்: — சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், மனக் கவலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, பொருள் விரயம். | பி.ப. 2 மணி |
| சனி- | பெரியோர் பழி, மனக்கிலேசம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

## மேடம்: — சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | செய்தொழில் விருத்தி, கடன் படல். | காலை 6 மணி |
| புதன்- | பயனற்ற செயல், வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், வெளியிடப் பயணம். | காலை 6 மணி |
| வெள்ளி- | புது முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| சனி- | வீண் கவலை, ஆடம்பரச் செலவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

## இடபம்: — சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் நட்பு, மனப் பயம் நீங்கும். | காலை 6 மணி |
| திங்கள்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, கடன் சுமை. | காலை 7 மணி |
| புதன்- | தனலாபம், செய்தொழில் பலிதம். | காலை 6 மணி |
| வியாழன்- | செய் தொழில் விருத்தி, முன்னேற்றம். | காலை 9 மணி |
| வெள்ளி- | பணவரவு, கடன்தொல்லை நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- | எடுத்த காரியம் வெற்றி, கௌரவம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

## மிதுனம்: — சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | விண் மனஸ்தாபம், பெரியோர் பழி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | தேகசுகம் பாதிப்பு, மனக் கவலை. | காலை 9 மணி |
| சனி- | காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

## கும்பம்: — சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், பணவிரயம். | பகல் 12 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், கௌரவம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | வீண் முயற்சி, எதிர்பார்த்தது தோல்வி. | பி.ப. 1 மணி |
| புதன்- | கடன் சுமை, காரியத்தடை. | காலை 6 மணி |
| வியாழன்- | காரியானுகூம், கௌரவம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| சனி- | செலவு மிகுதி, கடன் தொல்லை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

## ★ இந்த வாரம் உங்கள் பலன் ★

(22.01.95 முதல் 28.01.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மகரம் | - சூரியன், புதன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| சிம்மம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன், வெள்ளி |

★ சந்திரன்-கன்னி, துலாம், விருட்சிகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

## கர்க்கடகம்: — சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நன்மை, பொருள் வரவு. | காலை 9 மணி |
| திங்கள்- | வீண்குறை நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- | எதிர்பார்த்த நன்மை, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| வியாழன்- | கௌரவம், தேகசுக நன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- | காரியசித்தி, தொழில் மேன்மை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 5

## மகரம்: — சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தனலாபம், உயர்ந்த நோக்கம். | காலை 7 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, பணத்தட்டுப்பாடு. | காலை 6 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், செய்தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், மனக்கலக்கம். | காலை 6 மணி |
| சனி- | உறவினர் பகை, ஆடம்பரச் செலவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -6

## சிம்மம்: — சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | பயனுள்ள செயல், பணவரவு. | காலை 9 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி: | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | வீண் மனஸ்தாபம், மனக்கவலை. | பகல் 12 மணி |
| சனி- | துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

## தனு: — சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துன்பம் நீங்கும், கௌரவம். | காலை 8 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, மனப் பயம். | பகல் 12 மணி |
| வியாழன்- | எதிர்பார்த்த நன்மை, தனலாபம். | காலை 7 மணி |
| வெள்ளி- | செய்தொழில் விருத்தி, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| சனி- | காரியசித்தி, பணவரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -1

## விருட்சிகம்: — சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | கடன் தொல்லை நீங்கும், காரியசித்தி. | காலை 7 மணி |
| புதன்- | உறவினர் தொல்லை, வீண் செலவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | காரியத்தடை, பொருள் விரயம். | காலை 8 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணத்தட்டுப்பாடு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-2

## துலாம்: — சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| புதன்- | காரியானுகூலம், மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், உறவினர் தொல்லை. | காலை 6 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், மனக்கவலை. | பகல் 12 மணி |
| சனி- | துன்பம் அதிகம், தேகாரோக்கியம் பாதிப்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 5

## கன்னி: — சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் நட்டம், மனக் கவலை. | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | தனலாபம், மனக் கலக்கம். | காலை 8 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, முயற்சித்தடை. | பகல் 12 மணி |
| சனி- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## சுட்டித் தம்பி

தம்பி ஒருவன் இருக்கின்றான்
நம்பி என்பதவன் பெயர்
இளைய பிள்ளை ஆனதால்
இறுமாப்பாக இருக்கின்றான்.

அப்பா அணைத்தால் சிரிக்கிறான்
அம்மா எடுத்தால் துடிக்கிறான்
அக்கா பிடித்தால் முறைக்கிறான்
அண்ணா பிடித்தால் நடிக்கிறான்.

தூக்கச் சொல்லிக் கத்துவான்
தூரப் போகச் சொல்லுவான்
ஆரும் தூக்க வந்தாலோ
அவரைக் கடித்து விடுகின்றான்.

வீட்டின் பொருள்கள் எடுக்கின்றான்
வீசி எறியப் பார்க்கின்றான்
வேண்டாம் தம்பி என்றாலே
வீணே எறிந்து உடைக்கின்றான்.

அனுப்பியது: வ.வில்பாதினி-எருவில்

"காற்றை யடைப்பது மனதாலே-இந்தக்
காயத்தைக் காப்பது செய்கையிலே,
சோற்றைப் புசிப்பது வாயாலே-உயிர்
துணி வுறுவது தாயாலே."
–சுப்பிரமணிய பாரதியார்–

## பாப்பா முரசு சிறுகதை

ஓர் ஊரில் சின்னையா, பொன்னையா என்ற இரு விவசாயிகள் இருந்தனர். இருவருமே நண்பர்கள். இவர்களில் சின்னையா மிகவும் சுறுசுறுப்பானவன். எந்த வேலையாக இருந்தாலும், அதைத் தள்ளிப்போடாமல் உடனுக்குடன் செய்து முடித்துவிடுவான்.

ஆனால் பொன்னையாவோ அப்படி அல்ல. அவன் சோம்பேறித்தனம் நிறைந்தவன். எந்த வேலையாக இருந்தாலும் பிறகு செய்துகொள்ளலாம் என்று தள்ளிப் போட்டு விடுவான்.

அந்த ஊரிலே இருவருக்குமே வயல் இருந்தது. இருவர் நிலங்களுமே அடுத் தடுத்து இருந்தன. சின்னையாவின் நிலம் சற்று மேட்டுப் பாங்கான இடத்திலும் பொன்னையாவின் நிலம் சிறிது பள்ளத் திலும் இருந்தது.

அந்த வருடத்தில் பருவமழை தொடங்கியதும் சின்னையா தன் நிலத்தை உழுது, நெற்பயிரிட்டான். நெல் அமோகமாய் விளைந்தது. அவற்றை அறுவடை செய்து, தனக்குத் தேவையானவற்றை வைத்துக் கொண்டு, மீதியை அவ்வூர் ஏழை, எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் விற்றான். இதனால் அவனுக்கு நல்லது செய்த திருப்தியும், நல்ல வருமானமும் கிடைத்தது.

பொன்னையாவோ பருவமழையைத் தவறவிட்ட பின்னர், தனது நிலத்தில் பயிர் செய்தான். ஆனால் போதிய நீர் இல்லாததாலும், சரியாகப் பராமரிக்கப்படாததாலும் அவனது நிலத்தில் சரியான விளைச்சலே இல்லை. ஓரிரு மூடை நெல்தான் விளைந்திருந்தது. அது அவனது தேவைக்கே போதுமானதாக இல்லை.

தன்னைப்போலவே நிலம் கொண்ட சின்னையா அதிகமாக அறுவடை செய்கிறானே, தனக்கும் வைத்துக்கொண்டு மீதியை ஏழை, எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கி, நல்ல பெயரும் எடுத்து வருகிறானே, என்று சின்னையாவின்மீது பொறாமை கொண்டான் பொன்னையா.

அடுத்த ஆண்டு பயிர் செய்யும் காலத்தில் அவனது நிலத்தில் விளைச்சலைக் குறைத்து விடவேண்டும் என்ற வஞ்சக எண்ணத்தோடு காத்திருந்தான் பொன்னையா.

அந்த ஆண்டும் வந்தது. வழக்கம்போல் பருவ மழையும் பெய்யத் துவங்கியது. சின்னையா வழக்கம்போல் தன் நிலத்தைப் பண்படுத்தி நெல் பயிரிட்டான்.

இதற்காகவே காத்திருந்த பொன்னையா, ஒரு நாள் இரவு சின்னையாவின் வயலில் ஏராளமான முள் விதைகளை விதைத்து விட்டுச் சென்றுவிட்டான். அன்றைய இரவு பலத்த மழை பெய்தது. அந்த மழை நிற்காமல் தொடர்ந்து மூன்று நாட்கள் பெய்தது. இதனால் மூன்று நாட்களும் மக்கள் யாரும் வெளியே தலைகாட்டவில்லை.

நான்காவது நாள் மழை நின்றது. மக்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து வேலைகளுக்குச் செல்லத் தொடங்கினர். சின்னையா தன் வயலுக்கு வந்து பார்த்தான். எங்கும் பச்சைப்பட்டு விரித்தாற்போல் நெல் மணிகள் முளைத்திருந்தன. இதனால் பெரிய மனமகிழ்ச்சியோடு வீடு திரும்பினான்.

பொறாமை எண்ணம் கொண்டிருந்த பொன்னையாவும் ஓடிவந்து முதலில் சின்னையாவின் வயலைப் பார்த்தான். தான் விதைத்த முள் விதைகள் தான் முளைத் திருக்கும் என்று ஆவலோடு பார்த்தவனின் தலையில் மண் விழுந்தது. அங்கு எல்லாமே நெற்பயிர்களாய் முளைத்திருக்கும் என்பதை அவன் எதிர்பார்க்கவே இல்லை.

தான் விதைத்த முள்விதைகள் என்னவாயிற்று என்று யோசித்தவாறே வந்தவன், தன் நிலத்தைப் பார்த்துத் திடுக்கிட்டான். அவன் நிலம் முழுக்க முள் செடிகள் முளைத்திருந்தன.

சின்னையாவின் நிலத்தில் விதைத்த முள் விதைகள் தன் நிலத்திற்கு எப்படி வந்தன, என்று யோசித்தபோதுதான் அவனுக்கு அந்த உண்மையே விளங்கியது.



## முற்பகல் செய்யின்..!

மூன்று நாட்கள் விடாமல் மழை பெய்ததால், வெள்ளம் பெருக்கெடுத்து, சின்னையாவின் மேட்டுப் பாங்கான வயலில் விதைக்கப்பட்டிருந்த முள் விதைகள் அனைத்தையும் அடித்துக்கொண்டு வந்து, பள்ளத்திலிருக்கும் பொன்னையாவின் வயலில் போட்டுவிட்டது என்பதுதான் அந்த உண்மை.

பொன்னையாவின் துரோக எண்ணத் திற்கு இயற்கையே துணை நிற்கவில்லை. மாறாக அவன் விதைத்த முள் அவன் வயலிலேயே முளைத்து அவனைப் பழிவாங்கிவிட்டது.

பொன்னையா வெட்கித் தலை குனிந்தான். அத்தோடு அவன் மனம் சமாதானமாகவில்லை. அவன் நேராக சின்னையாவிடம் சென்று நடந்த உண்மைகளைச் சொல்லி, தன்னை மன்னித்துவிடும்படி கெஞ்சிக்கேட்டுக் கொண்டான்.

சின்னையாவோ, "பொன்னையா! எப்போது தவறு செய்த ஒருவன் மனந்திருந்தி மன்னிப்புக் கேட்டுவிட்டானோ, அவனை மன்னித்து சிநேகம் பாராட்டுவதுதான் மனித குணம். உன் தீய எண்ணங்களுக்குரிய பிரதிபலனை நீயே அனுபவித்துவிட்டாய். ஆகவே நானும் உன்னை தண்டிக்க நினைப்பது மனிதத் தன்மையற்ற செயல். நீ திருந்தியது எனக்கு மட்டுமல்ல உனக்கும் லாபத்தை ஈட்டுவதற்குத்தான். இந்த வருடம் உனக்கு நெல் இல்லையே என்று கவலைப் படாதே. என் வயலில் நல்ல விளைச்சல் கிடைத்திருக்கிறது. அறுவடை முடிந்ததும், உனக்குத் தேவையான நெல் மூடைகளை உனக்குத் தருகிறேன். என் நண்பனான நீ துன்பத்தில் சிக்கித் தவிக்கும்போது நான் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப் பேனா? கவலைப்படாதே," என்று சொல்லி பொன்னையாவைத் தட்டிக்கொடுத்தான் சின்னையா.

பொன்னையா அவன் முன்னே கூனிக் குறுகித்தான் நின்றான்.

## விடுகதைகளும் விடைகளும்

1. தலைக்கு மேல் மலரும் பூ; தண்டின் பக்கம் சாயும் பூ. சுகம்தர விரியும் பூ, சூரியனை மறைக்கும் பூ. அது என்ன?
2. கைக்குள் ஏறும், காலுக்குள் ஏறாது. அது என்ன?
3. வீடில்லா நகரங்கள், நீரில்லா சமுத்திரங்கள். அது என்ன?
4. தட்டும் தாளம் நின்றுவிட்டால் ஆட்டம் எதுவும் நடக்காது. அது என்ன?
5. இரவிலே பூந்தோட்டம், காலையிலே வெறுந்தோட்டம். அது என்ன?
6. பாடல் இல்லா ஆட்டம், பணம் பறிக்கும் ஆட்டம். அது என்ன?

**விடைகள்**

1. குடை 2. வளையல்
3. தேசப்படம் 4. இதயம்
5. நட்சத்திரம் 6. சூதாட்டம்

ஜே.எம்.கியாஸ்-கிண்ணியா.

1. பச்சை மரத்தில், பச்சை இலையில், பச்சை கொம்பில், பச்சையாய் பிறந்து, பச்சை பட்சிக்கு, பாவமாய் இரையாவான். யார் அவன்?
2. 2 மாதத்திற்கு முன் பையில்; இப்பொழுது நான் குப்பையில்- நான் யார்?
3. தலையுண்டு கையில்லை. உடம்புண்டு காலில்லை, மருந்துண்டு. மாத்திரையில்லை. ஒளிவரும் விளக்கில்லை. அது என்ன?
4. எடுக்காவிட்டால் கத்துவான், எடுத்து விட்டால் நலம் விசாரிப்பான். வைத்து விட்டால் அடங்கிவிடுவான்.
5. நான் முடுக்கினால், நல்லவனும் வருவான். வைரியும் வருவான். சிலவேளை நாங்களும் வருவோம். அது எது?
6. உலகம் ஒரே வெள்ளை மயம். நடுவில் ஒரே கறுப்பு மயம் அது என்ன?
7. வீட்டு பெட்டி, போட்டுவிட்டால் அது நாட்டு பெட்டி அது என்ன?
8. பறக்கும் சிறகில்லை, கத்தும் உயிரில்லை. அது என்ன?

**விடைகள்**

1. மாம்பழம் 2. பேனா
3. தீக்குச்சி 4. தொலைபேசி
5. தொலைக்காட்சிப்பெட்டி
6. கண்
7. தொலைக்காட்சிப்பெட்டி
8. ஹெலிகப்டர்

பா.பிரதாபன்-பண்டாரவளை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28.01.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 75
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 72

பரிசுக்குரியவர்
த.கண்ணதாசன்-இந்துக்கல்லூரி, வாழைச்சேனை.

பாராட்டுக்குரியவர்கள்:
அ.அ. முஹம்மத் அஸாம்
ஸாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம்.
டயானா ராஜு-ப/த.ம.ம.வித்தியாலயம், பதுளை.
கிரிஷாந்தன்-ஸாஹிரா கல்லூரி, மாத்தளை.
ஐ.பர்வின்-வத்தேகம.
எம்.என். பாத்திமா தஸ்னீம்
பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம்.
பிரியங்கா கிருஷ்ணமூர்த்தி-தெமோதரை.

## கோலா

அவுஸ்திரேலியாவில் புகழ்பெற்ற கங்காருக்களைப் பற்றித்தானே உங்களுக்குத் தெரியும்.
அந்த நாட்டில் புகழ்பெற்ற இன்னொரு உயிரினமும் இருக்கிறது. அதன் பெயர் கோலா.
கங்காருக்கள் தமது வயிற்றில் உள்ள பைகளில் குட்டிகளைக்கொண்டு செல்வதுபோன்று, கோலாக்கள் தமது குட்டிகளை முதுகில் சுமந்தபடி மரத்திற்கு மரம் தாவிச் செல்லும்.
கோலாக்கள் சாப்பிடும் உணவும் வித்தியாசமானதுதான்.
யூகலிப்ட்ஸ் மர இலைகளைத்தான் இவை சாப்பிடும். வேறு எதையும் இவை சாப்பிடுவது கிடையாது.






மின்சாரத்துறையில் மிக முக்கியமான சாதனங்கள் மூன்று. அவை, டைனமோ, ட்ரான்ஸ்போமர், டி.சி.மோட்டர்ஸ். இவை மூன்றையும் கண்டுபிடித்தவர் ஒருவரேதான். அவர் மைக்கல் பாரடே. கண்டுபிடித்த ஆண்டு 1831.

## அறிவோம் மனதில் பதிவோம்

இங்கிலாந்தைச் சேர்ந்த பி அன்ட் ஓ என்ற கம்பனிதான் முதன் முதலில் பயணிகளுக்கான கப்பல் வழிப்போக்குவரத்தை ஆரம்பித்தது. 1844ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் திகதி துருக்கி நாட்டுக்கு இந்த கப்பல் போக்குவரத்து துவக்கப்பட்டது.






வட அமெரிக்காவில் அமெரிக்க, மெக்சிக்கோ எல்லைகளுக்கு இடையே உள்ள நீளம் 3 ஆயிரத்து 110 கி.மீ. மெக்சிக்கோ நாட்டிலிருந்து எல்லை தாண்டி அமெரிக்காவிற்கு நுழைவோரின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது. இதனால் இந்த எல்லையில் கண்காணிப்பு அதிகப்படுத்தப் பட்டுள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# 5

# மகாகுலம்



மகளைப்பற்றி ஏதோ ஒரு கெட்ட தகவலைக் கேட்டுவிட்டோம் என்பதற்காக அவளை அப்போதே தண்டிக்கிற வேகத்தில் பவத்ராதன் திருமேனி இல்லை. துள்ளிக் குதிக்கிற பழக்கம் அவருக்கு எப்போதுமே இருந்ததில்லை.

நீலகண்டன் திருமேனியின் குணசித்திரத்துக்கு இவர் நேர்மாறு.

ஆகாயமே இடிந்து வீழ்கிறது என்றாலும்கூட அசராத ரகம். வானம் இடிய இப்போது என்ன காரணம் என்று அண்ணாந்து பார்த்துச் சிந்திக்க ஆரம்பித்து விடுவார்.

சிந்திப்பது மட்டுமில்லை; என்னென்ன நடக்கும் என்னென்ன நடக்காது என்றெல்லாம் பகுத்து ஆராய்ந்தபிறகுதான் என்ன முடிவுக்கு வருவதென்கிற தீர்மானத்துக்கே வருவார்.

நீலகண்டன் அப்படியில்லை.

ஆகாயம் உடைந்துவிட்டதா என்று மேலே பார்க்கக்கூட அவருக்குப் பொறுமையிருக்காது! அப்படிப் பார்ப்பதற்குள் அது தலைமீது விழுந்து விட்டாலோ... என்கிற பயத்தோடு "தடுங்கடா தடுங்க..." என்று ஆர்ப்பரிக்க ஆரம்பித்துவிடுவார்.

தன் மகனும், பவத்ராதனின் மகளும் சம்பந்தப்பட்டு ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டதென்று கேட்ட மறுகணமே அனலில் விழுந்த புழுப்போல் துவண்டு போனார்.

உடனே ஒரு முடிவுக்கும் வந்து விட்டார்!

அவர் மட்டுமில்லை; முற்றாக யோசனை செய்து முடித்தபிறகு... பவத்ராதன் திருமேனியும் ஒரு முடிவெடுத்தாயிற்று. ஆனால் இரண்டுமே வேறு வேறு.

முதலில் பயந்துபோயிருந்தாலும் வெகு நயத்தோடுதான் நடந்த விவரங்களைக் குஞ்சன் திருமேனியின் காதுக்குள் போட்டிருந்தார். வெகு நயமான முறை!

வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிக் கொண்டிருந்த நேரம் பார்த்து பவத்ராதன் திருமேனியிடம் பவ்யமாகச் சொன்னார் அவர். அதைக் கேட்டதுமே...

"என்னடா குஞ்சா? என்னத்துக்கு இந்தப் பீடிகை எல்லாம் போடறே? என்ன அப்படி ஒரு கவுரவமான சங்கதி?"

"இந்த இல்லத்துக் கொழந்தை ஸ்ரீலதாவைப் பத்தின சங்கதி திருமேனி!"

"ஸ்ரீலதாவுக்கு என்ன?"

வெற்றிலையில் விளையாடிக் கொண்டிருந்த சுட்டுவிரல் ஒருகணம் அப்படியே நின்றது. நிமிர்ந்து வேலைக்காரன் குஞ்சனை வியப்பாகப் பார்த்தார்.

"வேறெதையும் யோசிக்காதீங்க! குழந்தைக்கு ஒரு குழப்பமும் இல்லே!.... இருந்தாலும்... சொல்லவேண்டியது இந்த இல்லத்து உப்பைத் தின்னுட்டிருக்கிற என் கடமை திருமேனி..! அதனாலதான் சொல்றேன்னு எடுத்துக்குங்க..

"என்ன விஷயம்? அதைச் சொல்லுடா..."

பவத்ராதன் திருமேனியின் உதட்டில் புன்னகை நெளிந்தது.

"இல்லக் குழந்தையும் நீலகண்டன் திருமேனி மகனும் கொஞ்சம் நெருக்கமா இருக்காங்க திருமேனி!"

"நெருக்கம்னா?"

"ரெண்டுபேருக்கும் கல்யாணம் நடத்தி வைக்கவேண்டிய அளவுக்கு... ஒரு நெருக்கம்!"

பவத்ராதன் துளியும் பதறவில்லை.

"நானும் அதைப்பத்தித்தான் யோசிச்சிட்டுக்கேன் குஞ்சா!"

"யோசிச்சுட்டே இருந்தாப் போதாது திருமேனி! சீக்கிரமே ஒரு முடிவுக்கும் வரணும்..." என்ற குஞ்சன் தயங்கித் தயங்கி நடந்தது அவ்வளவையும் சொல்லி விட்டார்.

அவருடைய அன்புக்கும் பாசத்துக்கும் உரியவள் ஸ்ரீலதா என்கிற உணர்வும் எச்சரிக்கையும் குஞ்சனின் பேச்சில் இணைந்தே இருந்தது அப்போது!

திருமேனி வெடித்து...உதட்டைக் கடித்து... உணர்ச்சிப்பெருக்குரலை உயர்த்தி... ஏதோ ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தப் போகிறார் என்கிற எதிர்பார்ப்பு குஞ்சனிடமிருந்தது! ஆனால் அப்படி எதுவுமே நடக்கவில்லை! கேட்டு முடித்தபிறகு அதே புன்னகை மாறாமல் சொன்னார் பவத்ராதன்.

"ரெண்டுபேருக்கும் கல்யாண வயசு வந்தாச்சு குஞ்சா! இன்னது இன்னதுன்னு புரிஞ்சுக்கற காலமும் வந்துடுச்சு..அதனால அவுங்க செஞ்சது தப்பு அப்படீன்னு தப்பா எந்த முடிவுக்கும் நாம வந்துடக் கூடாது! ஆனா அதுவே தப்பாகற மாதிரி வாய்ப்புகளை ஏற்படுத்திக் குடுக்கவும் கூடாது! எங்கே ஒரு பிரச்னை வந்தாலும் அதுக்கு வேறொரு தீர்வும் உலகத்திலே இருந்தே தீரும். எதுக்கும் நான் ஸ்ரீலதாவையும் கேட்டப்புறம் ஒரு முடிவுக்கு வர்றதுதானே சரி?

"ஆமா திருமேனி! ஆமா!"

பவத்ராதன் கேட்ட கேள்வியில் குஞ்சனுக்கு எந்தவித அபிப்பிராய வித்தியாசமும் இருக்கவில்லை. அதனால் ஆமோதித்தார் குஞ்சன். அவரால் குழந்தை குழந்தை என்று அழைக்கப்பட்ட குமரிப்பெண் ஸ்ரீலதா அடுத்த சில நிமிடங்களிலேயே அப்பாவின் முன்வந்து நின்றாள்.

"எதுக்குப்பா கூப்பிட்டீங்க?"

மனசுக்குள் படபடப்பு இருந்தாலும் வெளியே காட்டிக்கொள்ளாமல் கேட்டாள் ஸ்ரீலதா. அவள் முகத்தில் எப்போதும் போலவே ஒருவகை அப்பாவித் தனம்.

"அம்மா...! எனக்கு வயசு ஆனதோட உனக்கும் கல்யாண காலம் வந்திருக்கு! அதனால என் கண்ணை நான் மூடறதுக்குள்ளே நீ இல்லத்திலே சந்தோசமா இருக்கிறதைப் பார்க்கணும்'னு ஒரு ஆசை! நீ என்ன சொல்றே?"

மகளின் மனதை அறிந்துகொள்ள சாதாரணமாக எல்லாப் பெற்றோர்களும் கேட்கிற அதே கேள்வி!

"இப்ப அதுக்கு என்னப்பா அவசரம்?"

"எதுக்கு ஸ்ரீலதா நாளைத் தள்ளணும்? இந்த இல்லதிலே சீக்கிரமே ஒரு குழந்தைப் பிஞ்சு காலூன்றி நடக்கறதை நானும் பார்க்க வேண்டாமா?"

ஸ்ரீலதா தலையைக் குனிந்து கொண்டாள்.

"...நான் சீக்கிரமே உனக்குக் கல்யாணம் செய்துவைக்க நினைக்கறேம்மா!"

"அப்பா!"

அவளுக்கு என்னவோ சொல்ல வேண்டும் என்கிற படபடப்பு அது- அவளது குரலின் தொனியிலேயே குழைந்து தெரிந்தது.

திருமேனி இதைப் புரிந்துகொண்டுதான் ஓர விழியால் வேலைக்காரன் குஞ்சனைப் பார்த்தார்.

"என்னம்மா?"

"உங்க முடிவை நான் மறுக்கறதா நினைக்கப்படாது."

"சொல்லும்மா!"

"எனக்கு நீங்க கல்யாணம் செய்து வைக்கணும்னு முடிவு எடுத்தா அது..."

"உனக்கு விருப்பமில்லியா?"

"இருக்குப்பா! ஆனா அது— நீலகண்டன் திருமேனி இல்லத்தோட சம்பந்தப் பட்டிருக்கணும்."

மகள் பட்டவர்த்தனமாகச் சொன்ன பிறகு...

பவத்ராதன் திருமேனி அப்போதும் புன்னகை பூத்தார். "நல்லவேளை ஸ்ரீலதா! நான் கேட்கறதுக்கு முன்னாலே நீயே சொன்னது நல்லதாப் போச்சு!"

"ஏப்பா...? நான் சொன்னதிலே எதுவும் தப்பா?"

"அட, என்னம்மா நீ? என் பொண்ணு எந்தத் தப்பும் பண்ணாது அப்படின்னு எனக்குத் தெரியாதா? சரி....சரி! நீ உள்ளே போ!"

அப்படிச் சொன்ன கணமே அங்கிருந்து தப்பின மாதிரி உள்ளே ஓடினாள் ஸ்ரீலதா.

திருமேனி எதையோ அப்போதும் தீவிரமாகச் சிந்தித்துக்கொண்டிருந்ததைப் பார்த்தார் குஞ்சன். தந்தையும், மகளும் பேசிக்கொண்டிருந்தபோது தனக்கு எதுவுமே சம்மந்தமில்லாத விஷயம் என்று எங்கேயோ பார்த்துக்கொண்டு நின்றிருந்த குஞ்சன், தன்பக்கம் திரும்பியதுமே திருமேனி கேட்டார்: "ஏண்டா குஞ்சா? உன் காதிலே ஸ்ரீலதா சொன்னது விழுந்ததா?"

"திருமேனி!"

குஞ்சனின் தயக்கம் கொஞ்ச நேரம் பவத்ராதனைப் பேசவிடவில்லை. ஏனென்றால் நீலகண்டன் திருமேனி சமாச்சாரம் அவனுக்கும் தெரிந்தது தானே? மனிதர் வானத்துக்கும் பூமிக்கும் துள்ளிக் குதிக்கிற ரகம். போதாக் குறைக்கு நீயா நானா என்கிற தன் முனைப்பு உணர்வும்!

"என்ன குஞ்சா..? ஏன் யோசிக்கறே! அப்பட்டமா தெரிஞ்சுபோச்சு- ஸ்ரீலதா மனசிலே இருக்கிறவன் அந்தக் கோகுல் தான்!"

"நீலகண்டன் திருமேனி சம்மதிக்கணுமே திருமேனி!"

"ஏன் சம்மதிக்க மாட்டாரு? அவர் இல்லத்துப் பக்கம் தலையைக் காட்டறதில்லேன்னு முடிவெடுத்தவன் நான். இப்போ நானே அவர் இல்லத்துக்குப் போய்க் கேட்டா பழைய சமாச்சாரம் எல்லாம் மறந்து போயிடும் குஞ்சா? ஸ்ரீலதா நல்லா இருக்கணும்னா நான்தான் கவுரவத்தைத் தள்ளி வச்சுட்டுப் போய்ப் வேசணும்! பேசறேன்! என்ன சொல்றே?"

குஞ்சன் கூனிக் குறுகி நின்றான். என்ன சொல்வது? எஜமான் தீர்மானத்தை வெட்டிப் பேசுவது எப்படி?

"திருமேனி ஒரு முடிவெடுத்தா அது சரியாத்தான் இருந்திருக்கு."

"அப்ப...இது?"

"இதுவும் சரியாவே இருக்கும் திருமேனி!"

□□□

ஆமோதித்த குஞ்சனையும் அழைத்துக் கொண்டுதான் நீலகண்டன் திருமேனியின் பாலேக்கல் இல்லத்துப் படிகளை மிதித்தார் பவத்ராதன் திருமேனி.

நுழையும்போதே நீலகண்டன் புரிந்து கொண்டுவிட்டார்!

அவர் ஆளை மட்டுமில்லை; நிழலையே அளக்கிறவர்! நீலகண்டனைப் பற்றி ஊர் வைத்திருந்த அபிப்பிராயம்தான் இல்லத்தின் உள்ளே நுழைந்ததுமே பவத்ராதனுக்கும் புரிந்தது!

என்றாலும் இது மகளின் நல்வாழ்க்கையைப் பற்றிய விஷயம் ஆயிற்றே! நிதானமும் பொறுமையும் போர்த்துக்கொண்டு நின்றிருந்தார் பவத்ராதன்! அவர் நிற்பதையே கவனிக்காததுபோல் சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தார் நீலகண்டன்.

"தன்னைவிட எந்தவகையிலும் இவன் பெரியவனில்லை" என்கிற எண்ணத்தோடு இருந்தவர் அல்லவா பவத்ராதன்? இப்போது எந்த முகத்தை வைத்துக்கொண்டு எதிரில் நிற்கிறார்?

இப்படித்தான் நீலகண்டனின் நினைவு சுழி கொண்டிருந்தது.

அப்போதும் பதறாமல் பவத்ராதன் நம்பூதிரி வலியக் கேட்டார்.

"இப்படி இங்கே உட்காரலாமா நீலகண்டா?"

கேட்டுவிட்டு, நீலகண்டனின் அனுமதிக்காகக்கூடக் காத்திராமல் அமர்ந்துவிட்டார் பவத்ராதன்.

தன் காலடியில் மகாப் பெரிய மாந்திரீகன் திருமேனி!

நீலகண்டனின் கண்கள் பவத்ராதனின் குடுமியை அலட்சியத்தோடு பார்த்தன. உதட்டில் விஷமம்.

"என்ன இப்படி? வழிதப்பி வந்துட்டீங்களா பவத்ராதன்?"

கேட்டார் நீலகண்டன்.

நம்பூதிரியின் வழக்கப்படி-நீலகண்டன் தான் பாலேக்கல் இல்லத்துக்கு மாப்பிள்ளையாக வந்து குடியேறியவர். அதேபோல் பாலேக்கல் இல்லத்தில் பிறந்த பவத்ராதன் திருமேனி, மேலிடத்து மனைக்கு மாப்பிள்ளையாகப் போனவர்! எனவே யாரும் யாரையும் வழிதப்பி வந்ததாகச் சொல்வது அர்த்தமில்லாத பேச்சு! எனவேதான் இளநகையோடு சொன்னார் பவத்ராதன்.

"ஒரு காலத்திலே இதுவும் நம்ம இல்லம் தானே திருமேனி? இந்த இல்லத்துக்குள்ளே எத்தனை தடுப்பு இருக்கு....எத்தனை வழியிருக்கு எல்லாமே எனக்கும் தெரியும்."

"எதுக்கு வந்தீங்க?"

"உங்க மகன் கோகுலை நம்ம இல்லத்துக்குக் கொண்டுபோகலாம்னு ஒரு மோகம். அதைப்பத்திப் பேசணும்."

நேரடியாக விஷயத்தைச் சொன்னார் பவத்ராதன். கேட்டதுமே வெடித்துச் சிரித்தார்-நீலகண்டன்.

தம்மை ஒரு காலத்தில் பழித்துப் பரிகாசம் செய்த பவத்ராதனை இப்போது வன்மம் தீர இழித்து அவமானப்படுத்துகிற வெறி நீலகண்டனுக்கு!

"இதப் பாருங்கோ- பவத்ராதன்! உங்களுக்கு ஆயிரம் மோகங்களிருக்கலாம். அது எல்லாமே நிறைவேறாது! நம்ம குடும்ப அந்தஸ்துக்கு உங்க மேலிடத்து இல்லம் சேரவே சோராது! உங்க இல்லத்துக்கு எம்மகனை அனுப்ப துளிகூட எனக்கு விருப்பமில்லே!"

மனப்பூர்வமாகத் தன்னை அவர் அவமானப் படுத்துகிறார் என்று பவத்ராத னுக்குப் புரிந்துவிட்டது! எனவே பேசிப் பிரயோஜனம் இல்லை என்கிற முடிவோடு எழுந்தார். எழுகிறபோது விடைகேட்டார்.

"நான் வரட்டுமா திருமேனி?"

"இதப் பாருங்கோ! நான் உங்களை அழைக்கவுமில்லே... உபசரிக்கவுமில்லே! நீங்களா வந்தீங்க.. நீங்களாகப் போறீங்க! இதுக்கென்னத்துக்கு வறட்டுப் பவ்யதை?"

அப்போதும் பவத்ராதனின் முகத்தில் ஒரு மாற்றமுமில்லை.

ஆனால் குஞ்சனின் முகம் வெளிறிப் போயிருந்தது. நீலகண்டனின் வேலைக்காரன் வாயை மூடிக்கொண்டு சிரித்தான்.

பவத்ராதன் இல்லப்படிக்குள் அடியெடுத்து வைக்கும்போதே கோகுல் கவனித்து விட்டான். ஏதாவது பேசலாம் என்கிற விருப்பத்தோடு தான் நெருங்கியும் வந்து நின்றிருந்தான். தந்தை வேண்டும் என்றே அவரை வெறுப்பேற்றியது அவனுக்கும் புரிந்துவிட்டது! இல்லத்தை விட்டு வெளியேறியபிறகு பின்னால் ஓடோடிப் போய் ஏதோ பேச எத்தனித்த போது-

நீலகண்டனின் குரல் உரக்க உத்தரவிட்டது!

"அடேய் கோகுல்! பேச வேண்டியது அவ்வளவையும் நான் அவரோட பேசியாச்சு! நீ மரியாதையா உள்ளே போ!"

அப்பாவின் அதட்டலுக்குப் பிறகும்... அவனால் பவத்ராதனைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. தலையைக் குனிந்தது குனிந்தபடி இல்லத்துக்குள் போய் மறைந்தான்! அப்போதுதான் நீலகண்டனின் நெஞ்சுக்குள் வேறொரு வன்மமும் சுழியிட்டது! வேகமாக எழுந்து வாசலுக்கு வந்தார். "இதப் பாருங்கோ! கோகுலுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்து முடிச்சாச்சு! நாலே நாலு நாள்லே அது நடக்கும்! நீங்க பாட்டுக்கு ஏதேதோ நெனைப்பை வச்சுட்டு ஊரு பூராவும் சொல்லிக்கிட்டுத் திரியாதீங்கோ! கல்யாணத்தைப் பத்தி உங்க காதுக்குப் போடலேன்னு ஒரு குறை வேண்டாம்.."

பவத்ராதன் திருமேனி பதிலேதும் பேசவில்லை. வெகு வேகமாய் இல்லத்துக்கு விரைந்தார்! குஞ்சனின் மனசு குமுறிக்கொண்டிருந்தது! எதிரிலே ஆனாலும் இல்லந்தேடி வந்த பிறகு கொஞ்சமாவது மட்டுமரியாதையோடு பேசுவது தானே மனிதத் தன்மை! இந்த நீலகண்டன் என்ன மனிதன்?"

உள்ளத்தோடு புலம்பிக்கொண்டிருந்த குஞ்சனோடும் பவத்ராதன் பேசவில்லை. வேதனையில் வெந்து நொந்துபோன மனசில் ஏதேதோ சிந்தனைகள் பவத்ராதனுக்கு.

□□□

மகா மாந்திரீகனான பவத்ராதனை நீலகண்டன் அவமானப்படுத்தியனுப்பிய நாலாவது நாள் கோகுலின் திருமணம் கட்டாயத்தோடு நடத்தப்பட்டது.

அன்று முதல் நீலகண்டன் திருமேனிக்கு கஷ்டகாலம் ஆரம்பமாயிற்று. அது நீலகண்டன் திருமேனியின் கஷ்ட காலமல்ல; பாலேக்கல் மனையின் கஷ்ட காலங்களின் தொடர்ச்சி என்பதை யாருமே அறிந்திருக்கவில்லை!

(தொடர்ந்து வரும்)

எழுதுவது யார்?
தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் 'முகமூடி'யாக எழுதும் தொடர் இது!
வாசகர்களின் ஊகிப்புத் திறனுக்கு சவால்!
கண்டுபிடிக்கும் வாசகர்களில் பத்து அதிர்ஷ்டசாலிகளுக்கு
அசத்தலான பரிசுகள் காத்திருக்கின்றன-
தொடர்ந்து வாசியுங்கள்
நாம் கேட்கும்போது மட்டும் விடையை
எழுதி அனுப்பினால்போதும்.

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: என். செல்வகுமார்
வயது: 22
முகவரி: பூலாச்சேனை நுரைச்சோலை, புத்தளம்.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி பார்த்தல், கரப்பந்து விளையாடுதல்.



பெயர்: எம். நஸீர்
வயது: 20
முகவரி: 15/31, பள்ளி ஒழுங்கை, நாவல வீதி, ராஜகிரிய.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.




பெயர்: அ. மெற்றில்டா
வயது: 20
முகவரி: 48, சங்கமம், திரு கோணமலை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, வலைப் பந்து விளையாடுதல்.



பெயர்: பாத்திமா றிஸ்னா
வயது: 24
முகவரி: வரகாதொட்ட ரோட், இரத்தினபுரி.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், பத்திரிகை, பேனா நட்பு.



பெயர்: ரி. ரூபன்
வயது: 25
முகவரி: AL-HUDA ENGINEERING P.O.BOX NO- 17015, DOHA-QATAR.
பொ.போ: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி, பேனாநட்பு.



பெயர்: எல்.சிராஜ்
வயது: 24
முகவரி: AL-JUMAIH COM, P.O.BOX- 224, DAMMAM-31411 K.S.A.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம், தொலைக்காட்சி, கிரிக்கெட்.

பெயர்: ஜே.உபைதுள்ளா
வயது: 22
முகவரி: P.O.BOX NO-26154 CODE NO-13122 SAFAT,KUWAIT.
பொ.போ: பத்திரிகை, கதைப்புத்தகம் வாசித்தல்

பெயர்: ரிகாஸ்
வயது: 18
முகவரி: 28/30, பாபர் வீதி கொழும்பு-13.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், கதை, கவிதை வாசித்தல்.

பெயர்: ஏ.மோகனதாஸ்
வயது: 28
முகவரி: 108, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, ரீ.வி.பேனாநட்பு

பெயர்: ஏ. நஸார்
வயது: 20
முகவரி: 227, பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது-1
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: எம். சுகிந்தன்
வயது: 22
முகவரி: 72, Rte Des Acacias, 1227 Carouge,SWITZERLAND
பொ. கதைப்புத்தகம் வாசித்தல், படம் பார்த்தல்.

பெயர்: இ.யோகநாதன்
வயது: 29
முகவரி: சின்னப்புதுக்குளம், வவுனியா.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, பத்திரிகை வாசித்தல்.


www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

**என்றும் முதலிடம்**

உலகில்
மிகச் சிறந்த நாவல் எது?
ஒரே பதில்
தாய்! தாய்!! தாய்!!!

உண்மைகள் எப்போதும்
வசீகரமானவை
அதுதான் 'தாய்' நாவல்
எப்போதும்
முதலிடத்தில் இருக்கிறது!
தவறவிடாமல் தொடர்ந்து
வாசியுங்கள்!
ரகுநாதனின்
மொழி பெயர்ப்புநடை
பிரமாதப்படுத்துகிறது.

-ஆ.ர்.



# தாய் 9

## மக்சீம் கார்க்கி

பாசி மணிகள் பல சேர்ந்து மாலையாவது போல, நாட்கள் இணைந்திணைந்து வாரங்களாய், மாதங்களாய் மாறிக்கொண்டிருந்தன. ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் பாவெலின் வீட்டில் அவனது நண்பர்கள் கூடினார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் அவர்கள் தமக்கு முன்னுள்ள பெரிய படிக்கட்டில் ஒரு படி மேலேறியதாகவும், ஏதோ ஒரு தூர லட்சியத்தை நோக்கிச் சிறிது சிறிதாக உயர்ந்து வருவதாகவுமே தோன்றியது.

பழைய நண்பர்களோடு புதிய நண்பர்களும் வந்து சேர்ந்தார்கள். விலாசவின் வீட்டிலுள்ள சின்ன அறையைப் பொறுத்தவரை அதுவே ஒரு பெருங்கூட்டம். நதாஷா குளிரால் விறைத்தும் களைத்தும் வந்து கொண்டிருந்தாள்; எனினும் அவள் உற்சாகமாயிருந்தாள். பாவெலின் தாய் அவளுக்குத் தான் சொன்னபடி ஒரு ஜோடிக் காலுறைகள் பின்னிக் கொடுத்தாள்; அந்தப் பெண்ணின் சின்னஞ்சிறு கால்களில் அவளே அதை மாட்டிவிட்டாள். முதலில் நதாஷா சிரித்தாள்; ஆனால், மறுகணமே அவள் சிரிப்பை அடக்கி அமைதியானாள்.

"ஒரு காலத்தில் என்னிடம் மிகவும் பிரியம் கொண்ட தாதி ஒருத்தி இருந்தாள்" என்று மென்மையாய்ச் சொன்னாள் அவள், "எவ்வளவு அதிசயமாயிருக்கிறது பார்த்தீர்களா, பெலகேயா நீலவ்னா? பாடுபடும் மக்கள் துன்பமும் துயரமும் சூதும் வாதும் கொண்ட வாழ்க்கைதான் நடத்துகிறார்கள். எனினும் மற்ற எல்லாரையும் விட அன்பு காட்டுகிறார்கள்....." என்று சொன்னாள். அவள் குறிப்பிட்ட மற்றவர்கள் அவளுக்கு வெகு தூரத்தில், ரொம்ப தூரத்தில் தள்ளிப் போனவர்கள்.

"நீங்கள் எப்படிப்பட்டவர்!" என்றாள் பெலகேயா; "பெற்றோர்களையும் உற்றார்களையும் இழந்து நிற்கிறீர்களே.."

அவள் பெருமூச்செறிந்தாள்; பிறகு மௌனமானாள். அவளுக்குத் தன் சிந்தனைகளை உருக்கொடுத்து வெளியிட முடியவில்லை. ஆனால், நதாஷாவின் முகத்தை பார்க்கும்போது, முன் உணர்ந்தது போலவே, இனந்தெரியாத ஏதோ ஒன்றுக்குத் தான் நன்றி செலுத்தித்தானாக வேண்டும் என்ற உணர்ச்சி அவள் உள்ளத்தில் பிறந்தோங்கியது. அவள் அந்தப் பெண்ணுக்கு எதிராக, தரையில் உட்கார்ந்தாள்; அந்தப் பெண்ணோ தனது தலையை முன்னே தாழ்த்தி, இனிய புன்னகை புரிந்து கொண்டிருந்தாள்.

"பெற்றோர்களை இழந்து நிற்கிறேனா?" என்றாள் அவள்; 'அது ஒன்றும் பிரமாதமில்லை. என் தந்தை ஒரு முரட்டு ஆசாமி; என் சகோதரனும் அப்படித்தான். மேலும் அவன் ஒரு குடிகாரன். எனது மூத்த சகோதரி மகிழ்ச்சியற்றுப்போய் விட்டாள். அவளைவிடப் பல வருடங்கள் மூத்தவன் ஒருவன்தான் அவள் கணவன். பெரிய பணக்காரன்தான்; ஆனால் படு மோசமானவன்; மகா கஞ்சன். என் அம்மாவை நினைத்தால் எனக்கு வருத்தம் தான் உண்டாகும். அவளும் உங்களைப்போல், சாதாரணமான பெண்மணிதான். சுண்டெலியைப்போல், சிறு உருவம்; சுண்டெலி போலவே குடுகுடுவென்று ஓடுவாள்; எதைக் கண்டாலும் அவளுக்கு ஒரே பயம்தான். சில சமயங்களில் அவளைப் பார்க்கவேண்டுமென்று அப்படி ஆசைப்படுவேன்!...."

"அடி என் அப்பாவிப் பெண்ணே!" என்று தனது தலையை வருத்தத்தோடு அசைத்துக்கொண்டே சொன்னாள் தாய்.

அந்தப் பெண் மீண்டும் தன் தலையை உயர்த்தி, எதையோ பிடித்துத் தூரத் தள்ளுவதைப்போல, கையை உதறி நீட்டினாள்.

"இல்லை, இல்லை. சமயங்களில் எனக்கு ஒரே சந்தோஷம், தாங்க முடியாத சந்தோஷம்!"

அவளது முகம் வெளுத்தது; அவளது நீலக்கண்கள் ஒளிபெற்றன. அவள் தன் கரங்களைத் தாயின் தோளின்மீது வைத்துக் கொண்டாள்.

"எத்தகைய மகத்தான வேலையில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்று மட்டும் உங்களுக்குத் தெரிந்தால், புரிந்தால்!..." கம்பீரமாகவும், மெதுவாகவும் சொன்னாள் நதாஷா.

ஏதோ ஒரு பொறாமை உணர்ச்சி பெலகேயாவின் இதயத்தைத் தொடுவது போலிருந்தது.

"அதற்கெல்லாம் நான் ஆள் இல்லை. நானோ ஒரு கிழம்; மேலும் எனக்கு எழுத்து வாசனை கிடையாது..." என்று துக்கம் தோய்ந்த குரலில் சொல்லிக்கொண்டே தரையை விட்டு எழுந்தாள் தாய்...

...பாவெல் அடிக்கடி பேசினான்; அதிகநேரம் பேசினான்; அழுத்தத்தோடு பேசினான்- நாளுக்கு நாள் மெலிந்து வந்தான். ஆனால் அவன் நதாஷாவைப் பார்க்கும்போதும், அவளோடு பேசும்போதும் அவனது கண்களிலுள்ள கடுமையான பார்வை மறைந்து மென்மையாய் ஒளிர்வது போலவும், குரலில் இனிமை நிறைந்து ஒலிப்பது போலவும், அவன் எளிமையே உருவாய் இருப்பது போலவும் தாயின் மனதில் பட்டது.

"கடவுள் அருளட்டும்!" என்று அவள் நினைத்துக்கொண்டாள், தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

அவர்களுக்குள் எழும் வாதப் பிரதிவாதங்கள் கொதிப்பேறி, வீராவேசம் பெறும்போதெல்லாம், அந்த ஹஹோல் தன் இடத்தை விட்டு எழுந்து நின்று, உடம்பை ஒரு கண்டாமணியின் நாக்கைப்போல் முன்னும் பின்னும் ஆட்டிக்கொண்டு ஏதோ சில அன்பான, சாதாரணமான வார்த்தைகளைச் சொல்லுவான்; உடனே எல்லோரும் அமைதியாய் விடுவார்கள். அந்த நிகலாய் வெஸோவ்ஷிகோவ் மட்டும் மற்றவர்களை ஏதாவது செய்யும்படி கடுகடுப்பாய்த் தூண்டி விட்டுக்கொண்டேயிருப்பான். அவனும், அந்தச் செம்பட்டைத் தலையனும் தான் (செம்பட்டைத் தலையனை அவர்கள் சமோய்லவ் என அழைத்தார்கள்) சகல வாதப் பிரதிவாதங்களையும் ஆரம்பித்து வைப்பார்கள். சோப்புக் காரத்தில் முக்கியெடுத்ததைப்போன்ற தோற்றமும், உருண்டைத் தலையும்கொண்ட இவான் புகின் என்பவன் அவர்களை ஆதரித்துப் பேசுவான். வழிய வழியத் தலைவாரி விட்டிருக்கும் யாகவ் சோமவ் அதிகம் பேசுவதில்லை. பேசினால் அழுத்தம் திருத்தமாய்ப் பேசுவான். அவனும், அகல நெற்றிக்காரனான பியோதர் மாசின் என்பவனும் பாவெலையும் ஹஹோலையும் ஆதரித்துப் பேசுவார்கள்.

சில சமயங்களில் நதாஷாவுக்குப் பதிலாக, நிகலாய் இவானவிச் என்பவன் வந்து சேருவான். அவன் மூக்குக் கண்ணாடி போட்டிருப்பான். வெளுத்த இளந்தாடியும் அவனுக்கு உண்டு. அவன் எங்கேயோ ஒரு தூரப் பிரதேச மாகாணத்தில் பிறந்தவன்; "ஓ" என்ற ஓசை அவன்பேச்சில் அதிகம் ஒலித்தது. பொதுவில்,.. அவன் ஒரு தொலைவானவனாகவே தோன்றினான். அவன் சர்வ சாதாரண விஷயங்களையே பேசினான். குடும்ப வாழ்க்கை, குழந்தைகள், வியாபாரம், போலீஸ் உணவுப் பொருள்களின் விலைவாசி- முதலிய மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளைப் பற்றியே பேசினான்.ஆனால் அவன் பேசிய முறையானது எது எல்லாம் பொய்யாகவும் அறிவுக்குப் பொருந்தாததாகவும் முட்டாள்தனமாகவும் அசட்டுத்தனமாகவும், அதே சமயத்தில் பொதுமக்களுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடியதாய் இருக்கிறதோ, அவற்றையெல்லாம் பகிரங்கப்படுத்துகிறமாதிரி இருக்கும். மனிதர்கள் சுகமாகவும், நேர்மையாகவும் வாழ்ந்துகொண்டிருக்கும் ஏதோ ஒரு தூர தொலைப் பூமியிலிருந்து வந்தவன் போல தாய்க்குத் தோற்றம் அளித்தான் அவன். இங்கோ எல்லாமே அவனுக்குப் புதிதாக இருப்பது போலவும், இந்த வாழ்க்கையே அவனுக்குக் கொஞ்சம் கூட ஒத்துக்கொல்லாதது போலவும் வேறு விதியின்றித்தான் அவன் இங்கு வாழ்ந்து கொண்டிருப்பது போலவும் அவளுக்குத் தோன்றும். அவன் இந்த வாழ்க்கையை வெறுத்தான்; இந்த வாழ்க்கையை மாற்றியமைத்துத்தான் ஆகவேண்டும் என்ற இடையறாத ஆசையை அமைதி நிறைந்த விருப்பத்தை அவனுள்ளத்தில் அந்த வெறுப்புணர்ச்சி வளர்த்து வந்தது போன்றும் அவளுக்குத் தோன்றும். அவனது முகம் மஞ்சள் பாரித்திருந்தது; கண்களைச் சுற்றியே அழகிய சிறு ரேகைகள் ஓடியிருந்தன. அவனது குரல் மென்மையாகவும் கரங்கள் எப்போதும் கதகதப்பாகவும் இருந்தன. அவன் எப்போதாவது பெலகேயாவுடன் கைகுலுக்க நேர்ந்தால், அவளது கரத்தைத் தனது கைவிரல்களால் அணைத்துப்பிடிப்பான்; அந்த மாதிரியான உபசாரத்தால் அவள் இதயத்தில் இதமும் அமைதியும் பெருகும்.

நகரிலிருந்து வேறு பலரும் இவர்கள் கூட்டத்தில் வந்து கலந்துகொண்டார்கள். அவர்களில் ஒல்லியாய் உயரமாய் வெளிறிய முகத்தில் பதிந்த அகன்ற கண்கள் கொண்ட ஒரு பெண்தான் அடிக்கடி வந்து கொண்டிருந்தாள். அவள் பெயர் சாஷா. அவளது நடையிலும், அசைவிலும் ஏதோ ஒரு ஆண்மைக் குணம் படிந்திருப்பதாகத் தோன்றியது. அவள் தனது அடர்த்தியான கறுத்த புருவங்களை ஒரு சேர நெரித்து சுழிப்பாள்; அவளது நேர்முகமான மூக்கின் சிறு நாசித் துவாரங்கள் அவள் பேசும்போது நடுநடுங்கிக்கொண்டிருக்கும்.

அவள்தான் முதன் முதலாகக் கூர்மையான குரலில் தெரிவித்தாள்:

"நாம் எல்லாம் சோஷலிஸ்டுகள்!"

தாய் இதைக் கேட்டபோது ஏற்பட்ட பயபீதியால் வாயடைத்துப் போய் அந்தப் பெண்ணையே வெறித்துப் பார்த்தாள். சோஷலிஸ்டுகள்தான் ஜார் அரசனைக் கொன்றதாக பெலகேயா கேள்விப்பட்டிருந்தாள். அது அவளது இளமைக்காலத்தில் நடந்த விஷயம். தங்களுடைய பண்ணை அடிமைகளை ஜார் அரசன் விடுவித்து விட்டான் என்ற கோபத்தால் நிலப்பிரபுகள் ஜார்மீது வஞ்சம் தீர்க்க உறுதி பூண்டதாகவும், ஜார் அரசனைக் கொன்று தலை முழுகினாலொழியத் தங்கள் தலை மயிரைச் சிரைப்பதில்லை என அவர்கள் சபதம் பூண்டதாகவும், அதனாலேயே அவர்களை சோஷலிஸ்டுகள் என்று அழைத்து வந்தார்கள். ஆனால் தன்னுடைய மகனான பாவெலும் அவனது நண்பர்களும் தங்களை ஏன் சோஷலிஸ்டுகள் என்று சொல்லிக்கொள்கிறார்கள் என்பதுதான் பெலகேயாவுக்குப் புரியவே இல்லை.

எல்லோரும் அவரவர் இருப்பிடத்துக்குப் பிரிந்து சென்ற பிறகு, அவள் பாவெலிடம் கேட்டாள்:

"பாஷா! நீ ஒரு சோஷலிஸ்டா?"

"ஆமாம்" என்று அவள் முன்னால் வழக்கம்போல் உறுதியாகவும், விறைப்பாகவும், நின்றவாறே பதில் சொன்னான் அவன். "எதற்காகக் கேட்கிறாய்?"

அவனது தாய் ஒரு பெருமூச்சு விட்டு விட்டு, கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

"உண்மையில் அப்படித்தானா, பாவெல்? ஆனால், அவர்கள் ஜாருக்கு எதிரிகளாச்சே! ஜார் வம்சத்து அரசர்களில் ஒருவரைக்கூட அவர்கள் கொன்று விட்டார்களே!"

பாவெல் அறையில் குறுக்கும் மறுக்கும் நடந்தான்; கன்னத்தைக் கையால் தடவிக் கொடுத்துக்கொண்டான்.

"நாங்கள் அந்த மாதிரிக் காரியங்களைச் செய்யத் தேவையில்லை" என்று இளஞ்சிரிப்புடன் பதில் சொன்னான் பாவெல்.

இதன் பின்னர் அவன் அவளோடு அமைதியும் அழுத்தமும் நிறைந்த குரலில் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தான்.

(தொடர்ந்து வரும்)

# கலியுக அவதாரங்கள்

சேத்தூர்எஸ்.பகீரதி



"அம்மா.... அம்மா.... என்ன நடந்தது? நான் வரும்போது கேள்விப்பட்டதெல்லாம் உண்மையாம்மா? ஏன் பேசாம இருக்கிறீங்க....? சொல்லுங்க." வந்ததும் வராததுமாக படபடத்தாள் உமா. உமாவின் தாய் துளசி ஒன்றும் பேசாது கனிவோடு உமாவை நிமிர்ந்து பார்த்தாள். "அவங்க வந்து என்னம்மா பேசினாங்க....? சொல்லுங்க...." என உமா மீண்டும் கேட்டாள். "இல்லம்மா நீ காலையில அவங்களுக்கு பேசினதை யாரோ அவங்ககிட்ட சொல்லியிருக்காங்க... அதனால அவங்க......" அம்மா இடையில் நிறுத்தினாள்.

உமாவின் உதடுகள் துடித்தன. "நா.... நான் அவங்களுக்கு ஒண்ணும் கண்ட மாதிரி தப்பாக பேசல்லையே அம்மா. எல்லாம் அப்பாவால வந்தது. அப்பா நல்லா இருந்தா இவங்க எல்லாம் ஏன் நம்மோட சண்டைக்கு வர்ராங்க?" உமா கேட்க உமாவின் தாய் ஒன்றும் பேசவில்லை. "ஏம்மா என்னைப் பத்தி மட்டுமில்ல உங்களைப் பத்தியும் ஏதேதோவெல்லாம் பேசினாங்களாமே இதையெல்லாம் பார்த்துக்கொண்டு எப்படீம்மா பேசாம இருக்கிறீங்க?" உமா கேட்க, "நெருப்புன்னா வாய் சுடுறதில்லை யேம்மா. எந்த நேரத்திலையும் ஆத்திரப் படக்கூடாது. பொறுமையா இருக்கணும். நீ எதையும் யோசிக்காம உன் வேலையைப் பாரும்மா." அன்பாகச் சொன்ன அம்மாவின் குரலுக்குக் கட்டுப்பட்ட உமா ஆடைகளை மாற்றி முகத்தை அலம்பி கடவுளை மனதால் ஐந்து நிமிடம் பிரார்த்தனை செய்துவிட்டு கட்டிலில் சரிந்தாள்.

உமாவின் தாய் துளசி. அப்பா அம்மாவுக்கு ஒரே மகள். நிறைந்த சொத்து; அழகானவளாகவும் தனது பெயருக்கேற்றவாறு தூய்மையானவளாகவும் துளசி இருந்தாள். துளசியைப் பல பேர் பெண் கேட்டுச் சென்றார்கள். ஆனால்...... அந்த நல்ல சம்பந்தங்களையெல்லாம் தள்ளி விட்டு விதி சேகர் என்ற கயவனின் மூலம் வந்தது.

சேகர் தாய்தந்தையருக்கு ஒரே மகன். அவர்களும் ஓரளவு வசதி படைத்தவர்கள். இளம் வயதிலேயே கெட்ட சகவாசங்களின் மூலம் மதுவுக்கு அடிமையானவன். சேகரின் தாயும் தந்தையும் துளசியின் வீட்டுக்கு ஒரு நாளைக்கு ஒன்பது தடவை சென்று தமது மகன் சேகருக்குத் துளசியைப் பெண் கேட்டனர். இவர்களது பேச்சில் மயங்கி துளசியை ஒரு வார்த்தையேனும் கேட்காமல் சேகருக்கு துளசியை திருமணம் செய்து வைத்தனர் துளசியின் பெற்றோர். துளசியின் நிலையோ 'குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்தது' போன்று பரிதாபமாகிவிட்டது.

சேகர் காரணமின்றியே துளசியை அடித்து, பேசி துன்புறுத்துவான். துளசி வாயில்லாப் பூச்சி. எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்வாள். ஆனால் சேகரோ இரண்டு பெரிய பெண் பிள்ளைகள் தனக்கு இருப்பதைக் கூட மறந்து தனது காணி பூமியை விற்றுப் பணத்தை மதுவுக்கும் மாதுவுக்கும் கரைத்துக் கொண்டிருக்கிறான். இவன் இப்படிக் குடித்துக்கொண்டு ஒவ்வொரு வீடாகச் சென்று துளசியைப் பற்றி பொய் பேசுவான். "நான் இப்படிக் குடிச்சுத் திரியுறதுக்கு காரணம் துளசிதான். அவ எனக்கு சாப்பாடு தாறதில்ல. அதனாலதான் குடிக்கிறேன்." என்று வாய் கூசாமல் பொய் சொல்லுவான். அந்த ஊரிலேயே துளசி பணக்காரி மட்டுமல்ல, அந்தஸ்திலும் கூடியவள். சேகருக்கு இரங்குவது போல் நடித்து குழாயடியில் துளசியைப் பற்றி அவ்வூர்ப் பெண்கள் கேவலமாகப் பேசுவார்கள்.

அவர்கள் ஒரு நாள் இப்படிப் பேச உமா பொறுமையின் எல்லையைக் கடந்தாள். தனது தாய்க்கு அவர்கள் பேசுவதை உமாவால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சத்தமாக தனது அம்மாவைப் பற்றிக் கதைத்தவர்களுக்கு கொஞ்சம் பேசினாள். நடந்தது இவ்வளவுதான். ஆனால் இதை யாரோ கண், காது, மூக்கு வைத்து அவ்வூர் குறிப்பிட்ட பெண்களிடம் சொல்லி விட்டார்கள். உடனே அவர்கள் துளசியுடன் சண்டைக்கு வந்து விட்டார்கள். உமா வீட்டில் இல்லை. துளசி ஒன்றுமே பேசவில்லை. ஏனெனில் துளசி அப்படிப் பேசிப் பழக்கப்பட்டவளுமல்ல.

உமாவைப் பற்றி மிக மிகக் கேவலமாகப் பேசினார்கள். உமா , கலைத்துறையில் ஈடுபாடுடையவள். உமாவின் ஆக்கங்களை பாராட்டி உமாவுக்கு தினமும் பாராட்டு மடல்கள் வந்து கொண்டிருக்கும். உமாவும் நேரம் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அந்த நேச நெஞ்சங்களுக்கு பதில் மடல் வரைந்து அனுப்புவாள்.

நாகரிகம் பரவியிருந்தும் நாகரிகமற்ற, படிப்பறிவில்லாத ஜனங்களுக்கு இந்த கடிதத் தொடர்பு தவறாகத் தெரிந்தது. தவறாக நடப்பவர்கள் மற்றவர்களையும் இதே கண்ணோட்டத்தில் நோக்குவார்கள். இந்தக் கடிதத் தொடர்பையும் தவறாகப் பேசியிருந்தார்கள் அவ்வூரிலுள்ள சில பெண்கள். உமாவின் மீது பொறாமை கொண்டிருந்த உமாவின் வயதை ஒத்த பெண்கள் மிகவும் சந்தோஷப்பட்டனர்.

இவ்வாறு நடந்ததையெல்லாம் உமா வரும் வழியில் தெரிந்து கொண்டாள். இவற்றையெல்லாம் கேட்டபோது உமாவின் இதயம் குமுறியது. உமாவுக்கு வயது வெறும் பதினேழுதான். அவளால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உமா தன்னைப் பற்றிக் கவலைப் படவில்லை. தனது அம்மாவுக்கு அவர்கள் பேசியதை நினைக்க ஆத்திரமாக வந்தது. தான் நான்கு இடங்களுக்குப் போய் வருபவள். ஆனால் அம்மா... நான்கு சுவருக்குள் இருப்பவள். தனது தாய் இதை எப்படித் தாங்கிக்கொள்வாள் என நினைத்ததும் உமாவை அறியாமல் அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது.

ஆத்திரத்தில் உமாவின் கண்கள் சிவந்தன. உதடுகள் துடித்தன. தனது உள்ளக் குமுறலை யாரிடம் சொல்வதென உமா தவித்தாள். நீதியற்ற-படிப்பறிவற்றவர்களிடம் நீதி நியாயம் பற்றிப் பேசி என்ன பயன்? ஆத்திரத்தை உமா தலையணைகள் மீது காட்டினாள். ஓங்கி இரு கைகளாலும் தலையணை மீது குத்தினாள். அவளால் வேறு என்ன செய்யமுடியும்? உமா தனது பேனா நட்பை முறித்தாள். உமாவுக்கு எல்லாமே வெறுத்துவிட்டன. எந்நேரம் பார்த்தாலும் எதையோ பறிகொடுத்தவள் போல சிந்தனை செய்துகொண்டு தனியாக இருப்பாள்.

இன்றைய கண்ணகிகளும் இராமர்களும் கலியுக அவதாரங்கள் என தங்கள் மீது லேபல்களை ஒட்டிக்கொண்டு தலை நிமிர்ந்து உலவும் போது துளசி-உமா போன்ற பெண்கள் அவர்களது கண்களுக்கு ரம்பைகளும், ஊர்வசிகளும் மேனகைகளும் தான்!

# ஒரு இரவின் அழகி

சிறுகதை

> “அழகு என்பது போதை மாத்திரை மாதிரி... சுயநினைவையும்- உணர்வுகளையும் சாகடிக்கிறது..!”

டிசம்பர் 31.
இரவு 8.15.
பேரிரைச்சலுடன் பெய்துகொண்டிருந்த
அந்த மழை கொஞ்சம்
அமைதியாக–
சீ...தூற்றல்கூட இல்லாமல் முக்காடு
போடுகிறது!
தற்செயலாக நானும்! கூட என்
நண்பர்களும்...
நண்பர்கள் என்பதைவிட டயரிகள்
என்பது கொஞ்சம் நாகரீகமானது!
அவர்கள்தான் நான், நான்தான்
அவர்கள்...
அவர்கள் ‘புஷ்’
சைக்கிள்களில்...இவனோ 90 ரக
‘ஹொண்டா’வில்....
அந்த வீதி–
எனக்கு நன்கு அறிமுகமாகி,
என்னோடு என்றும் வாழும் அதே
வீதியில்தான்....
எனக்குள் நான்தானா எனக்
கேட்கிறேன்...
பதில் மௌனமாய் என்னைப்
பார்த்து சிரிக்கிறது.
நீல நிற ‘பெத்திக்’ கஃப்டான்
உடலை ரவுண்டப் பண்ண–
‘சோலா’புரி பாதங்களைத்
தாங்கிக்கொள்ள–
அந்த கறுப்பு ‘சோல்ட்’
குரும்பையாய் பெருத்துள்ள
மார்புகளை மறைக்க அதே
‘சோளி’ன் தொங்கல்-தலையையும்
கொஞ்சம் ‘முக்காடாய்’ மறைக்க-
இவைகளல்ல....
இன்னும் ஆயிரம்...இந்தக் கவிஞனின்
மனசு அவதிப்படுகிறது! கொஞ்சம்
விரிவாக உவமிக்க உள்ளம்
தொட்டில்போட்டாலும் அவதி,
அவசரம் எழுதிவிடுகின்றது!
அவள் நடக்கிறாள்...
உலகில் எப்படி ரம்பாவும்,
ஊர்வசியும், மேனகையும் ஒரே
உருவெடுத்து...ரதி எப்படி
மதனில்லாமல் வீதிகளில்...
சாஜஹானை விட்டு மும்தாஜ் எப்படி
வந்தாள்...
முன்னால்போன என்னுடை
டயரிகளைக்கூட
தொலைத்துவிட்டேன்!
‘ஹொண்டா’வை அவசரப்பட்டு
நிறுத்துகிறேன்...சீ... அது நிற்கிறது!
என் சைக்கிளின்
‘ஹெட்’லைட்டில்-அவள்முகம்...
‘கோல்பேஸ்’ திடலின், மேதின
மேடையின் தென்னிந்திய நாட்டிய
நடிகையின் மேக்கப் முகமாகத்
தெரிந்தது!
அது ஒப்பனை முகம்... இது
கற்பனைமுகமா?
இல்லை நிஜமுகம்!
சீ...நிலவுமுகம்!! எவ்வளவு பெரிய
பொய்.. நிலவென்ன அவ்வளவு
எழிலா?
இவளிடம் இறங்கிவந்து யாசகம்
கேட்டாலும் நம்பத்தான் வேண்டும்...
வானம் இருட்டியிருக்கவில்லை!
இவளின் முகத்தில் விழிக்க முடியாமல்
வெண்ணிலவு ஒழித்துக்கொண்டது....
மனிதன் அழகை வருணிப்பது
சாதாரணம்... அவன் மனிதன்தானே!
ஒரு கவிஞன் கன்றைக்கூட மரம்
என்பவன்...
அதிலும் அட்டகாசமான
அழகாயிருந்தால்–
டயரிகளைத் தொலைத்து,.... நானும்
தொலைந்து... நினைவுகள்..உணர்வுகள்...
சிந்தனைகள்.. இதயத்துடிப்புகள்....
பார்வைகள்....இயற்கையான,
பாவனைகள்... எல்லாமே எனக்குள்
மௌனித்தன...
நான் மௌனத்தின் ஏலத்தில் அந்த
நிமிடமே விற்கப்பட்டேனா?
என்னிடம் அனுமதி பெறாமலேயே
எனது ‘ஹொண்டா’ அவளின்
பின்னால் மாறுகிறது...
புதிய வீதியால் அவள்..நானும்...சீ...என்
மனசும் அவளின் பின்னால்...
‘புல்லும் வலிக்கிற பாதம் நடக்கவே
பூவாலே பாலம் கட்டவா?’
வைரமுத்து எழுந்து வந்து என்னிடம்
சொன்னான்.....
நான் சொன்னேன்–
“மண்ணே! இந்தப் பாதங்களை
தொட்டுப் பார்க்கிறாயே– நீ இந்த
நூற்றாண்டின் மாபெரிய
புண்ணியசாலி...உனக்குமேல்
உட்கார்ந்திருக்கும் கற்களை, முட்களை
விலக்கு...பூக்களால் செய்த புது
உருவமொன்று நடந்து வருகிறது...”
வைரமுத்துக்கூட சிந்தித்தார்! நான்
அந்தப் பெரிய கவிஞனை ஏளனமாய்
எள்ளி நகைத்தேன்!
இவர் விழிகளெல்லாம் இப்படியொரு
பெண்ணை எங்கே இரசித்திருக்கும்?
தென்னகத்திலல்ல-முழு
மண்ணகத்திலுமே...
இவள் மட்டும்தான்...இவள்
மட்டுமேதான்!
மூன்றாவது வீதியால் மாறுகிறாள்-கூட
அவளது சகோதரி, மற்றது
அனுபவித்து, அலுத்த ஒரு கிழடு...
என்மேல் ஒட்டியிருக்கும் ‘கவிஞன்’
எனும் கர்வம்..
சமூகம் எனைநோக்கும் ‘பண்பாளன்’
எனும் பட்டம்...
என்னை ‘அறிவாளியாய்
இரசிக்கும்-மானுடங்களின் பார்வை...
அந்தஸ்து, கௌரவம்...பெரிய மனித
தனம்...
எல்லாமே அவள் அழகின் முன்
தோப்புக்கரணம் போட்டன!
நானும் அலுத்துவிடவில்லை... பின்னால்
ஹொண்டா ‘ஃபெஸ்ட்’கியரில்...
திடீரென திரும்பிப் பார்த்தாள்..நான்
கொஞ்சம் தரமுயர்த்தப்பட்டேன்.
‘ஹெட்லைட்’ வெளிச்சத்தில் அவள்
மெல்லச் சிரித்தாள்...என் நெற்றியின்
தொங்கலில் நிறைய சுருக்கம்!
ஆச்சர்யத்தால் என் இருதயத்தின்
கதவுகள் மூடின...
எனது விலாசத்தை அவள்
விளங்கிக்கொண்டாளோ!
எனது திறமை..எனது கவிதை... எனது
பேச்சு. எனது கெட்டித்தனம்... அவள்
முன்பே அறிந்திருக்கிறாளோ!
மனசு முன்னரைவிட கொஞ்சம்
அதிகமாக ஆனந்தமும், அதே நேரம்
அவசரமும் பட்டது–
நடக்கிறாள்...
படைக்காவலர்கள்போல்
இரண்டுதோள்களுக்குமாக மேற்
சொன்ன இருவரும்
சீ...இவள் நடக்கிறாளே–
இவளுக்கு பல்லக்கு...சீ–
வாகனம்...இல்லை பூமேடை!
எனது தோள்களில்தான் அவள்
தூங்கவேண்டும்... அப்போதுகூட என்
மனசு நிம்மதியை சுமக்காது–
என்ன பெண்கள்...பக்கத்தில்
போவோரைப் பார்த்து என்னிதயம்
ஏசுகிறது!
சீ..... இவளை அவர்கள்
தூக்கிக்கொண்டு போகலாமே!
பாவம்! என்னைக்கூட தூக்கச்
சொன்னால்..உலகில் நான் பிறந்து
இருபத்தைந்து வருடமாய் செய்த
புண்ணியங்களுக்கெல்லாம்
அதுவொன்றே கூலி என்பேன்...
இப்போது நான்காவது வீதி-
முன்னையதைவிட கொஞ்சம் சிறியது...
அதே நடை–
இன்னொரு குறுக்கு வீதியால் வந்து
முன்பக்கமாக எனது ஹொண்டா....
அதே ‘ஹெட்லைட்’... அதே மேக்கப்
இல்லாத முகத்தில் பட... 8.15 விட
இன்னும் அழகேறிப்போய்! சாதாரண
முகத்தில் கொஞ்சம் நாணமும் கலந்து..
நான் எங்கிருக்கிறேன்...நான்யார்..ஏன்
வாழ்கிறேன்.. என்னிடமே என்
மனசாட்சி-திரும்பத்திரும்ப..
நூறுமுறை...இல்லை ஆயிரம்
முறை...சும்மா போங்கள் கோடிமுறை
கேட்கிறது... ஆயிரம் அழகு
தேவதைகளை கவிதைக்குள் அடக்கிய
இந்த மனசு...
அது தேவதைகளைத்
தானே..!
இவள்? உலகின் புத்தி
ஜீவிகளை அழைத்து
‘புதியபெயர்’
தேடவேண்டும்...ஒரு
வீட்டுள் நுழைகிறாள்–
அதுதான் அவள்
வீடு-எப்படித்
தெரியும்?
ஒரு ஊகம்...
அது ‘கிளினிக்லேன்’...
பார்க்கிறேன்...இல்லை
தனியாக நின்று
பார்க்கிறேன்...
அவள் பிஞ்சு
விரல்களால் ‘கோலிங்
மணியை’
அமுக்குகிறாள்.. என்
நெஞ்சு படபடத்தது....



ரி.எல்.ஜவ்பர்கான்–காத்தான்குடி

பாவம் அவள் விரல்கள்...! என்ன
பெண்கள் இவர்கள்? முறுக்கேறிப்போன
விரல்களால் கொஞ்சம் அமுக்கி
விடலாம்தானே...? அந்தப் பிஞ்சு
விரல்கள் அமத்துகின்றபோது
‘சுழிக்கிக்’கொண்டால்... அந்தப்
பெண்களை கொல்லவேண்டும்போல்
என்மனசு கத்துகிறது!
கடைசியாக என்னைப் பார்க்கிறாள்...
ஒரு சின்ன சிரிப்பு! கதவுகள்
மூடிக்கொண்டன...
என்னை விட்டுவிட்டு..... என்னுடை .
மனசை..... பிழை.... உயிரை–
உணர்வுகளை எல்லாவற்றையுமே
திருடிக்கொண்டுபோன அழகுக்
கள்ளியே...
ஏன் என்னை ஜடமாக்கினாய்..?
கிட்டத்தட்ட எழுபத்தி ரெண்டு
மணித்தியாலங்கள்..நாலாயிரத்து
முன்னூறு நிமிடங்கள்...
தேடுகிறேன்– என் ஹொண்டாவின்
இரண்டு டயர்களும் தேய்ந்து
போயின... நீ எங்கே போனாய்....?
இப்போதெல்லாம் எனது தொழில்...
படிப்பு...கவிதை எல்லாமே உன்
நினைவுகள்தான்...
உன்னால் நான் சவர்க்காரமாகிப்
போனேன்.
உன்னைத் தேடித்தேடி
அலுத்துப்போன என்
விழிகள்...காலகள்.... டயர்கள்...
ஓ...அழகே–!
எமது ‘தினமுரசில்’ எனது
இதயத்தின் ஏக்கங்கள்...எண்ணங்கள்...
எழுது– எனக்கொரு கடிதம் எழுது.
“என்னைக் காதலிக்காவிட்டாலும்
பரவாயில்லை! இன்னொருவனை
காதலிக்கவில்லை என்றாவது எழுது”
(மேத்தா)
முகவரி-எனது எண்ணத்தின்
தலைப்புக்குக் கீழே....
ஊர்...பெயர்....விலாசமா? வேண்டாம்!
அது இரண்டுமே என்னை
அடையாளப்படுத்தும்-தபால்காரனுக்கு
நான் கொஞ்சம் சீ...அதிகம்
பிரபல்யமானவன்...உன் அழகுக்கு
முன்னால் ஒன்றுமே அறியாதவன்...
நான் தலைப்பிலே ‘அது’ என்றதன்
அர்த்தம் புரிகிறதா?
அது=காதல்...
எழுது... எழுதுவாயா... எனக்கு வயது
25. நான் பார்த்த முதல் அழகியும்,
முடிவான அழகியும் நீதான்...
எழுது... நீ இருக்குமிடம், பெயர்,
தொழில்...சுருக்கினால் நீ யார்?
அப்போதுதான்–
எனக்குப் பசிக்கும்...
விழிகள் தூக்கத்தைத் தொடும்... ●

---

# அவ(ள்)ன் ஏற்றுக்கொள்வா(ளா)னா?

என் மனதில் அவளுக்கு நிரந்தரமாக இடங்கொடுத்திருந்தேன். ஆனால் என் எண்ணத்தை அவளிடம் வெளிப்படுத்துவதில்தான் தயக்கமிருந்தது. நான் காணும் காட்சிகளிலெல்லாம் அவள் முகமே தெரிந்தது.

அலுவலகம் செல்லும் வேளைகளில் கூட என் ஆசைக்குரியவளிடம் ஒரே பஸ்ஸில்தான் பயணம் செய்வேன். இடைக்கிடை கண்கள் பேசிக்கொண்டாலும், வார்த்தைகள் மட்டும் வெளிவரவேயில்லை. எனக்கு நன்றாகவே தெரியும். அவளும் என்னை காதலிக்கிறாள் என்று. ஆனால் அதை வெளிப்படுத்த அவளும் தயங்குகிறாள்.

காலம் உருண்டோட என் வீட்டில் எனக்கு பெண் பார்த்தார்கள். அதனால் முடிவு செய்துகொண்டேன். இதற்கு மேலும் தயங்கினால் என் ஆசைக்குரியவள் எனக்கு கிடைக்காமல் போய்விடுவாள். அவள் இல்லாமல் எனக்கு வாழ்வேது? என் இதயம் முழுதும் அவளாகவே இருக்கிறதே!

மாலை அலுவலக வேலை முடிந்து பஸ் ‘ஸ்டாண்டில்’ நின்றவளை பார்த்து புன்னகைத்தேன். பதிலுக்கு அவளும்...!

“உங்களோடு நான் தனியாக பேச வேண்டும்.” கூறிவிட்டு பதிலுக்குக் கூட காத்திராமல் நடந்தேன். தொடர்ந்து வந்தாள் அவள். அவள் பெயரை மட்டும் எப்படியோ நண்பர்கள்மூலம் அறிந்து வைத்திருந்தேன்.

“மயூரி உங்களோடு நெடு நாட்களாக பேசவேண்டுமென்று நினைத்தேன். இன்று தான் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் உங்களை விரும்புகிறேன். கல்யாணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன்” அவள் முகத்தில் எந்தவித மாற்றமும் தெரியவில்லை.

“நீங்க இல்லாவிட்டால் என்னால வாழ முடியாது” உண்மையைத்தான் சொன்னேன். மென்மையாகப் பேசினாள்.

“நா..ன், நான் உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. ஏற்கனவே நான் சொல்ல நினைத்தேன். என்னை ஏற்றுக்கொள்ள மாட்டீர்களென்று தான் தயங்கினேன்.” நிச்சயமாக இதயத்துக்குள் குதூகலித்தாள்.

“உங்களை ஏன் வேண்டாமென்று நான் சொல்வேன். நீங்கள் எனக்கு கிடைத்தால் அதுவே போதும்” பரிவோடு சொன்னேன்.

“நான் மட்டுமா?” ஏக்கத்துடன் அவள்

“ஆமாம்! ஏன்?” குழப்பத்துடன் நான்.

அவள் முகம் பட்டென நிறையவே மாறியிருந்தது.

எப்.லெனாட்குமார்

“எனக்கு ஏற்கனவே குழந்தையிருப்பது உங்களுக்கு தெரியாதா?” கேள்விக் குறியோடு நோக்கினாள்.

எனக்குள் ‘ஷாக்’ உடலெங்கும் ஆயிரமாயிரம் ‘வேல்டேஜ்’ மின்சாரத்தை வாங்கிக்கொண்டே பயங்கரமான ஓர் உணர்வு. என் தலை லேசாக வலித்தது. மனம் நொடியில் குழம்பிப்போனது.

“நீ...நீங்க ஏற்கனவே கல்யாணம் முடிச்சவங்களா?” நா தடுமாறியது.

“இதெல்லாம் உங்களுக்கு தெரிஞ்சுது தான் நீங்க என்ன கல்யாணம் முடிக்க சம்மதிச்சதா நினைத்தேன். நான் ஏற்கனவே கல்யாணம் செய்து எனக்கொரு குழந்தையிருக்கு. விபத்துல என் கணவர் இறந்திட்டார். தனிமையில ஒரு பொண்ணு விதவையா வாழ முடியாததாலதான் நான் உங்களுக்கு சம்மதித்தேன்” லேசாக அவள் கண்ணில் கண்ணீர் அரும்பியது.

என் கற்பனையிலும், நினைவிலும் யாரை தேவதையென எண்ணி மகிழ்ந்து வாழ்ந்தேனோ அவள் இன்னொருத்தரின் மனைவி...அதுவும் குழந்தையுடன்..! கேவலம் இவளையா காதலிக்க நினைத்தேன்? கல்யாணம் முடிக்க நினைத்தேன்? ஏன் நாட்டில் வேறு பெண்களே இல்லையா?

“என்ன மன்னிச்சிடுங்க!” கூறிவிட்டு என் வழியே நடந்தேன். அவளோ கலங்கிய விழிகளுடன் என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த நொடியிலிருந்து என் ஆசைகளை யெல்லாம் மூட்டைகட்டி வைத்துவிட்டு புதிய அத்தியாயமொன்றை தொடங்க வேண்டுமென முடிவு செய்துகொண்டேன்.

காலம் உருண்டோடியது. பழைய நினைவுகளெல்லாம் முழுமையாக மனதை விட்டு அகன்றிருந்தது.

அன்று!

என் பெயருக்கு ஓர் கல்யாண பத்திரிகை: பிரித்தேன். உள்ளே கடிதமுமிருந்தது. யாருடைய..? படித்தேன். ‘செல்வி மயூரிக்கும் ராஜகுமாருக்கும்’ என்று எழுதப்பட்டிருந்தது. கடிதத்தைப் படித்தேன்.

அன்புடன் வரைவது, என்னை நீங்கள் ஒருவேளை மறந்திருக்கலாம். ஒருவேளை இக்கடிதம் உங்களுக்கு அதிர்ச்சியைத் தரலாம். நான் ஏற்கனவே மணமுடித்தவள் அல்ல. உங்கள் சுயரூபத்தை அறியவே அவ்வாறு சொன்னேன். உங்கள் சுயநலப் புத்தி எனக்கு தெளிவாகப் புரிந்துவிட்டது. நண்பரே! ஒரு மனிதன் இன்னொருத்தருக்கு புத்தி சொல்லிவிட்டால் அவர் அறிஞர் ஆகிவிட முடியாது. அதன்படி நடந்து காட்டுபவன்தான் உண்மையான அறிஞன்.

நான் உங்கள் மேல் ஆசைப்பட்டது உண்மைதான், ஆனால் நீங்கள் புறக்கணித்த அன்றே நான் அதை மாற்றிக்கொண்டேன். உண்மையில் நான் விதவையாக இருந்தால் என் நிலை என்னவாகியிருக்கும்? அதனால் தான் மனைவியை இழந்த ஓர் உத்தமனுக்கு தாரமாக போகிறேன்.

உங்களால்தான் மனிதர்கள் எவ்வளவு சுயநலகாரர்கள் என்பதை அறிந்தேன். நன்றி.

கடிதத்தைப் படித்து முடித்த எனக்கு தலை சுற்ற ஆரம்பித்தது. ●





www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

இலக்கிய நயம்



# அவள் போட்ட தடை!

வழக்கமான அலங்காரம் இல்லை. இதழ்களில் நிலைத்திருக்கும் புன்னகையைக் காணவில்லை.

தலைவியின் தோற்றம் கண்டு தலைவன் மனம் குறுகுறுத்தது.

குற்றமுள்ள மனம்தானே குறுகுறுக்கும். குற்றம்தான்! தலைவன் செய்தது குற்றம்தான்!

□□

பொற்காசுகளின் பெறுமதிக்கு ஏற்ப புன்னகைக்கும் மதிக்கு சொந்தக்காரி சொர்ணா ராணி.

அவள் ஒரு விலைமகள்! விலைமகளிலும் இரு ரகத்தினர் இருக்கிறார்கள்.

வாழ வேறு வழியில்லாமல் போகும் போது தன் சுற்றம் காக்க சித்தம் வருந்தியபடியே உடலை விலையாக்கி வாழ்பவர்கள்.

இவர்கள் விளக்குத்திரி போன்றவர்கள். ஒளி கொடுப்பதற்காகத் தம்மை எரித்துக்கொள்ளும் பெண்கள்.

இன்னொரு பிரிவினர் இருக்கிறார்கள். பகட்டான வாழ்க்கைக்காக பணம் படைத்தவர்களை படுக்கைக்கு அழைப்பவர்கள்.

அவர்கள் உடலைத் திறப்பது உல்லாச புரியின் கதவைத் திறப்பதற்காக.

சொர்ணா ராணி இரண்டாவது ரகத்தினள்.

அவள் ஆண்களை சேகரிப்பாள்! பொழுதைப் போக்கவல்ல; பொற்காசுகளை திரட்டிக்கொள்ள!

அவள் புன்னகைப்பது சந்தோசத்தின் வெளிப்பாடல்ல; சாகசத்தின் பிரதிபலிப்பு!

வேண்டுமென்றே உடலை நெளித்து, அசையும் அங்கங்களை அதிகமாகவே அசையவைத்து அவள் நடப்பது வணிகர்கள் தம் பொருட்களை கூவி விற்பது போன்ற ஒரு உத்தி.

அந்த சொர்ணா ராணியிடம்தான் சொர்கத்திற்குச் செல்லும் வழியை விசாரித்துக்கொண்டிருந்தான் தலைவன்.

செய்தியறிந்த தலைவி துடித்துப் போனாள்.

"என்ன குறை வைத்தேன் அவருக்கு? சந்தனப் பொய்கை நான் இங்கிருக்க சாக்கடையில் புரளும் புத்தி ஏன் வந்தது?"

தனக்குள்ளாகவே வினாக்கள் எழுப்பித் தவித்தாள்.

"கனியிதழ் என்று நாவால் வருடி பற்குறி மெல்ல பதித்து கண்கள் மூடி ரசிப்பாரே; கசந்துவிட்டதோ இப்போது? நெருங்கிய செவ்விளநீர் குலை என்று என் நெஞ்சத்தில் முகம் சாய்த்துக் கிடப்பாரே; இப்போது விட்டுப்போய்விட்டதோ பிடிப்பு?"

என்றெல்லாம் மனதுக்குள் சொல்லி புலம்பினாள் தலைவி.

விழிகளில் அருவி! கனத்தது நெஞ்சம்! சிந்தையில் எரிந்தது கோப நெருப்பு!

தட்டப்பட்டது வீட்டின் தோட்டக் கதவு!

"அவர்தான்.... அவர்தான்!"

அறிந்தது நெஞ்சு.



"நள்ளிரவு நேரம். விளக்காக நிலவிருக்க அந்த வெளிச்சத்தில் அவள் சொல்லிக் கொடுத்த கலைபயின்று களைத்துப்போய் வந்தாராக்கும்."

நினைத்தபோது நெஞ்சு வலித்தது. வெளியே நின்றிருந்த தலைவன் மீண்டும் இருதடவை தட்டினான் கதவை!

வழக்கம் போல் துள்ளியோடாது மெல்ல மிக மெல்ல நடந்து சென்று திறந்தாள் கதவை. விலகி நின்றாள்; அவன் உள்ளே வர, கோபத்தை வெளிப்படுத்தும் குறியாக அறைந்து மூடினாள் கதவை.

கடைக்கண்ணால் பார்த்தான் தலைவன். 'தெரிந்துவிட்டதாக்கும் செய்தி' என்று நினைத்துத்தான் குறுகுறுத்தது அவன் மனம்!

□□

"நேரமாகிவிட்டது என்றுதானே கோபம்?"

செய்தியறிந்திருப்பாளோ என்று அவள் மனதை உளவறியும் கேள்வி அது.

பதில் இல்லை திரும்பி முறைத்தாள்.

அருகில் சென்றான். தோள் தொட கரம் உயர்த்தினான்.

"தொடவேண்டாம்!"

உரத்த குரலில் உச்சிச் சூரியனின் வெப்பம்!

அவளைத் தொட்டணைத்து தேக எழில்கள் மீது கரம் தாவிச்செல்லும்போது.

'தொட வேண்டாம் அங்கே......

தொடவேண்டாம்...."

என்று அவள் சொன்ன துண்டு.

அது வெறும் நடிப்பென்று தெரிந்து அவனும் அலட்சியம் செய்ததுண்டு.

'வேண்டாம்' என்று சொல்லும் விதத்தில் 'வேண்டும்' என்ற மறைமுகக் குறிப்பிருக்கும்.

இன்சொல் மட்டுமல்ல எதிர்ச்சொல்லும் அறிந்திருந்தால்தான் பள்ளியறை ராச்சியத்தில் ஆளலாம். ஆளவும் படலாம்.

அது தெரியும் அவனுக்கும்.

ஆனால் இப்போது அவள் சொன்னது நிஜச் சொல்! கட்டளைச் சொல்!

கலங்கித்தான் போனான் அவன்!

"காரணம் சொல்லாமல் கோபப்படுகிறாய் நீ."

"சொல்லித்தான் தெரியவேண்டுமோ?"

"எனக்கு சோதிடம் தெரியாது!"

"சோதிடம் தானே தெரியாது. வேறு இடம் தெரியுமல்லவா?"

"என்ன பேசுகிறாய் நீ?"

"என் மொழி எப்படிப் புரியும். எவள் மொழியோ கேட்டு அதனைத் தேன்மொழியென்று மயங்கிக்கிடப்பவருக்கு என் மொழி புரியாத மொழியாகத்தான் இருக்கும்."

தலை குனிந்தான். கையும் களவுமாக மாட்டிக்கொண்ட திருடன் போல முழித்தான். ஒப்புக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

"மன்னித்துக்கொள்."

என்றான். அவள் வெறுப்பாய் புன்னகைத்தாள்.

"இது பொருந்துமோ எனக்கும்?"

"எது?"

"சபலத்தில் தடுக்கி வீழ்ந்து வேறு உடலில் புரண்டுவிட்டு சுலபமாக நானும் சொல்ல முடியுமோ நீங்கள் சொன்ன வார்த்தையை?"

அவன் திகைத்தான். நெற்றியில் இடிபட்டது போலத் தடுமாறினான்.

"வரம்பு மீறிப் பேசுகிறாய்."

இயலாமை கோபமாக வெளிப்பட்டது.

"நுனிக்கரும்பாக நினைத்து என்னை தூக்கிவீசிவிட்டு, நடுக்கரும்பாக எவளையோ நினைத்து தலையிலே தூக்கிவைத்து நீர் கொண்டாடுவது மட்டும் வரம்புக்குள் செய்யும் குறும்போ?"

தப்பிக்கொள்ள முடியாத தாக்குதல்! அவன் தற்காப்புத் தேடினான்.

"கோவலனை கண்ணகி மன்னிக்கவில்லையா?"

"அகலிகை தவறு செய்தால் கல்லாக்குவீர்கள். கோவலன் தவறு செய்தால் காப்பிய நாயகன் ஆக்குவீர்கள்! மேய்ச்சல் நிலமாக உங்களுக்குப் பெண்கள்! மேய்வதற்கு வசதியாக உங்களுக்கு உகந்த உதாரணங்கள்!"

"கோபம் உன் கண்களை மறைக்கிறது."

"காமம் உமது கண்களில் இருந்து என்னையே மறைத்துவிட்டதே!"

அவன் மௌனமானான். சற்று நிதானித்தான்.

"இனிமேல் இப்படி ஒரு தவறு நிகழாது."

அருகே சென்று மேலும் சொன்னான்:

"உன் அருமை தெரியாமல் சேற்றில் சுகம்காணும் எருமையைப் போல் ஆகிவிட்டேன். தவறுதான்! இனிச் செய்யேன்! ஏற்றுக்கொள்! மாசில்லை என் மனதில்!"

"மாசுண்டு உம் மார்பில். சாக்கடைக்கு ஒப்பான சாகசக்காரியை தழுவி மயங்கி அசுத்தமானது உமது மார்பு. சிகப்பு கொள்ளுக்கும், கறுப்புக் கொள்ளுக்கும் பேதம் புரியாத அப்பாவியான கிராமத்தால் ஒரே விலை கொடுத்து இரண்டையும் பெற்றானாம் புத்தியற்று! அதுபோல நீரும் தறிகெட்டு, தரமும் கெட்டு தவறிப்போனீர்."

"பலாவை வெட்டினால்தானே சுளையின் ருசி தெரிகிறது. உன் புத்தி ஒரு கத்தியாகி வாழ்வின் சுவை எதிலே என்று காட்டிவிட்டதடி."

என்றான். நெருங்கி அவளை அணைக்க முயன்றான்.

"தீண்டாதீர். நீராடி கறை தொலைத்து வாரும்."

என்றாள்.

இதனைத்தான் நாலடியார் என்னும் கடைச்சங்க தமிழ் நூலில் ஒரு பாடல் சொல்கிறது அழகாக!

**கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப்பதக்கு என்று**
**ஒடுங்கொப்பக் கொண்டானாம் ஊரன் ஒருங்கொவ்வா**
**நல்நுதலார்த் தோய்ந்த வரை மார்பன் நீராடாது**
**என்னையும் தோய வரும்."**

அதிகாரம்-39, பாடல் - 387

தருவது ரசிகன்

## குறுக்கெழுத்துப் போட்டி இல-85

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | 4 |
| 5 | | | ■ | 6 | | |
| | ■ | 7 | | | ■ | |
| ■ | 8 | | ■ | ■ | 9 | |
| 10 | | | 11 | ■ | | |
| | | ■ | | ■ | | ■ |
| | ■ | 12 | | | | |

### இடமிருந்து வலம்

1. இது உருண்டை என்று முதலில் சொன்னவருக்கு உதைதான் கிடைத்தது.
3. யுத்தத்தில் சமரசம் செய்ய இது பயன்படும்.
5. தேர் நகர இதுவும் உதவும்.
6. முறைப்பாடுகளைத் தெரிவித்தல் என்றும் அர்த்தப்படுத்தலாம்.
7. சிலர் ஒரு விடயத்தை கூறுவதற்கு முன் இதனோடுதான் ஆரம்பிப்பார்கள்.
10. இவரும் ஒரு நோய்காவி.
12. மிதவாதியின் தோல்வி இவரை உற்சாகப்படுத்தும்.

### மேலிருந்து கீழ்

1. மகிழ்ச்சி என்பதை இப்படியும் அழைக்கலாம்.
2. ஆளுமைக்குரிய அடையாளங்களில் இதுவும் ஒன்று எனலாம்.
4. இவரும் ஒரு முனிவர்தான்.
8. இதுவும் உணவாகும்.
9. மாம்பழத்தில் ஒரு ரகம்.
10. இதன் வாயே இதற்கு எதிரியாகி விடுவதுண்டு.
11. முதுகில் தட்டிக் கொடுத்தால் பாய்ந்து செல்லும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 28.01.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-85
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-83ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 அ | த் | தி | 2 வா | ர | ம் | ■ |
| ட | ■ | 3 பா | க் | கு | ■ | 4 ஏ |
| 5 கு | 6 ர | ங் | கு | ■ | 7 அ | ணி |
| ■ | க | ■ | 8 மூ | ச் | சு | ■ |
| 9 கா | ளை | ■ | ல | ■ | த் | ■ |
| ப் | ■ | 10 ச | ம் | ம | த | ம் |
| 11 பு | த் | தி | ■ | 12 தி | ம் | பு |

குறுக்கெழுத்துப் போட்டி இல.83இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. எஸ்.பிரதீபன் மத்துகம.
2. ஆர். சாந்தமலர் பதுளை.
3. எம். அஸ்ாம் பஸ்யால.
4. எஸ். வசந்தராஜா நாவலப்பிட்டி.
5. செல்வி. வை.சுகிர்தா வாழைச்சேனை.
6. எம். தயாசீலன் நீர்கொழும்பு.
7. எவ். றினோஸா தெல்தெனியா.
8. எம். பௌஸர் வத்தேகம.
9. பி. கலாதேவி பூண்டுலோயா.
10. திருமதி. ஜெஸிமா நஸார் வவுனியா.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

ஸ்போர்ட்ஸ்

# விளையாட்டால் சேரும் பணம்!

## சர்ச்சைக்குரிய பெண் வீராங்கனை!

ஸ்டெபி கிராப், மோனிகா செலஸ் வரிசையில், பரபரப்பாகப் பேசப்பட்ட அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை 'இளம்புயல்' ஜெனிபர் கப்ரியாட்டியை ஞாபகம் இருக்கிறதா?



கிட்டத்தட்ட ஓராண்டிற்கும் மேலாக டென்னிஸ் பக்கமே தலை காட்டாமல் ஒதுங்கியிருந்தார். இப்போது இவர் மீண்டும் விளையாடத் தொடங்கிவிட்டார்.

கடந்த நவம்பர் மாதம் பிலடெல்பியாவில் நடந்த வெர்ஜீனியா ஸ்லிம்ஸ் போட்டியில் உற்சாகமாகக் கலந்து விளையாடினார். இருப்பினும் இந்தப் போட்டியில் முதல் சுற்றிலேயே ஆட்டமிழந்து வெளியேறினார். "இனி நான் தொடர்ந்தும் விளையாடுவேன்." என்று கூறியுள்ளார் கப்ரியாட்டி.

டென்னிஸ் வரலாற்றிலேயே கிராண்ட் ஸ்லாம் போட்டியின் (பிரெஞ்சு ஓபன்) அரையிறுதியில் மிகக் குறைந்த வயதில் (14 வயது) விளையாடிய வீராங்கனை கப்ரியாட்டிதான். அதைப்போன்று விம்பிள்டனில் மிகக் குறைந்த வயதில் ஆடி வெற்றி கண்ட வீராங்கனையும் இவர்தான். பார்சிலோனாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்றுள்ளார்.

14 வயதிலேயே தொழில் முறை ஆட்டக்காரராக மாறி இரண்டே வருடங்களில் லட்சம் லட்சமாகச் சம்பாதித்தார். 1993ம் ஆண்டு யு.எஸ்.ஓபன் போட்டியில் முதல் சுற்றில் தோல்வியடைந்தார். அதே வருடம் நகைக் கடையொன்றில் விலையுயர்ந்த ஆபரணம் ஒன்றைத் திருடிவிட்டார் என்றும் கப்ரியாட்டி மீது புகார் வந்தது.

கடந்த வருடம் மே மாதம் போதை மருந்து வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கைதுசெய்யப்பட்டார். அவரும் போதை மருந்துக்கு அடிமையாகியிருந்ததாகக் கூறப்பட்டது. அதற்காகச் சிகிச்சையும் பெற்றார்.

இப்படிப் பல பிரச்சனைகளிலிருந்து ஒரு வழியாக விடுபட்டு மீண்டும் விளையாட வந்திருக்கிறார். இளம்புயல் கப்ரியாட்டிக்கு இந்த வருடம் எப்படி இருக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# பிரதமராவாரா இம்ரான்கான்?

பிரபல கிரிக்கெட் வீரரும், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி முன்னாள் தலைவருமான இம்ரான்கான் அரசியலில் குதிக்கப் போகிறார். அவர் ஆட்சியை பிடிக்கும் வாய்ப்பு உள்ளது. இவ்வாறு பாகிஸ்தான் அரசியல் நிபுணர்கள் கூறியுள்ளனர்.



கடந்த மாதம் பாகிஸ்தானில் இம்ரான்கான் நடத்திய பேரணி ஒன்று அவர் அரசியலில் குதிப்பார் என்ற ஊகங்களை பரவலாக்கியுள்ளது.

பாகிஸ்தான் உளவுத்துறை முன்னாள் அதிகாரி அமீதுகுல் என்பவரோடு இம்ரான்கான் தொடர்புவைத்துள்ளார்.

சமீபகாலமாக மேற்கத்திய நாகரிக ஈடுபாட்டை குறைத்துவருகிறார். மேற்கத்திய அழகிகள் பலரோடு இணைத்துப் பேசப்பட்ட இம்ரான்கான் முஸ்லீம் பெண்ணையே திருமணம் செய்வேன் என்று கூறிவருகிறார்.

இவையெல்லாம் அவர் அரசியலில் குதிக்கும் ஆயத்தங்கள் என்று கூறப்படுகிறது.

43 வயதான இம்ரான்கான் அரசியல் ஸ்திரமின்மையால் அவதிப்படும் பாகிஸ்தான் அரசியல் அரங்கில் செல்வாக்கு பெறமுடியும். பிரதமராக வரமுடியும் என்று பாகிஸ்தான் அரசியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 64

**இவ்வாரம் (22.01.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

**காலத்தின் குரல்:** குமுறிப் புகையும் எரிமலையும் கொதிக்கும் குழம்பினை திசைதோறும் சிதறி வீசும் நிலையினிலே தேசம் இருப்பதைப் பார்க்கின்றோம். அமைதித் தாயின் அருள் நாடி சாந்தி வேண்டித் தொழுதவளின் தாளினைப் பற்றிப் பணிந்திடுவோம்.

அமைதி காக்க, அறம்காக்க அஸ்தினா புரம்தனை நாடி ஆதி வேதநாயகனாம் ஆயர்பாடிக் கண்ணனவன் தூதுவனாக ஏகுவதை திரௌபதி காண விளைகின்றாள்: சதுரங்க ஆட்டச் சபைதனிலே சபதமிட்டே சிகை அவிழ்த்த கதையினைக் கூறி நினைவூட்டி கேசவன் முன்னே நிற்கின்றாள்!

-காட்சி தொடக்கம்-

**திரௌ:** சதியெனும் சாக்கடை உழல்கின்ற சண்டாளர் வாழும் சபையினுக்கே சனாதன சாரதி நீயின்று சமாதானத்தின் தூதுவனாக, ஏகுவதேனோ? இழி வன்றோ? பாஞ்சால நாட்டுப் புரோகிதரங்கு தூதுவனாகப் போனதனால் பெற்ற நன்மையும் புரியாதோ?

**கிருஷ்:** அமைதி நிலவ வழி கிடைத்தால், அறத்தினைக் காக்க துணை நிற்பேன்! சுமையாயதனைக் கருதாமல் இழிவுகளனைத்தையும் ஏற்றிடுவேன். பாண்டவர் மானம் பறித்தபின்பே அமைதி வழியும் திறப்பதனை அவனியில் ஏற்றிட நான் துணியேன்!

**திரௌ:** அவிழ்ந்த என் கூந்தல் அலைபோல நிலையில்லாமல் அலைமோதும் நிலையினில் அமைதி தோன்றிடுமா? சரணாகதியினில் சமாதானத்தை காண்பது தானுன் நினைவாமோ? கவுரவ குலத்தவர் நடுவினிலே, குலத்தின் மூத்தவர் பிதாமகரும் மன்னவர் திருதராட்டிரரும் அமர்ந்தே இருந்த போதினிலே அபலை என்னை அவமதித்த அயோக்கியர் தம்மை அழிக்காமல், அமைதியை ஆங்கே நிலைநாட்ட ஆவலுனக்கும் எழுந்ததுவோ?

**கிருஷ்:** எல்லாம் நானே அறிந்தவன் தான்! இருப்பினும் சமாதானம் நிலைபெறவே ஈடும் இணையும் வேறில்லை!

**திரௌ:** சமாதானத் தூது சென்றிடும் உன்னிடம் சாற்றுமோர் உண்மை தானுண்டு! என் சிகையினைத் தொட்டே இழுத்திட்ட பாவி துச்சாதனன் தன் கையினையும் தன் தொடையினில் அமரச் சொன்னவனாம் துரியோதனனது தொடையினையும் உடைத்தெறியாமல் என் கணவர் தாம் எடுத்த சபதம் முடியாமல், என்றும் அமைதி நிலையாதே இதுவே எந்தன் முடிவாகும்! (அழுகிறாள்)

**கிருஷ்:** அழுவதற்காகவே அவதரித்தவள் என்ற நிலையினில் நீயில்லை என்ற உண்மை நீ உணர்வாய்! ஏக்கம் தவிர்த்து அமைதி பெறு!

<u>பின்னணிப் பாடல்:</u>

**பாஞ்சாலியேயுன் பார்வையில் படிந்துள்ள**
**ஏக்கம்புரிந்தவனுன் அண்ணனாம்கண்ணன்**
**வாஞ்சையுடன் நாம் வாழும் வாழ்வினில்**
**துக்கமும் துன்பமும் துவண்டே வருமாம்!**
**நன்மையும் தீமையும் நானில மெங்கணும்**
**நலிந்தே கிடப்பதை அறிவாய் நீ யுன்**
**கண்களில் கசிந்திடும் கண்ணீர் துடைக்கும்**
**காலம் கனிந்திடும் கவலை தவிர்!**

-காட்சி மாற்றம்-

**அஸ்தினாபுரி-பீஷ்மரும் துரோணரும்.**

**பீஷ்ம:** ஆச்சாரியாரே! போர்க்களம் நோக்கி எம் நாடு போவதை தவிர்த்திட எம்மிடம் தக்க வலிவெதும் உள்ளதா சொல்லுவீர்! எம்மைச் சுற்றிலுமுள்ளவரெல்லாம் போர்முனைக் கேகவே தயாராகின்றனர். விதுர நந்நாட்டினில் நடந்ததைப் போன்றதோர் போர்தனைப் போலினி நடந்திட முடியா! நாசமே முழுமையாய் நடந்து நம் நாடு நீசமுற்றழிவதை நீரோ நானோ நிறுத்திட முடியுமா? எம்போன்றோரின் இதயங்கள் சிதைந்து சுக்குநூறாகவே உடைவது திண்ணம்! துரியோதனனதும் பீமசேனனின் கைகளிலிலங்கும் கதாயுதங் களும் மோதுவதால் எம் அஸ்தினாபுரத்தின் அழிவது நிகழ்வதை தடுத்திட எமது வலுவினை இழந்த கைகளால் முடியுமா?

**துரோ:** நாட்டினைக் காத்திட நம்முயிர்தானும் ஈந்திடத் தயாராய் இருக்கின்றோம் நாம். போரினைத் தவிர்த்திடும் மார்க்கம் எதனையும் மாயவன் கிருஷ்ணன் முன் வைக்கலாகுமே!

-காட்சி மாற்றம்-

**கிருஷ்ணரிடம் சிகண்டி வருவதை காவலன் கூறுகிறான். அழைத்துவரும்படி கிருஷ்ணனும் கூறுகிறார்.**

**சிகண்டி:** வணக்கம் பெரியீர்! அதிகநேரம் நானெடுத்திடேன்! நாலு வார்த்தை பேசிட வந்தேன்!

**கிருஷ்:** முகமன் கூறி தாமதிக்காமல் முக்கிய சம்பவம் கூறுக மகனே!

**சிக:** பாண்டவருக்கும் கவுரவருக்கும் போர் முனை புகுதல் சாத்தியமுண்டா? இதுவே எந்தன் வினாவதுவாகும்!

**கிருஷ்:** அமைதித் தூதனாய் ஏகிடும் எனக்கு நயமாய் விடைதனை தந்திட முடியா வினாவிதுவாகும்!

**சிக:** அமைதி என்னும் களிம்பினைத் தடவி அழிவிலா அவதியை அளித்திடும் புண்ணை அகற்றிட முடியுமா அரும்பெரியோரே?

**கிருஷ்:** எத்தகை அவதியை எடுத்துரைக்கின்றீர்? பாஞ்சாலியானவள் துயரினைத் துடைப்பது பாண்டவர் தமக்குறு பாரிய கடமை! உன்னுடை சொந்தக் காரியமானால் பாண்டவர் நிலையினில் சேர்ப்பது தவறாம். உனக்குறு தீங்கினைத் தீர்த்திட நீவிர் தனித்தொருபோரைத் தொடக்கிடலாமே! அல்லாதுபோனால் காலம் வரும்வரை காத்திருந்திடலாம்!

**சிக:** காத்திருக்கின்றேன் தேவகி நந்தனா! கங்காபுத்திரர் பீஷ்மர் தன்னை என்றும் நினைவுடன் காத்திருப்பதாய் அவரிடம் கூறுக. அதுவே எந்தன் வேண்டுகோளாகும்.

<u>பின்னணிப்பாடல்:</u>

**எவருக்கெவ்வினை எதிர்வருமென்பதை**
**எவரறிவாரோ யார் புரிவாரோ**
**நாளை நடப்பவை நாமறியாததால்**
**வேளை வரும்வரை வருந்தாதிருப்போம்!**

□□□

பீஷ்மர் வெளிப்புறக் காட்சிகளை இரசித்துக்



கொண்டிருக்கும்போது விதுரர் வருகிறார்.

**விது:** அன்புள்ள தாத்தா வணக்கம்! கடுமையான பனியிலும் குளிரிலும் தரித்து நிற்பது தங்களுக்கின்று ஏற்புடைத்தாகுமோ?

**பீஷ்:** விரும்பும்போதே சாவது தன்னை வாவென்றழைக்கும் வரத்தினைப் பெற்றேன். குளிரோ சூடோ இவ்வுடல் தன்னை என்ன செய்திடுமோ! நானன்றேற்றதோர் சபதம் தன்னால் துரியோதனனையே இணைந்து நிற்கின்ற அந்தி வழியினை அணைத்து நிற்கின்றேன். அரசியல் துறையில் அனுபவத்தால் நீர் எனக்களிக்கும் அறிவுரை யாதோ?

**விது:** திறந்துவிட்டுள்ள சாளரத்துக்கும் பரந்துபட்டுள்ள அரசியலுக்கும் நெருக்கமோ உறவோ நிலையேதுமில்லை. ஆகவே கதவினை மூடுங்கள் தாத்தா! தங்களின் ஆத்மாக்கிடீணையில்லை! தங்களை என்றும் பாரதம் மறந்திடா! தங்கள் தாளினைப் பணிவது என்கடன். தங்கள் பாதக் கமலத்தடியில் குந்தியிருப் பதே தனிப்பெருமேன்மையை எனக்கது அளிக்கும்.

**பீஷ்:** என்ன காரியம் செய்கிறாய் மகனே? இன்றுள்ள சூழ்நிலை உன்னையும் வாட்டுதல் உண்மையை அறிகிறேன்! இருப்பினும் உன் மனம் என்றும் மகிழ்ந்திட ஆசியை அளிக்கிறேன்.

**விது:** வாழ்த்துக்களெதுவும் எனக்கே வேண்டாம். அஸ்தினாபுரத்தினை வாழ்த்திவிடுங்கள். எம்போன்றவர்கள் மறைந்ததன் பின்னரும் எம் தாய்நாடு துலங்கிடவேண்டும் என்றே தங்கள் வாழ்த்தினை அருளுக!

**பீஷ்:** ஏதோவொன்றினை மறைபொருளாக எடுத்துரைக்கின்றாய்! என்ன காரணம் என்பதைக் கூறுக!

**விது:** அமைதி நிலவிட வேண்டும் என்பதால் கிருஷ்ணன் தூது வருகின்றாராம்!

**பீஷ்:** கண்ணனின் எண்ணம் மறுப்பதற்கிங்கு கருத்துடையோரால் முடியாதுண்மை! எம்போன்றாரின் எண்ணம் உணர்ந்து போர்முனைக்கேக அனுமதி கோரியே இங்கு வருகிறான் கண்ணன் என்பதே என்னுடை எண்ணமும். அமைதிக்கான அருவழி எதனையும் அறிவுடன் தேர்ந்திடமாட்டான் அந்தத் துரியோதனன் எனும் கொடியவன் என்பதை கிருஷ்ணன் நன்றாய் உணர்ந்திருப்பான் தான்!

**விது:** மன்னவனுக்கே இவ்வருமுண்மையை எடுத்துரைத்திடுவதே தங்களின் கடனாம்!

**பீஷ்:** தன்னுடை சொந்த அபிலாசைகளின் அடிமையேயான அரசனுக்கினிமேல் உண்மை நிலையினை உணர்த்துதலரிது!

**விது:** தாங்கள் ஏற்றதோர் சபதத்தினாலே அஸ்தினாபுரத்தினைக் காத்திடல் கடமை. அமைதி வழியினை கிருஷ்ணன் காட்டி அவ்வழியதனை ஏற்று நடந்திட மன்னவர் தம்மிடம் கூறிப்பாருங்கள். நாளை நம்நாடு நலிந்து போனபின் துரியோதனனை எவரும் தூற்றார். மன்னவர் கடமை மாறியதாலே மதிப்பும் மாண்பும் அழிந்ததே என்றுதான் மக்கள் தூற்றுவர்!

-காட்சி மாற்றம்-

**திருதராட்டிரர் அரண்மனை- பீஷ்மர் முதல் சகலரும் கிருஷ்ணன் வரவு குறித்து உரையாடுகின்றனர்.**

**பீஷ்:** தூதுவனாக வருகின்ற கண்ணன் சாமான்யமான மானிடனல்ல! சனாதன தர்மச் சாயலும் அவனே! சுயநல வேட்கையில், சூது நினைத்திடில் நய வழி எதுவும் நலன்தரமாட்டா. துரியோதனனின் தந்தை தன்னையோ; பாண்டவரைவரின் பெரிய தந்தையையோ பார்த்திட கிருஷ்ணன் வரவில்லை அறிவாய்! யுதிஷ்டிர மன்னவன் தூதுவனாகவே திருதராட்டிர மன்னரைக்காண கண்ணனவனும் இங்கு வருகிறான். அமைதியே அவனது குறிக்கோளாகும். மகனே! அவன் வழி அமைதி நிறைந்ததோர் அறவழியாகும்!

**திருத:** மகனே என்று அன்புடன் அழைத்தீர்! அதுவே எனக்குப் பெரும் பேறன்றோ!

**பீஷ்:** பேராசையென்னும் பெருமலை மீதினில் பவனி வந்ததால் என்னுடை அன்பால் ஏறி அணைத்திடும் எண்ணம் சிதைந்தது. துரியோதனனின் மீது வைத்துள்ள பாசம் தணித்து அஸ்தினாபுரத்தின் அரியணை தன்னையும் பாரத வம்சப் பெருமையும் சேர்த்து நிலைபெற்றிலங்க நேர்வழி தேர்வது மகனே உன் கடன் மறந்துவிடாதே!

**திருத:** மன்னித்தருள வேண்டுகிறேன் நான்! கண்ணனுக்கான விண்ணதிர் புகழ் சூழ் வரவேற்பளிக்க விளைகின்றேன் யான்! மைந்தர்களனைவரும் இந்நகரிருந்து இருபதாம் கல்லில் கண்ணனைக் காண்பர். ஆடலும் பாடலும் அருங்கலை சூழ் பெரு ஆர்ப்பாட்டங்களும் வரவேற்பளிக்க மாளிகை முன்றிலில் துரியோதனனவன் வரறேற்றிடுவான். துச்சாதனனின் மாளிகையதுவே உச்ச அழகுடன் அமைந்திருப்பதனால் அங்கே கண்ணன் வாசம் செய்வான். எண்ணற்ற பரிசில்கள் கண்ணனுக்களிக்க ஏற்பாடு செய்கிறேன். பூசனை செய்தவன் தாளினைப் பணிந்து ஆராதிக்க ஆவன செய்கிறேன்.

**விது:** சம்பிரதாயச் சடங்குகளெல்லாம் நம்பி நாயகன் வேண்டுவதல்லவே! ஆடம்பரத்தையோ அளவுக்கு மீறிய போலிலீலையோ அவனுக்குதவா!

**சகுனி:** அன்பு மேலிட்டால் அரசன் அளித்திடும் அத்தனை பெருமையும் போலி என்று நீர் பகர்வதும் முறையோ?

**விது:** அரசருக்குரிய அறிவுரை பகர்வதே அமைச்சருக்கான அரும் பெரும் கடமை. பரிசையும் புகழையும், பெருந்தனச் சேர்க்கையும் பொருட்டாய் மதிப்பவன் கண்ணன் அல்லன். எத்தனை பொருளையும் பார்த்தனுக்கீடாய் மதிப்பிடமாட்டான். நாட்டின் நலனில் நான் கொண்ட அக்கறை காட்டும் வழியே உண்மையின் காட்சியாம். அவன் வழி அமைதியே என்பதை அறிந்து அவன் வழி செல்வதே அரசர்க்குரிய அறவழியாகும்.

**துரி:** சித்தப்பா கூற்றே சரியெனத் தோணுது. பரிசில்கள் தருவதால் பயந்துவிட்டோமென கண்ணனும் கருதுவான். போரே வழியெனத் தெரிந்துவிட்டபின் வேறு வழிகளைத் தேர்வதைத் தவிர்ப்போம்.

**பீஷ்:** ஆடம்பரத்துடன் அவன் வரவேற்பதால் அவனுடை எண்ணம் சிதைந்துவிடாது. தர்மம் தன்னையே அவன் சார்ந்திருப்பான். அர்ச்சுனன் தன்னை கண்ணன் நம்புதல் தர்மத்தின் பாலவன் நம்பிக்கை கொண்டதால்!

**துரி:** பாண்டவருயிருடனிருப்பதனால் நான் அரியணை ஏறுதல் ஆகாதென்றால் வாசுதேவனை சிறையிலடைப்பேன்!

**திருத:** துடுக்குத்தனமாய் அடுக்காத வார்த்தையை எடுத்து வீசாதே! அமைதி காக்கவே அவன் வருகின்றான் என்பதை யாவது உற்றுணர்ந்திடுவாய்!

**பீஷ்:** அடக்கமேயில்லா ஆணவ வார்த்தைகள், அழிவினுக்காகவே அருவழிகாட்டும். அரசே! துட்டத்தனமுடன் துடிக்குமுன் மகனின் தகாத வார்த்தைகள் கேட்காதிருப்பதே மேலாமெனவே எண்ணத் துணிந்தேன்! தூதுவனாக வருகின்ற கண்ணனை தூஷிக்கும் தன்மையில் துரியனும் நடந்திடில்; அவனை இழந்து நீ அழுவதற்கான கண்ணீர்தானும் கிடைப்பது அரிதாம்.

-காட்சி மாற்றம்-

**பீஷ்மரின் அரண்மனை- கர்ணன் வருகிறான்.**

**பீஷ்:** அங்கத்துக்கதிபனா - கர்ணனனா இங்கெனைப் பார்த்திட வருவது..? வாரும்..... வந்து இருக்கையில் அமரும்!

**கர்:** தங்களை நாடி வந்திருப்பதனால் நிச்சயமாக திகைத்திருப்பீர்கள்!

**பீஷ்:** மலைப்பினையூட்டும் மாபெரும் சம்பவம் பலப்பல கண்டு பயிற்றப்பட்டவன் நான்! அஸ்தினாபுரத்தின் அரண்மனை நாடி மருமகளாக வந்தவள் தனையே துகிலினை உரியக் கட்டளையிட்டதை விடவா பெரிய சம்பவம் நடந்திடும்! வந்த காரியம் யாதெனக் கூறுக!

**கர்:** பிதாமகரான பீஷ்மரை இங்கு காண்பதற்காக நான் வந்தவனல்ல. என்னுயர் குருவாம் பரசுராமரின் பழம்பெரும் மாணவர் பீஷ்மரைக் காணவே வந்துள்ளேன் அண்ணா! நாமிருவருமே குரு ஒருவரினது அரும் பெரும் மாணவராக விருப்பதால் அண்ணனும் தம்பியுமாக விருப்பது ஏற்புடைத்தன்றோ?

**பீஷ்:** உண்மையும் அதுவே ஏற்கிறேன் நன்றே!

**கர்:** தேர்ச் சாரதியின் ஓர் மகனாக ஏற்றுக்கொள்ள என்னால் முடியாதென்பதே எந்தன் பிரச்சனையாகும்!

**பீஷ்:** உன் செயற்பாட்டினால் சத்திரியன் நீ என்பதை உணர்க..!

**கர்:** பாரத நாட்டில் பல போர் முனைகளில் பேர் பெறுவெற்றிகள் கண்டவன் தான்நான்; ஆனால் அர்ச்சுனன் தன்னிடம் தோல்வியே காண்கிறேன்! காரணம் யாதெனக் கூறிட முடியுமா?

**பீஷ்:** சத்திரிய தர்மத்தைத் தொலைத்துவிட்டவன் நீ! அதர்மத்தின் அறிகுறியாக விளங்கிடும் துரியோதனன்பால் சார்ந்து நிற்பதால், தர்மத்தைக் காக்கவே போர் முனை புகுந்திடும் பார்த்தனை வெல்வது சாத்தியமில்லை. என்போன்றாரின் நிலையும் இதுவே என்பதை உணர்வாய்.

**கர்:** என்னுடை வினாவுக்குரிய விடையினை அளித்துவிட்டீர்கள். தங்களைப் போன்றே துரியோதனனைத் தனித்து விட்டேக துணியவே மாட்டேன்! இதுவே உறுதி!

-காட்சி மாற்றம்-

**அஸ்தினாபுரி அரசவை- தூதுவனாக வரும் கிருஷ்ணர் வரவேற்கப்படுகிறார். காவலன் வந்து வரவு கூறியதும் விதுரர் சென்று அழைத்து வருகிறார்.**

**திருத:** அமைதிபேணவே எமை நாடிவந்த வாசுதேவ கிருஷ்ணனே உம்மை வருக வருகவெனவே கூறி வாழ்த்தி வரவேற்று நிற்கின்றோம் நாம்! எமதன்பின் சின்னமதாக இதனை ஏற்றருள் புரிந்திட வேண்டுகிறோமே!

**காவலனொருவன் வெள்ளைப் பசு ஒன்றினைக் கொண்டு வருகிறான். அதற்கு மரியாதை செலுத்தி ஏற்றுக்கொள்கிறார் கிருஷ்ணர்.**

**கிருஷ்:** மன்னவரே! இப்பரிசினைத் தந்தெனை மகிழவைத்திட்டீர்! சமாதானத்துக்கான மார்க்கம் தவிர்த்து மாற்றுப் பொருளேதும் என்னிடம் இல்லை!

**பீஷ்ம:** கிருஷ்ணன் சற்று ஓய்வெடுக்கட்டும்! துச்சாதனா உன் மாளிகை தன்னில் கிருஷ்ணன் தங்கிட அழைத்துச் சென்றிடு!

**துரி:** இல்லை தந்தையே! என்னுடன் கண்ணன் உண்டபின் தம்பியின் இல்லமேகட்டுமே!

**கிருஷ்:** விருந்தோம்பிடுபவர், நண்பரினில்லம் இவற்றினை விடுத்து வேறோரிடத்தில் விருந்துண்பதுவே விதிகளுக்கொவ்வா! என்னரும் அத்தையாம் குந்தி நல்லாளுறை விதுரர் மனைதனில் விருந்து கொள்கிறேன் யான்!

**விதுரருடன் கிருஷ்ணன் செல்கிறார்.**

-காட்சி மாற்றம்-

**குந்தியிடம் கிருஷ்ணர் செல்கிறார்.**

**குந்தி:** கண்ணா என் மகனே! (அழுகிறார்) கண்ணீர் கடலினை இதுகாலவரை நான் தடைபோட்டடைத்தேன்!

**கிருஷ்:** நல்லது அத்தை; தடையினைத் தாண்டி- பழைய கண்ணீரெல்லாம் பெருக்கெடுத் தோடினால் புதிய கண்ணீர் தேங்கிடவசதியே!

**குந்தி:** உன் கூற்றெனக்குப் புரியவில்லையே!

**கிருஷ்:** துயரம் வேண்டாம்! உன் மக்கள் ஐவரும் நீடூழி வாழ்வர்!

**குந்தி:** அடுத்த அணியினிலிருப்பவர் தாமும் என் மக்கள் தானே?

**கிருஷ்:** அரக்கு மாளிகை, சதுரங்க ஆட்டம், பாஞ்சாலியாமவள் மானமிழத்தல்; பதின்மூன்றாண்டுகள் பாண்டவர் பட்ட பாட்டினுக்கெல்லாம் துரியோதனனும் துச்சாதனனுமே தோன்றாக் காரணம் என்பதை அறிவீர்! அறத்தின் வழியதை மறந்தவரவரெலாம் ஆணவத்தால் அழிவது திண்ணம். அத்தையின் மைந்தன் என்பதால் மட்டுமே அர்ச்சுனன் சார்பினை நான் ஏற்கவில்லை. அறத்தினைக் காக்கவே அர்ச்சுனன் துணிந்ததால் அவனருகேகினேன்! என்னுடன் தாங்கள் வந்தால் தங்கள் பிள்ளைகளுடனே இணையலாமல்லவா?

**குந்தி:** இன்றுள்ள நிலையினில் இங்கிருப்பதுவே எந்தனுக்குகந்தது. என் பிள்ளைகளுக்கிவர் இழைத்திட்ட அநீதியை எடுத்தியம்புவதாய் என் நிலை உணர்த்தும். கண்ணா என்னிடம் உண்மையைக் கூறிடு! யுத்தமொன்று நிச்சயம்தானா?

**கிருஷ்:** தூதுவனாகவே வந்த என்னிடம் இந்த வினாவுக் குரிய விடையினை அறிந்திட முடியுமா? அஸ்தினாபுரத்தின் மன்னவர்தானிவ் விடையினைத் தருவார்! உண்மையில் உரிய தீர்மானமெடுப்பது மன்னவரல்லவே! மன்னவன் மகனே விடையினைக் கூறிடும் வல்லமை பெற்றவன்-என்பதை அறிக.

-காட்சி மாற்றம்-

**துரியோதனன், சகுனி, கர்ணன் இருக்குமிடத்திற்கு கிருஷ்ணர் வருகிறார்.**

**சகுனி:** கிருஷ்ணன் கூறும் செய்தி யாதென, அறிந்திடும் தருணம் வரும்வரை பொறுமை கடைப்பிடித்திருப்பதே நம்மரும் கடமை!

**கிருஷ்ணனர் வருகிறார்.**

**துரி:** வருக வருக வாசுதேவரே!

**சகுனி:** மதுசூதனரே வணங்குகின்றோம் நாம். ஆசனந் தன்னில் அமர்ந்திட வேண்டும்!

**துரி:** விருந்துண்பதற்காய் அழைப்பினை விடுத்தேன்! மறுத்து விட்டமை என்றென்றும் வாட்டும்.

**கிருஷ்:** அமைதித் தூதனாய் வந்துள்ளவன் யான். உடன்பாடெதுவும் ஏற்படாதிருக்கும் வேளையில் உம்மிடம் விருந்துண்பது தான் விரும்பிடா நிகழ்வே! பேச்சுவார்த்தை வெற்றியீட்டியதும் விருந்துண்பதிலோர் வேற்றுமை இல்லை.

**சகுனி:** பேச்சுவார்த்தை வெற்றி பெறுவதும்- விருந்துபசார நடைமுறையதும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றுள்ளதா?

**கர்:** உமக்கும் எமக்கும் பிரச்சினை இல்லையே! எதற்காகவோ நீர் நண்பனின் வேண்டுகோள் ஏற்றிட மறுத்தீர்?

**கிருஷ்:** உண்மையில் அன்பு உள்ளவரிடமோ பசியின் வாட்டம் வதைத்திடும் போதோ உண்ணுதற்கான எண்ணமுண்டாகும்! துரியோதனனோ என்னிடம் அன்பு கொண்டவனல்லவே! அத்துடன் பசியால் நான் வாடவில்லையே! பாண்டவரிடமே அன்பு பூண்டவன் யான்! அவருடை பகைவர்கள் என்பகையினரே! தர்மமும் நேர்மையும் தழைத்திடும் இடத்தில்தான் நான் தரித்திருப்பேன். பாண்டவர் தூதுவனாக மட்டுமே நான் வரவில்லை என்பதை அறிக! தர்ம தேவதையின் தூதுவனாகவும் நல்லனவற்றின் தூதனாகவுமே நானிங்கு வந்துளேன். துரியோதனனே! உன்னுடனமர்ந்து உணவு கொண்டால் நான் தர்மத்தை ஒதுக்கிய பாதகனாகுவேன்! இங்குள்ள நீவிர் ஒன்றினை உணர்க! அமைதியின் வழியே ஆக்கம் தருவது; அதனைத் தவிர்த்தால் அழிவு நிச்சயம்!

**துரி:** உணவு வேளை வந்துவிட்டது. மீண்டுமொருமுறை உம்மை அழைக்கிறேன். வருகின்றீரா?

**கிரு:** எனது சமாதானத் திட்டமதனை முழுமனதாக ஏற்காத உன்னிடம் உணவு கொள்ளவே நான் துணிவேனா? மாட்டேன்! அதனால் விதுரர் மகானின் இல்லமேகிறேன்!

**துரி:** இல்லை...!

**கர்:** துரியோதனா...!

**துரி:** யாரென்று தன்னை நினைத்துவிட்டானிந்த இடையர் குலத்தவன்! அரசமாளிகை விருந்துண்ண அழைத்தேன், ஆயர்பாடியில் வளர்ந்த இப்பயலினை! தாதியின் மைந்தனின் தயவினை நாடியே தாவியே சென்றான் தரங்கெட்டவன் தான்! நாளை நம் அவையினில் நீசத்தனமதாய் ஏதும் உளறினால் நிச்சயமாகவே சிறையினில் தள்ளுவேன்!

<u>பின்னணிப் பாடல்:</u>

**தீயவழியினைத் தேடி அணைப்பவர்**
**தூய நிலைதனைத் துறந்தழிந்திடுவர்**
**கவுரவ குலத்தவர் காணும் வழியெலாம்**
**காரிருள் சூழ்வதை காணும் விழிகளே!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்


அருள் ஜுவலர்ஸ்



வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


ஆசா பாசங்கள் மனிதருக்கு [illegible] அவையெதுவுமே தமக்கில்லை என்று சொல்லிக்கொண்டு அதன் மூலமே சமூகத்தில் தம்மை வித்தியாசமாக காட்டி பிரபலம் அடைகிறார்கள் சிலர்.

அவ்வாறு தன்னை ஒரு வித்தியாச மனிதராக காட்டிக்கொண்டவர்தான் பிரேமானந்தா.

காவியுடை, குங்குமப் பொட்டு, காந்தப் பார்வை, கைவசம்சில சித்து விளையாட்டுக்கள்.




Kala



JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

433686


எதையெல்லாம் அனுபவிக்கக் கூடாதென்று கூறியிருந்தாரோ அதையெல்லாம் போலித்துறவி அனுபவித்தார் என்பதால் நமக்கொன்றும் ஆச்சரியமில்லை. ஆனால் துறவி என்று சொல்லிக்கொண்டு மறுபுறம் எதையும் துறக்காமல் [illegible] ஒரு பெண் தேடி அந்த சுகங்களையும் அனுபவித்தாரே அது எத்தனை ஏமாற்று.

[illegible] போலிச்சாமியின் அணைப்பில் இருப்பவர் போலிச் சாமியாரினி திவ்யா! 'மாதாஜி' என்று அழைக்கப்பட்டவர். திவ்யா சாமியாரை மட்டுமல்ல [illegible] வந்த பெரும் புள்ளிகளையும் ஆசைப் பொறிக்குள் வீழ்த்தியவர் என்பது இப்போது தெரிய வருகிறது.

நாம் சொல்வது இதுதான். தனக்குக் கிடைப்பதை அனுபவி. அடுத்தவரை ஏமாற்றி பிழைக்காதே. சுகம் தேவையா? பெற்றுக்கொள்! அதற்காக காவியைக் கலசமாக்காதே! சகல போலிகளுக்கும் இது பொருந்தும்.

1994 இல் இந்தியாவுக்கு புகழ் தேடிக் கொடுத்த இரு அழகிகள் சுஷ்மிதா சென், ஐஸ்வர்யா ராய் என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கும்.

# கனவு பலித்ததா?



விளம்பரப் படம் ஒன்றுக்காக ஐஸ்வர்யா ராய் கொடுத்த கிறங்கடிக்கும் 'போஸ்' இது.

விளம்பர படங்களுக்காக கெமரா முன் நின்றபோது உலகின் கண்களே தன்னை ஒரு நாள் ஆச்சரியமாய் பார்க்க வேண்டும் என்று ஐஸ்வர்யா கனவு கண்டிருக்கக் கூடும்.

'94 விடைபெற முன்னர் ஐஸ்வர்யாவின் கனவு கைப்பட்டச் செய்து விட்டுத்தான் சென்றது.

# அழகி 94

# மெய் மறந்த சாமியார்



சில்வஸ்டர் ஸ்டலோன் ஹொலிவுட்டில் [illegible] வயது வாங்கும் நடிகர். [illegible] வருடத்தில் ஒரு படம் நடித்தால் வாழ்க்கைக்கே [illegible] போதுமான வருமானத்தைப் பணப் பெட்டியில் [illegible]

வாரமலர் தினமுரசு

# அந்தரத்தில் ஒரு சாகசம்



அந்தரத்தில் சாகசம் செய்யும் வித்தை 'ஜிம்னாஸ்டிக்' கலைஞர்களுக்கு கைவந்த கலை.

ஒலிம்பிக் போட்டிகளில் பார்வையாளர் களை விழி விரியவைப்பவை 'ஜிம்னாஸ்டிக்' போட்டிகள். தாம் உடலை நினைத்தபடி வெல்லாம் வளைத்தும், நெளித்தும், அந்தரத்தில் உயர்த்தியும் சாகசம் செய்ய அந்தக் கலைஞர்கள் செய்யும் முயற்சி, கடும் உழைப்பு தெரிவதில்லை.

நமக்குத் [illegible] வளையாதது [illegible] வளையாது. அது [illegible] ஜிம்னாஸ்டிக் [illegible] பயிற்சியாளர்களுக்கு நம்பிக்கையாக தெரிந்த விடயம். சிறுவயதிலேயே ஜிம்னாஸ்டிக் கலைஞர்களுக்கு பயிற்சி ஆரம்பமாகிவிடும். பயிற்சி பெறுவார்கள் [illegible] தேர்ச்சி [illegible] சாகசங்களை நம் கண்முன்னே நம்ப முடியாமல் பார்க்கக்கூடிய சாதனைகளை படைக்கிறார்கள்.

# குறி எங்கே?

பத்திரப்பதிந்தனாக [illegible] நடிகர்கள் [illegible] 5 படம் [illegible] ஹொலிவுட் [illegible] வெற்றிகளை [illegible] பாத்திரம் [illegible] படத்திற்கு [illegible] செய்தால் [illegible] ஒரு வருடத்திற்கு எத்தனை படம் [illegible] இல்லை [illegible] வருவதைக் குறிக்கும் வெற்றிப் படம் தான் குறி. [illegible] 'டாக்குவா' படத்தில் [illegible] தோன்றும் காட்சிதான் படத்தில் இருக்கிறது.